Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற்

சலவை பவுடர்

பாவித்த வெற்றுறைகளுக்கு
விசேஷ பரிசுகள் கொடுக்கப்படும்

சேகரித்துக் கொடுத்து
பரிசுகளைப் பெறுங்கள்

மில்க்வைற் சோப்

தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | சாதாரண | ஆடி 16 | ஜமா. அவ் 27 | (1-8-70) | சனிக்கிழமை | இதழ் — 171

# மாவிட்டபுரத்தில் மீண்டும் பரபரப்பு; பூட்டியபடி பூசை!

## தேர் மறைக்கப்பட்டிருந்த கிடுகுகளுக்குத் தீவைப்பு

யாழ்ப்பாணம், சனி

**மாவிட்டபுரம் ஆலயத்தில் சென்ற சில தினங்களாக நிலவிய அமைதி நேற்று நண்பகலுடன் நீங்கி பரபரப்பான நிலைமைஏற்பட்டது.**

நேற்று நண்பகலுக்குச் சிறிது நேரத்தின் பின்னர் ஆலயத்தின் கிழக்குவாசலின் முன்னே ஓலைகளால் வேயப்பட்டு வைக்கப்பட்டிருந்த பஞ்ச ரதங்களில் இரண்டு திடீரெனத் தீப்பற்றத்தொடங்கியது. ஒரு தேரின்மீது வேயப்பட்டிருந்த ஓலைக் கிடுகுகள் எரிந்து சாம்பராகி மற்றத்தேரின் கிடுகுகள் மீதுநெருப்புப்பற்றத் தொடங்கியதும் பொலிசாரும் பொதுமக்களும் மற்றும் பலரும் அதை அணைத்துவிட்டனர்

இவ்வருட மகோற்சவம் கொடியேறறத் திருவிழாவுடன் ஆரம்பமாக இருந்த சமயத்தில் சென்ற வருடங்களில் எழுந்த ஆலயப்பிரவேசப்பிரச்னை இம்முறையும் தலைதூக்குவதாக இருந்தது. இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மனுவைத் தொடர்ந்து ஹரிஜனர்கள் ஆலயத்தின் இரண்டாவது வீதிக்குள் செல்வதை ஆலயப்பிரதமகுருவோ, ஆலயத்திருவிழாக்கால நிர்வாகியோ, அவர்களது ஏஜன்டுகளோ, பணியாட்களோ தடைசெய்யக் கூடாது என்று மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடைஉத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து மாவை ஆலயதில்கொடியேற்றத்திருவிழாவன்று பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆலயத்தின் இரண்டாம் வீதிக்குச் செல்லும் கதவுகள் மூடப்படாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத்தொடர்ந்து மூலஸ்தானக்கதவுகள் மூடப்பட்டன. பூஜைகள் நிறுத்தப்பட்டன. ஹரிஜனர்கள் பலர் ஆலயத்தின் இரண்டாவது வீதிக்குள் சென்று வணங்கினர்.

கோயில் மூலஸ்தானக் கதவுகள் 21 தினங்கள் வரை மூடப்பட்டிருந்தன. பின்னர் இரண்டாம் வீதிவாசலிலிருந்தும், முன்வாசலிலிருந்தும் பொலிசார் வாபஸ் பெறப்பட்டனர். பொலிசார் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டதும் ஆலயத்தில் பிராயச்சித்தம் நடைபெற்றது. ஆலயக் கிழக்குவாசல் முன்னுள்ள இரும்புக்கதவுகள் பூட்டப்பட்டு உள்ளே பூஜையும் அபிஷேகமும் நடைபெற்றுவதன. ஆடி அமாவாசைத் தினமான இன்று காலை வழமைபோல் மாவை ஆலயத்திலிருந்து கந்தசாமியார் ஆடிஅமாவாசைத் தீர்த்தத்துக்காக கீரிமலைக்குச் செல்வார் என்று கோயில் ஆதீனகர்த்தாதெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நேற்றுக்காலை ஆலயவாசலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த ஹரிஜனர்கள் பலர் ஆலயவாசலில் வந்து திரண்டனர். ஆலயத்தின் முன் உள்ளேயுள்ள கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக இருந்துவந்த துலாக் கயிறும் வாளியும் அகற்றப்பட்டிருந்தன. ஹரிஜனர்கள் வாளியும் புதுக்கயிறும் கொண்டுவந்து தண்ணீர் எடுத்தனர். ஹரிஜனர்மட்டுமல்ல மற்றும் பலரும் பூட்டப்பட்டிருந்த இரும்புக்கதவுகளுக்கு வெளியே நின்றபடியே 'அரோகரா' கோஷம் எழுப்பி சுவாமிதரிசனம் செய்தனர். ஆதீனகர்த்தாவின் வீட்டுவாசல் வழியாகச் சிலர் ஆலயத்துள் சென்று வணங்கியதாகவும் கூறப்பட்டது.

கோவிலின் கிழக்குவாசலிலுள்ள இரும்புக் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் கோயிலினுள் அபிஷேகமும் பூசையும் நேற்றுக்காலையிலும் தொடர்ந்து நடைபெற்றது.

### உத்தரவைமீறினர்

யாழ். மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவை ஆதீனகர்த்தாவும் ஆலயநிர்வாகியும் மீறிவிட்டதாகவும் வடபகுதிப் பொலிசார் அட்டர்ணி ஜெனரலுக்கு அறிவித்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள்தெரிவித்தன.

இன்று ஆடி அமாவாசைத் தீர்த்தத்தையிட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமியார் கீரிமலைக்கு எழுந்தருளவிருப்பது தெரிந்ததே.

### பொலிசார் தடியடி

நேற்றுக்காலையில் ஆலயப் பகுதியில்தீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்கத்தைச் சேர்ந்த ஹரிஜனர் காணப்பட்டதுமே ஆலயப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இச்சமயத்தில் ஆலயவீதிகளில் இரகசியப் பொலிசாரும் உத்தியோக உடையணிந்த பொலிசாரும் ரோந்து நடவடிக்கைகளிலும் கண்காணிப்பிலும் ஈடுபட்டனர்.

திடீரென்று ஆலயத்தின் முன் ஓலைக்கிடுகுகளால் வெய்யிலுக்கும் மழைக்கும் பாதுகாப்பாக மூடி வேயப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிந்த பஞ்சரதங்களில் ஒன்றின்மீது தீப்பிடித்து பற்ற ஆரம்பித்தது தீ மற்றொரு தேருக்கும் பரவியது. தீயை அணைப்பதில் பலரும் ஈடுபட்டனர். தேர் முட்டியடியில் நின்றோரையும் அங்கு திரண்டுவந்தோரையும் பொலிசார்தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர். தீயணைக்கப்பட்டது.

### பாதுகாப்புவேண்டும் என்கிறார் குருக்கள்

இச்சம்வத்தைத் தொடர்ந்து பொலிசாருக்கு மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள் ஒரு வாக்குமூலம் அளித்தார். தமக்கும் ஆலயத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் அவர் பொலிசாரைக் கேட்டுக்கொண்டாராம். இதனைத்தொடர்ந்து அவரது வீட்டுவாசலிலும் ஆலயத்திலும் இரகசியப் புபாலிசாரும் உடைதரித்த பொலிசாரும் காவலுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

வியாபாரிகளுக்கு முக்கிய அறிவித்தல்

வலிகாமம் வடக்குப் பகுதிக் காரியாதிகாரி பிரிவிலுள்ள ஐக்கிய பண்டசாலைகளையும், உத்தரவுபெற்ற அரிசி வியாபாரிகளையும் தவிர்ந்த ஏனைய மொத்த - சில்லறை வியாபாரிகள், தமக்குத் தேவையான அத்தியாவசிய பங்கீட்டுப் பொருள்களைவேறெந்த இடங்களிலும் வாங்க முடியாத நிலைமை ஏற்பட இருப்பதாலும், சமாசத்தில் மட்டுமே, வாங்கக் கூடிய வாய்ப்பு உண்டாக இருப்பதாலும், தங்கள் உத்தரவுப் பத்திரங்களை (லைசன்ஸ்) 15-8-70-க்குப் பிந்தாமல் சமாசத்தில் காண்பித்துப் பதிவித்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்கப்படுகின்றனர்.

கூட்டுறவு ச்சேவையிலுள்ள
க. இராமச்சந்திரன்,
நிர்வாகக் காரியதரிசி.
சுன்னாகம்,
28-7-70. 2388

## கப்பல் தேடும் முயற்சி தோல்வி; மாலுமிகள்எங்கே?

### இலங்கையிடம் உதவி கோருகிறார்கள்

சென்னை, ஜுலை. 31

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு வந்துகொண்டிருந்தபோது காணமற்போன சரக்குக் கப்பலைத் தேடும்வேலை கைவிடப்பட்டுள்ளது. 24 மணிநேரத்தில் 200 சதுரமைல் தூரம்தேடுதலில் ஈடுபட்டதமிழக அரசு கடற்படையினர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

கப்பலுக்குச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அதிலிருந்த 14 மாலுமிகளும் இலங்கைக் கரையை நீந்திச் சேர்ந்திருக்கலாம் என்றும் தமிழகஅரசு கருதுகிறது. கடந்த 21-ம் திகதி புறப்பட்ட கப்பல் வெங்காயத்துடன் கொழும்புக்கு வந்துகொண்டிருந்தபோதே காணமற்போனது.

மாலுமிகளைக் கண்டுபிடிக்கும் உதவிகளை தமிழகஅரசு இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

### பூகம்பம் 175 பேர் பலி

டெக்கிரான், ஜுலை, 31

வடக்கு ஈரானில் ஏற்பட்ட பூகம்பத்தினல் இதுவரை 175 பேர் மாண்டுள்ளனர். 450பேர் காயமடைந்துள்ளனர்.

வானிலை சீர்கேடு காரணமாக உதவிப்படையினர் சரியாகச் செயல்படமுடியாதிருக்கின்றனர். ஆயினும் உதவிப்படையினர் பூகம்பத்தினல் பாதிக்கப்பட்ட பாலங்கள். மலைப் பகுதிகள் ஆகியனவற்றினூடே முன்னேறிச்சென்றுகொண்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

### பிரதமர் ஏற்கவில்லை

காலி, வெள்ளி

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு காலி மாநகரசபை பொது வரவேற்பொன்று அளிக்கத் தீர்மானித்து அந்த வரவேற்பை ஏற்றுக்கொள்ளுமாறு பிரதமரை அழைத்திருந்தது.

இப்போது வரவேற்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருப்பதாகப் பிரதமர் காலி மாநகரசபைக்குத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கு

# பத்திரிகைகள் சஞ்சிகைகளின் இறக்குமதிக்குத் தடை

தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் பலவற்றைத் தடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

தென்னிந்தியாவிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகார சபை உறுப்பினர்களில்ஒருவரான ஜனுப் எச், எம். பி. முகைதீன். பிரதமரின் ஆணைப்படி. இந்த விபரங்களைத் தயாரித்திருக்கிறுர். அவரது அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதாம்.

இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் இறக்குமதிக்காக நமது நாட்டிலிருந்து மாதந்தோறும் 23 லட்சத்து 96 ஆயிரத்து 830 ரூபாய் இந்தியாவுக்குப் போகிறது. இலங்கையிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளோ, சஞ்சிகைகளோ இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதில்லை. பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்காக நமதுநாட்டிலிருந்து இந்தியாவுக்குப் பெருந்தொகைப் பணம் போகிறது; இவற்றுக்காக இந்தியாவிலிருந்து ஒரு சதமேனும் இங்கு வருவதாயில்லை.

இந்தவகையில் இந்தியப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் தொடர்ந்து இங்கு இறக்குமதி செய்யத்தானு வேண்டும்?

ஆறுதினசரிகள், 19 வார வெளியீடுகள், 2 மாதமிருமுறை வெளியீடுகள். 37 மாதவெளியீடுகள் ஆகியன இப்போது இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இத்தனை வெளியீடுகளும் தரமானவையென்று சொல்ல முடியாது. சிலர் சொல்வதுபோல் இவற்றில் 'குப்பைகளே' அதிகம் இந்தக் குப்பைகளை இங்கே இறக்குமதி செய்யத்தான் வேண்டுமா?

பணத்தைப் பொறுத்தவரையிலும் தரத்தைப் பொறுத்தவரையிலும் தென்னிந்தியாவிலிருந்து மாதந்தோறும் பெருமளவில்இங்கு வரும் பத்திரிகைகள் சஞ்சிகைகளைத் தடை செய்ய வேண்டும் என்று கூறுவதில் நியாயமில்லாமலில்லை.

தென்னிந்தியாவிலிருந்து இங்கு வரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் இரண்டொன்று தரமானவை என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். எல்லாமே 'குப்பைகள்' என்று சொல்லிவிட முடியாது. 'குப்பைகள்' என்றும் 'தரமானவை' என்றும் தரம்பிரிப்பது யார்?

தரமானபத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் இங்கு இறக்குமதிசெய்யாமல் தடை செய்வது நல்லதா?

'குப்பைகள்' என்று கருதப்படும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் தென்னிந்தியாவிலிருந்து மட்டும்தான் இங்கு இறக்குமதிசெய்யப்படுகின்றனவா? நமது கலாச்சாரத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடிய 'குப்பைகள்' எங்கிருந்துவந்தாலும் அவற்றைத் தடைசெய்ய வேண்டும்.

இதேசமயம் தென்னிந்தியாவிலிருந்தும் இதர நாடுகளிலிருந்தும் இங்குவரும் 'குப்பைகளை'விட 'படுமோசமான 'குப்பைகள்' இங்கேயே வெளிவருகின்றன. 'வெளிநாட்டுக் குப்பைகள்' இங்கே வராமல் தடைசெய்யும் அதேசமயம் உள்ளூரிலேயே 'குப்பைகள்' உருவாகாமலும் வளராமலும் தடுக்கப்படவேண்டும்.

### சோஷலிச திட்டத்திற்கு அமைந்த கல்விதிட்டம்

மக்கள் அரசாங்கத்தின் சோஷலிஸ திட்டத்திற்கு அமையவே நாட்டின் கல்வி முறையை வகுத்து வருகின்றேன். இதன்கீழ் கிராமப்புறம், நகரப்புறம் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கமாட்டாது. நகரப்புறத்திலும் பார்க்க கிராமப்புறங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் இதனை நாம் செய்யாவிட்டால் சோஷலிஸம் பேச முடியாது.''

கல்வியமைச்சர் டாடிடர் பதியுதீன் மாமுத் தாம் உருவாக்கிவரும் புதிய கல்வித் திட்டம் பற்றி பத்திரிகை நிருபர்களிடம் கூறுகையில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறுர்.

நமது நாட்டுக்கேற்ற கல்வித்திட்டம் வகுக்கப்படாதது தான் படித்த வாலிபர்கள் மத்தியில் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கவும் நாட்டில் குற்றச்ச்செயல்கள் அதிகரிக்கவும் காரணம் நாடு சுதந்திமடைந்தபின் ஆட்சி பீடத்தில் அமர்ந்த அரசாங்கங்களில் கல்விஅமைச்சர் பதவி வகித்தவர்கள் எல்லோருமே புதிய கல்வித் திட்டத்தை உருவாக்கப் போவதாகக் கூறிவந்தனர். முன்னைய அரசாங்கத்தில் கல்விஅமைச்சராக விருந்தவர் புதிய கல்வித்திட்டத்தை உருவாக்குவதற்காக 'உலகமெலாம் சுற்றி' வந்து மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை' யாக ஒரு வெள்ளையறிக்கையைத் தயாரித்து அதையும் கிடப்பில் போட்டதுதான் மிச்சம்!

அவர் இன்னமொரு காரியத்தையும் செய்தார். அதாவது நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் ஒரே தரமானவையாக இருக்கவேண்டுமென்று சொல்லி உயர்ந்த தரத்தில் உள்ள பாடசாலைகளின் தரத்தையும் குறைத்து வைத்தார்!

கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத் கல்வித் துறையில் நீண்ட கால அனுபவமுடையவர்; ஆற்றலுள்ளவர். அவர் தயாரிக்கும் புதிய கல்வித்திட்டம் நாட்டுக்கேற்றதாக அமையுமென்று நாட்டுமக்கள் எதிர் பார்ப்பார்கள்.

## தாய் மொழி மூலம் உயர் கல்விப் போதனை

நமது நாட்டில் உயர்தரக் கல்வி தாய்மொழிமூலமே அளிக்கப்படுமென்றும் இவ் வருடம் ஒக்டோபர் மாதம் தொடங்கும் கல்வியாண்டிஂ பல்கலைக்கழகங்களில் சட்டம், மருத்துவம், பொறியியல். விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் தாய்மொம் மூலமே போதிக்கப்படுமி என்ற கல்வி அமைச்சர் அறிவித்திருக்கிருர். தாய்

**எஸ். எம். ஜி.**

மொழியே போதனுமொழியாக இருக்கவேண்டுமென்பதே மக்களின் விருப்பம். கல்வி அமைச்சர் இதை ஏற்றுத் தெட்டத்தெளிவாகக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது.

இஸ்ரேல், சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளில் தாய்மொழிமூலமே உயர்தரக் கல்வி அளிக்கப்படுகின்றது. ஆங்கிலப் பாடப் புத்தகங்களுக்கு நிகராக தங்கள் சுயமொழிகளில் பாடப் புத்தகங்களை ஆக்குவதற்கு இஸ்ரேஸ், ஜப்பான் சீனு. ஆகிய நாடுகளில் வசதியும் வாய்ப்புமிருக்கின்றன. வைத்தியப் படிப்புக்கு சஞ்சிகைகள் மிக மிக அவசியம். காலத்தோடு செல்வதற்கு இந்த சஞ்சிகைகள் தான் வழிகாட்டுகின்றன. இந்த சஞ்சிகைகளை சிங்களத்திலும் தமிழிலும் வெளியிட காலமும் பணமும் போதுமா?

இந்தியாவில் உயர்தரக் கல்வி இன்னும் தாய்மொழிகளுக்கு மாற்றப்படவில்லை. தமிழ்நாட்டிலேயே இதுசர்ச்சைக்குரியதாக இருக்கிறது. தமிழ் நாட்டில் தமிழ்ப்பாடநூல்களும் சஞ்சிகைகளும் வெளியிட முடியவில்லை. இங்கு இவை சுலபமல்ல.

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையிலும் மாற்றங்கள் செய்யவிருப்பதாகக் கல்வியமைச்சர் கூறுகிருர். குறுகிய விஞவிடை முறை இங்கிலாந்தில் இன்னும் சட்டாயமாகவில்லை. இன்லும் அங்கு பரீட்சார்த்த நிலையிலேயே இருக்கிறது. இங்கும் அதேமுறையைக் கையாளலாம். இஷ்டத்துக்கேற்ற பதிலளிக்க அனுமதிக்கலாம்.

சாதனுபாடம் உயர்கல்விக்கு அத்தியாவசியம் பாடசாலைகளிலேயே சாதனுபரடப்பரீட்சை போதுமென்ரு அதிலும் மேற்பார்வைக்கு தீவிர முயற்சிகள் செய்யப்படவேண்டும்.

புதிய கல்வி.த்திட்டம் தீவிர மாறுதல்களைக்கொண்டதாகத் தானிருக்கமுடியுமென்பது உண்மையே. இந்த மாறுதல் இலங்கைக் குடியரசின் மறுமலர்ச்சிக்கான, தரம்உயர்ந்த கல்வியை அளிக்கக்கூடியதாக அமையவேண்டும்.

## உங்கள் இராசி பலன்

1—8—70 —— 8—8—70

**மேடம்:**

தெய்வசிந்தை உள்ளத்தில் பதிந்துவிடுகின்றது. பெரியார்களைக் கௌரவிக்கும் பணியில் முற்படுவீர். பண விஷயத்தில் நெருக்கடி தோன்றலாம். பொன்னுபரணங்களில் நாட்டம் உண்டாகும், புத்திரரால் கவலை.

**இடபம்:**

தனிவழிப் பிரயாணத்தில் இடர்காண்பீர். உற்ற நண்பனே பகைவனுவான்.

ஜோதிஷமணி மேல் கரவை
காவ சிவப்பிரகாசம்

பெற்ற செல்வத்தைப் பாதுகாக்க முடிவதில்லை, கள்வர் பயம் காணலாம். வார இறுதியில் இடமாற்றம் எதிர்நோக்கும். குடும்பப் பங்காளி மனவேதனையுறலாம். கடமையில் தவறி மனம்வருந்தவும்கூடும்.

**மிதுனம்:**

சென்றவிடமெல்லாம் சிறப்புக்காண்பீர். சோதரர் [illegible] பார வகையால் பெருக்த

பணவரவு காணலாம். பிதாவழிச் சொத்துச் சேரலாம். உடலில் தோல் சம்பந்தப்பட்ட வியாதி தோன்றும்.

**கடகம்:**

வாழ்க்கையின்பயனை அனுபவிக்கவேண்டிய உச்சமான காலம். உல்லாசப்பிரயாணம் உண்டு. தனியார்துறை வியாபாரம்மந்தநிலை காணும். பலர்க்கு விவாக நிச்சயதார்த்தமே நிறைவுகாணும்.

**சிங்கம்:**

கடினப்பொருள் வியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. கமத்தொழிலில் ஈடுபாடு காணலாம். இரத்தக்கொதிப்புநோய் பலர்க்கு உண்டாகும். கடற்ருெழில் அபிவிருத்தி குன்றும்.

(16ம் பக்கம் பார்க்க)

30 வருட காலம் தங்கள் சேவையைத் திறம்படச்செய்துகொண்டிருக்கும்

சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபனத்தை மறந்துவிடாதீர்கள்

தங்களுக்கு நாங்கள் செய்யும் சேவை:

★ பட்டு உடைகளைத் தண்ணீரில் போடாது யந்திர மூலம் றைக்கிளீன் செய்வதிலும்,

★ கேட்கும்நேரம் தவணைதவருது கொடுப்பதிலும்,

★ தூர இடங்களில் உள்ளவர்களுக்கு பார்சல் மூலம் அனுப்பிவைப்பதிலும்,

வட இலங்கையில் முதன்மை வகிப்பவர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

சன்லைற் றைக்கிளீனேர்ஸ், பஸ்நிலையப்பக்கம். பெரியகடை, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 474, தந்தி: றைக்கிளீன்

எங்கள் கிளை ஸ்தாபனம்:

சாயி றைக்கிளீனேர்ஸ்,
வெலிங்டன் தியேட்டர் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசித்தொடர்பு: 474

நெசவாளர்களே!

உங்கள் பணத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்துங்கள். திறமையும், அனுபவமும் மிக்க தொழிலாளர்களினுல், நவீன யந்திரங்களின் மூலம் திருப்திகரமான சேவை.

✱ பாவு ஓடுதல்

✱ சாயம் இடுதல்

✱ பிளீச்சிங் செய்தல்

இவற்றுள் உங்கள் தேவை எதுவோ? உடனே எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மனேஜர் 'மரிடெக்ஸ் மில்ஸ்'

செல்வச்சந்நிதி ரோட், வல்லை, உடுப்பிட்டி.

2386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சரித்திர ஆராய்ச்சி

**'நாவலர் சரித்திர ஆராய்ச்சி' என்னும் நூலுக்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வழங்கிய அணிந்துரையே இது. பண்டிதை திருமதி பொன். பாக்கியம் ஆக்கியுள்ள "நாவலர் சரித்திர ஆராய்ச்சி" வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. நல்லதாளில்நல்லமுறையில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 2-50.**

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் பண்டித பரீட்சையிற் சித்தியெய்துபவர்கள், ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்று எழுதி ஒப்பித்துச்சங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்று ஒரு விசேட நியதியிருக்கின்றது. 'நாவலர் சரித்திர ஆராய்ச்சி' என்கின்ற கட்டுரை பண்டிதை திருமதி பொ. பாக்கியம்அவர்களால் எழுதி சங்கத்தால்அங்கீகரிக்கப்பட்டது

நாவலர் விழாச்சபையார். நாவலர் புத்தகக்கண்காட்சியில், நாவலரைப்பற்றியபுத்தகங்கள், கட்டுரைகள், என்ற வரிசையில், பண்டிதை உதவிய இவ்வாராய்ச்சிக் கட்டுரையையும் வைத்திருந்தார்கள். இதனைக்கண்ணுற்ற முக்கியஸ்தர்களிற் சிலர் இது அச்சில் வரவேண்டியதொன்று என்று குறிப்பிட்டார்கள். அவர்களில் ஒருவர்மாவட்ட நீதிபதி ஜனப் எம். அப்துல்காதர்அவர்கள்


பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா செய்யும் அனுபவம் படைத்த பட்டதாரி ஆசிரியர் ஒருவர், நாவலர் கல்வித்திட்டம் பற்றித் தாம் எழுதும் கட்டுரைக்கு வேண்டுபவைகளை, ஆங்காங்கு தேடியலையாமல் ஒரிங்கு எளிதிற்பெறுவதற்கும், நாவலரைப் பற்றிப் பல நல்ல காரியங்களறிதற்கும், பண்டிதையின் கட்டுரைதமக்குப் பெரிதும் வாய்ப்பாயிருந்ததென்று கூறினர்.

இவ்வாறுகப் பண்டிதையின் கட்டுரைக்குக்கிடைத்த புகழ்மாலைகள், 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்' என்கின்றதொரு உணர்ச்சியை எனக்குவருவித்துவிட்டன. என்னிடம் படித்து என்னேடு நெருங்கிப்பழகும் பண்டிதை என்னெண்ணங்களிலேயே மூழ்கியிருப்பவராதலின், குறித்த கட்டுரையை முதலிலிருந்துமுடிவு போகப் படிப்பதிற்சற்றே பராமுகமாயிருந்து விட்டேன். இப்பொழுது முழுவதையும் படித்துப்பார்த்த போது அச்சிடலாம் என்ற எண்ணம் உண்டானது

பண்டிதையின் அன்புக்குரிய ஆசிரியர் ஒருவர் பண்டிதர் திரு அ. ஆறுமுகம் அவர்கள் பண்டிதரும் அவரோடு தொடர்புபட்ட வட்டுக்கோட்டைத்தமிழ்ச்சங்கமும் பண்டிதையின் ஆராய்ச்சியை அச்சிற் பதிப்பித்துப் புத்தகவடிவிற்காணுவதற்கு அதிதீவிரப்படுவது. உவப்பை மேலும் அதிசரிக்கச் செய்கின்றது.

## சரித்திரம்

நாவலருக்கு முதற் சரித்திரம் எழுதியவர் கனகரத்தின உபாத்தியாயர் என்பவர். இவர் நாவலரின் வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் படித்தவர். அங்கே படிப்பித்துமிருப்பார். இச்சரித்திரம் நாவலர் மறைந்த காலத்திலே எழுதி 1882-ல் அச்சிற்பதிப்பிக்கப் பட்டது இதனைச் செய்யுள்



வடிவில் அமைத்தார் சிவகாசி அருணசலக் கவிராயர். அது 1898ல் வெளிவந்தது.

1914-ல் செல்லையாபிள்ளை என்பவர் ஒரு சுருக்கமான சரித்திரம் வெளியிட்டார். நாவலர் தம் மாணவரான சுப்பிரமணியபிள்ளை மீது பாடிய இரங்கற் கவிகள் அதில் வந்திருக்கின்றன.

நாவலரின் தமயனார் புத்திரர் திரு. த. கைலாசபிள்ளையவர்கள். நல்லமுறையில் அமைந்ததும் வழங்குவதுமான 'ஆறுமுகநாவலர் சரித்திரம்' 1916-ல் வெளிவந்தது. இதுவிஷயக்கிரமம் பற்றியது. உபாத்தியாயர் எழுதியது காலக்கிரமம் பற்றியது. இதன் அனுபந்தத்தில் விசேட கடிதங்கள் உண்டு.

நாவலர் பெரிய சீர்திருத்தக்காரர், நீதிமான்; அவர் தமக்கு ஒரு சரித்திரம் உண்டாகவேண்டுமென்ற எண்ணம் இல்லாதவர். அவர் எழுதும் புத்தக முகவுரைகள் புத்தகத்தின் அருமை பெருமைகளை மாத்திரம் புலப்படுத்தி அமைவன அவர் சரித்திரத்துக்கு அங்கே இடம் இராது. சரித்திரம் எழுதிய உபாத்தியாயரும், பிள்ளையவர்களும் நாவலரோடு தொடர்புபட்டவராயினும் சரித்திரம்ஒன்றெழுதநேரும் என்றெண்ணி, விசேடசம்பவங்களை ஆராய்ந்து குறிப்பெழுதி வைத்திருந்தவர்களல்லர். நாவலரை அணுகி அங்கே என்ன நடந்தது. இங்கே என்ன நடந்தது என்றுகேட்கும் தகுதி யாருக்கும் இருந்ததில்லை. நாவலர் சந்நிதி, கோயிற் சந்நிதி போல மற்றொருவகையில மைந்திருந்தது. அவர், தாம் வந்த காரியத்தை விரைவுபட்டுச் செய்து செல்பவராயிருந்தார்.

மகாவித்துவான் திரிசிபுரம் மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் நாவலர் அவர்களும் அங்கே செய்யுள், இங்கே வசனம் என்று பாராட்டும்படி வாழ்ந்தவர்கள். பிள்ளையவர்களும், பிள்ளையின் தலைமாணவரான தியாகராசச் செட்டியாரும் நாவலர் பால் பெருமதிப்புள்ளவர்கள். உச்சிமேல் வைத்துப் புகழ்ந்துபாடுபவர்கள் பிள்ளையும் நாவலரும் கபிலபரணர். டாக்டர் உ. வே சாமிநாதையர் 900பக்கங்கொண்டமீனட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் பிள்ளையும் நாவலரும் ஒருவரையொருவர் சந்திப்புச் செய்யாத பிரகாரம் எழுதிவிட்டார் ஐயர், பிள்ளையின் சரித்திரத்தை எழுதி அரைநூற்றுண்டு கழித்துத்தான் வெளியிட்டார். காலதாமதத்தின் கருத்துச் சிந்திக்கத்தக்கது.

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

'நாவலர் பெருமான்' என்ற புத்தகம் விரிவானது, சுத்தானந்தர் எழுதி1948-ல் வெளியிட்டது. கேட்பாரில்லாத காலத்தில் வெளிவந்தது.

ம. பொ. சிவஞானகிராமணியார் எழுதிய வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற புத்தகத்தில் காணும் நாவலரை, 'நாவலர் பெருமானில்' காண முடியவில்லை.

தாய் நாடாகிய தமிழ்

(13-ம் பக்கம் பார்க்க)

# கவிஞர், எழுத்தாளர், நடிகர் விமரிசகர் - அவர் ஒருவரே!

**[கவிதை, சிறுகதை, நாடகம்; கட்டுரை; விமரிசனம் இப்படிப் பல துறைகளிலும் கைவைத்து அவற்றுக்கு மெருகூட்டிய திருசில்லையூர் செல்வராசனுக்கு சில்லாலை கத்தோலிக்க வாலிபர் சங்கம் தனது 18-வது ஆண்டு விழாவின் போது 'பொன்னடை' போர்த்திக் கௌரவித்தது. இந்த நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.]**

"ஊரே பேசிற்று; உலகமே வியந்தது"

ஊர்பேசுமா?- இதற்கு இலக்கணம் விளக்கம்கூறும். ஊரெல்லாம் பேசும் போது தனியொருமனிதன் மட்டும் பேசாதிருக்கட்டுமே, அதைப்பற்றியெல்லாம் இலக்கணத்திற்குக் கவலையில்லை.

ஆனல், இங்கே இலக்கணத்தின் அடித்தளத்தையே அசைவு காணச் செய்துள்ளார் ஒரு தனி மனிதர்! அதுவும் ஓர் இலக்கணப் பண்டிதரென்றல...? அந்தத்தனிமனிதர் பேசினரென்றல் ஓர் ஊரே பேசியதாகவே சொல்கின்றோம்.

சில்லையூர் பேசிற்று என்றல், செல்வராசன் பேசினர் என்றுதானே கொள்ளப்படுகின்றது.

சில்லையூர்என்றலே செல்வராசன் என்றும் செல்வராசன் என்றல் சில்லையூர் என்றும் எண்ணும் அளவுக்கு சில்லையூர் செல்வராசன் புகழ் ஈட்டியுள்ளாரென்றல், கலை இலக்கியத்துறையில் அவர் ஆற்றிய அயராத சேவைதான் இதற்குக் காரணம் என்பது எல்லாரும் அறிந்த உண்மை. எனினும் முதல் தடவையாகச் சில்லையூரைப் பார்க்கும் ஒருவர், 'இந்தப் பொடியன் இத்தனையும் செய்கின்றன்' என வியப்பர் என்பது நிச்சயம்.

சில்லையூர் என்னுமளவுக்குத் 'தான்தோன்றிக்கவிராயர்' என்ற பெயரையும் வளர்த்துக் கொண்டிருப்பது இவரது ஆற்றலுக்கோர் எடுத்துக்காட்டாகும்.

'தான்தோன்றிக்கவிராயர்' ஈழத்திலே ஒரு பாரதி.

கவிதை, சிறுகதை, நெடுங்கதை, விமர்சனம், நாடகம், பேச்சு இத்தியாதி துறைகளிலெல்லாம் தனித்துவம் பெற்றுப்புகழ் விரித்திருக்கும் சில்லையூரைச் சில தினங்களின் முன் சந்தித்தபோது, தமது பன்னிரண்டாவது வயதிலேயே அவர் நிகண்டு எனப்படும் இலக்கண நூலைக் 'கரைத்துக்குடித்த' கதை கேட்டு அசந்துபோனேன். இவரது பாட்டனரும் ஒரு பெரும் புலவர் என்ற செய்தியறிந்ததும் சில்லையூர் நிகண்டு கற்றகதை எனக்கு அவ்வளவு பெரிதாகப்படவில்லைத்தான்.


சில்லையூரின் பாட்டனர் சுபவாக்கியம்பிள்ளை என்ற சூசைப்பிள்ளைப் புலவர் அவர்கள் ஒரு மதுரகவியாவர். அந்தக்காலத்திலே மதுரைத் தமிழ்ச்சங்கம் அவரை அழைத்து 'மதுரகவி' எனும் பட்டம் வழங்கி அவரைக் கௌரவித்தது. அவர் பேரனல்லவா ...

ராசன்! ஆங்கிலம், தமிழ் இரண்டிலுமே சமபுலமை பெற்றவர் நம் ஈழத்துப் பாரதி.

சின்னமேருமை எனப்படும் சில்லாலைக்கிராமத்திற்குத் தமதுஎழுத்தால்புகழ்தேடித் தந்த செல்வராசனின் எழுத்துலகப்பிரவேசம் பற்றி அவர் சொன்னர். சிறுவயதிலிருந்தே தாம் எழுதிய கவிதைகள் மற்றும் கதை, கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தனவாயினும் அப்போது சுதந்திரன் பத்திரிகை நடத்திய ஒரு சிறு கதைப்போட்டிமூலமே தாம் நாடறிந்த எழுத்தாளனதாயும் மேலும் தீவிரமாக எழுத்துத்துறையில் ஈடுபட அது தூண்டுதலாயிருந்ததாயும் அவர் சொன்னர். அந்தப்போட்டியிலே முதலாவது பரிசையும் நான்காவது பரிசையும் சில்லையூர் தட்டிக் கொண்டாராம்.

## கவி அரங்கத் தந்தை

சில்லையூர் ... கொண்டிருக்கும்போது பல புதிய தகவல்களை அறியக்கூடியதாயிருந்தது. இப்போதெல்லாம் இலக்கிய விழா தொடக்கம் மற்றும் விழாக்கள்வரை கவி அரங்கம் பிரதான இடத்தை வகிப்பது தெரிந்ததே. எந்த



விழாக்களிலும் ஒரு சம்பிரதாயம் என்னும் அளவுக்குக் கவி அரங்கம் ஆகிவிடும் நிலைகூட ஏற்பட்டுவருவதாக உணர்கிறேன். இந்தக் கவி அரங்கத்திற்கும் சில்லையூருக்கும் உள்ள தொடர்பு மிகப் பெரிது.

## சசி பாரதி

தமிழகத்தின் பிரபல எழுத்தாளரான கு. அழகிரிசாமியும் அழ. வள்ளியப்பாவும் சிலகாலத்தின்முன் இலங்கை வந்திருந்தபோது புதுமைப்பித்தன் பாவாரத்தையொட்டிக் கொழும்பில் கவியரங்கமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதில் கலந்துகொண்ட குழந்தைக்கவிஞர் 'இது என்ன? புதுமையாயிருக்கிறதே!' என்றாராம். இத்தகைய புதுமையை ஈழத்தில் முதன்முதலில் ஏற்படுத்தியவர் சில்லையூர் தான்எனக் கேட்டதும் ஆச்சரியப்பட்டுப்போனேன், ஏனென்றல் நாலு கவி அரங்குகளில் கலந்துகொண்டு பாடிவிட்டால் தலைநிமிர்த்தும் கவிஞர் பலரை நான்கண்டவன். கொழும்பில் நடந்த அந்தப் புதுமை நிகழ்ச்சியில் சில்லையூரின் கவித்திறமைகண்டு அழகிரியார் மெய்சிலிர்த்தாராம். சில்லையூரின் கரங்களைப்பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டாராம். கவி அரங்கில் சில்லையூர் பங்குபற்றுகிறரென்றல் சபை ஒரு தனிக்களையுடன் பொலிவது எல்லாரும் அறிந்த உண்மை.

## முதற் புலவன்

ஒரு சந்தர்ப்பத்திலே என்னுடன் பேசிக்கொண்டிருக்கையில், தமிழ் தன் அடிமையென்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார் சில்லையூர். 'யாமறிந் மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணும்' என்றுபாரதி தமிழுக்கு அடிமையாய்க் கிடக்க, ஈழத்துப்பாரதி தமிழைத்தன் அடிமையென்கின்றரே என நான் சற்றே நொந்துகொண்டேன். எல்லாப்பற்றும் துறந்து இறையொன்றையே பற்றிநின்ற வேளையிலும் வாக்கிற்கோர் அருணகிரியான சந்தக்கவி'மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் என. மொழிப்பற்றை உதறிவிட முடியாதிருந்தாரென்றல், அத்த

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வர்த்தகம் பன்முகப் படுத்தப் பட்டால் பயனும் மாற்றமும் மலரும்!

## ஈழப் பொருளாதாரமும் வெளி வர்த்தகமும் – 2

— மு. சின்னத்துரை —

கைத்தொழிலில் முன்னேறி கைத்தொழில்நாடு என்ற வரையறைக்குள் அடங்காத இலங்கையின் பொருளாதாரத்தை விவசாயப் பொருளாதாரம் என்று கூறும்போது விவசாயத்தில் தன்னிறைவு அடையாத தொன்றாகவே இருந்துவருகின்றது.

### அடிப்படை மாற்றம் வேண்டும்

57 வீத மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தபோதிலும் உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப்பொருள்களில் தன்னிறைவு அடையாமல் வெளிநாட்டின் இறக்குமதியை எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. இத்தகைய நிலையைத் தொடர்ந்து இருக்க விடுவது நீடித்த இலங்கையின் பொருளாதார நலனுக்கு ஆபத்தாகும். வெளிநாட்டு வர்த்தகத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தை சம்பந்தப்படுத்திப் பார்க்கும்போது நம்பிக்கையற்றதன்மை வெளிக்காட்டப்படுவதைக் காணலாம்.

விவசாயநாடாக இருந்து தன்னிறைவு அடையாமல் இருப்பது, தொடர்ந்து விவசாயத் துறையிலேயேபொருளாதாரத்தைக் கட்டிவளர்ப்பது, முதல்விளைவுப்பொருட்களைத் தொடர்ந்து ஏற்றுமதிசெய்வது, ஏற்றுமதியால் கிடைக்கும் வருவாய் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யத் தொடர்ந்து பயன்படுத்துவது குறித்த சில ஏற்றுமதிப் பொருள்களில் இலங்கையின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து தங்கியிருக்க விடுவது ஆகியவற்றை யொட்டி நீண்டகால அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தை நோக்கும்போது அவநம்பிக்கை கொள்ளச் செய்கின்றது.

எதிர்காலப்பொருளாதார விருத்திக்குமட்டுமல்ல மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தற்போதைய மட்டத்தில் தொடர்ந்து வைத்திருக்கக் கூடாது. இலங்கையின் பொருளாதார அமைப்பில் மாற்றம் அவசியமானது. இலங்கையில் பொருளாதார அமைப்பில்மாற்றம் நிகழாவிட்டால்வெளிநாட்டு வர்த்தகத்திலும் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

### அபிவிருத்தித் திட்டத்திற்கு அந்நியச் செலாவணி

உள்நாட்டுப் பொருளாதாரம் வெளிநாட்டு வர்த்தகநிலைமை, தன்னிறைவு கைத்தொழிலாக்கம் ஆகியவற்றுடன் சம்பந்தப்படுத்தி திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவேண்டும். உள்நாட்டுத்தன்னிறைவு அடைவதின்மூலம் வெளிநாட்டு அந்நியச் செலாவணியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்த வாய்ப்யேற்படும்.

இலங்கையின்வெளிநாட்டு வர்த்தகம் குறித்த சில பொருட்களில் தங்கியிருப்பதனுல் உலகசந்தையின்ஏற்ற இறக்கத்திற்கேற்ப இலங்கையின் பொருளாதாரம் விரிந்து சுருங்கிக்கொடுக்க வேண்டிய கட்டாயத்தைத் தொடர்ந்து உருவாக்கி வைத்திருக்கின்றது. வெளிநாட்டு வர்த்தகம் தேயிலை, றப்பர், தெங்கு ஆகிய மூன்று பொருட்களிலும் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. பின்வரும் அட்டவணை இதனைச் சுலபமாக விளக்குகின்றது.

| | தேயிலை | றப்பர் | தெங்குப் பொருட்கள் |
|---|---|---|---|
| தேசிய வருமானம் | 18 | 6 | 6 |
| அந்நியச் செலாவணி உழைப்பு | 55 | 22 | 12 |
| தொழிற்சக்தி | 13.8 | 4.8 | 1.8 |

(விகிதம்)

20.4 தொழிற்சக்தியையும் 30 வீத தேசிய வருமானத்தையும் 89 வீத அந்நியச் செலாவணியையும் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களுடன் உற்பத்தி வர்த்தகம் சம்பந்தப்படுத்துகின்றது.

### பன்முகப்படுத்த வேண்டும்

இந்த மூன்று பொருட்களையும் முதல் விளைவுப் பொருட்களாக ஏற்றுமதி செய்வதும், இதனது வெளிநாட்டுச்சந்தை நிலைமை மோசமடைந்து தொடர்ந்து வருவதினுல் இந்தப்பொருட்களின் ஏற்றுமதியை இலங்கையின் பொருளாதாரத்தின் அத்திபாரமாகத் தொடர்ந்திருக்க அனுமதிக்க முடியாது. வெளிநாட்டு வர்த்தகம் பன்முகப்படுத்த வேண்டும். தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் வகிக்கும் முக்கியத்துவம் நீக்கப்படவேண்டும். முக்கியத்துவம் நீக்கப்படுவதென்றால் ஏற்றுமதியைக் குறைப்பதல்ல: ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தி விகிதாசார ரீதியில் ஏற்படுத்தும் மாறுதலையே இங்கு குறிப்பிடப்படுகின்றது.

### ஏகபோக உரிமையை உடைக்கவேண்டும்

தற்போதைய இலங்கையின் உலகச் சந்தையில் ஏற்றுமதிப் பொருட்களின் விலை ஏகபோக உரிமை கொண்டாடும் சில நாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இத்தகைய ஏகபோக உரிமை உலக சந்தையில் நிலவுவதை உடைக்கவேண்டும். இலங்கையின் வர்த்தக அமைப்பு உடனடியாக மாற்றக் கூடியதொன்றல்ல. உள்நாட்டுப் பொருளாதார அமைப்பு மாற்றமடையும் போதுதான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பிலும் மாற்றம் ஏற்படும். எனவே இலங்கையின் வெளி நாட்டு வர்த்தகத்தைப் பன்முகப் படுத்தமுன் இலங்கையின் பொருளாதாரத்தைப் பேண உடனடியாகச் சில நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இந்தவகையில் வெளிநாட்டு சந்தையில் குறித்த சில நாடுகளின் ஏகபோக உரிமையை உடைத்தெறிவது அவசியமானது. ஒத்த பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒன்ருக இணைந்து தமக்குள் ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வது இதற்கு ஒரு பரிகாரமாகும்.

இதற்கு இன்னேர் மாற்று வழியுண்டு. சீன-இலங்கை றப்பர், அரிசி ஒப்பந்தம் போல பண்டமாற்று ஒப்பந்தம் செய்து வர்த்தகத்தை மேற்கொள்ளுவது குறித்த நாடுகளின் தனி உரிமைக்கு முடிவு கட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

### ஏற்றுமதி இறக்மகுதி சம நிலை

இலங்கையின் வர்த்தக சமநிலைமையானது தொடர்ந்து வீழ்ச்சியின் போக்கைக் காட்டி நிற்கின்றது. கடந்த வருடத்தின் ஏற்றுமதியின் மொத்தத் தொகை 19160 லட்சம். அதே நேரம் இறக்குமதி தொகை (25430 லட்சம்) ஏற்றுமதியை விடச் சற்று

| ஆண்டு | ஏற்றுமதி | இறக்குமதி | சமநிலை |
|---|---|---|---|
| 1965 | 19,490 | 14,740 | 475 |
| 1966 | 17,000 | 20,280 | 328 |
| 1967 | 16,900 | 17,380 | 48 |
| 1968 | 20,350 | 21,730 | 138 |
| 1969 | 19,160 | 25,430 | 627 |

(லட்சம் ரூபாவில்)

கூடியதாகக் காணப்படுகின்றது. இரண்டிற்கிடையிலான பற்ருக்குறையானது 6270 லட்சமாக உள்ளது.

வர்த்தக சமநிலையானது 1965ம்-ம் ஆண்டு பின்பற்ருக்குறையைக் காட்டுவதுடன் கடந்த வருடம் பெரு வீழ்ச்சியைக்கொடுக்கின்றது கடந்த வருடத்தை எடுத்துக்கொண்டால் 1190 லட்சம் ஏற்றுமதியில் வீழ்ச்சியடைந்த அதே நேரம்3700 லட்சம் இறக்குமதியில் அதிகரித்துள்ளன. 1967-ம் ஆண்டு 4250 லட்சம் ஏற்றுமதி-இறக்குமதியில் பற்ருக்குறையுடன் ஒப்பிடும்போது 1969-ம் ஆண்டு பற்ருக்குறைவாகக் காணப்பட்ட போதிலும் பற்ருக்குறையானது அதிகரித்துச்செல்வதை அவதானிக்க முடிகின்றது. எனவேதான் வர்த்தக சமநிலையானது தொடர்ந்து வேறுபாட்டைக் காட்டிநிற்கின்றது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பொறுத்து தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களில் உள்நாட்டு நிலைமை, வெளிநாட்டுச் சந்தை நிலைமை என்பதனை விரிவாக ஆராயவேண்டும். தேயிலை வர்த்தகம் இலங்கையைப்பொறுத்து மிகமுக்கியமாக ஆராயப்படவேண்டியதொன்ருகும் அடுத்த கட்டுரையில் சற்று விரிவாக வெளிநாட்டு தேயிலை வர்த்தகத்தை உள்நாட்டு உற்பத்திநிலைமைகளுடன் ஒப்பிட்டு ஆராய்வோம். (தொடரும்)

## சங்கமத்துறை

— கங்காபுத்திரன் —

### இணையடிநீழல்தான் இன்பத்துள் இன்பம்

கண், வாய், மூக்கு, செவி, மெய் என்ற பஞ்சேந்திரியங்களுடையவன் மனிதன். இப்பஞ்சேந்திரியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான இச்சையுடையன. கண் காணுகிறது. வாய் சுவைக்கின்றது. மூக்கு முகர்கின்றது. செவி கேட்கின்றது. மெய் உணர்கின்றது. இது சாதாரணசெயல். ஆனுல் அசாதாரண செயலில் பஞ்சேந்திரியங்களை உட்படுத்துவோர்தான் அடியார்கள்.

தம் இந்திரியங்களுக்குள்ள தேவைகளைக் கடந்து அவற்றை இறைவனுடன் இணைக்கின்றபெற்றிமைபெற்றவர்கள் அவர்கள்.

சமண சமயத்தைத்துறந்து அப்பர்பெருமான் சைவத்துள் மீண்டும் புகுந்தவிட்ட சினத்திஞல் அவரைச் சமணர்கள் நீற்றறையிலிட்டனர். தன்னுடைய உடலுடன் இணைந்துள்ள பஞ்சப் புலன்களுக்குரிய எந்தவித வேதனையுமின்றி அந்த நீற்றறையிலே அப்பரடிகள் கிடந்தார். அவரது நெஞ்சம் இறைவனுடன் இரண்டற இணைந்துவிட்டதென்பதை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இந்த இனிய பண்மூலம் புலப்படுத்தியிருக்கின்ருர்.

மாலைச்சந்திரனின் இனிய ஒளியை அவர் கண்கள் காண்கின்றன. மாசிலாவீணை இசைஅவரதுசெவிகளை குளிர்விக்கின்றது. பூக்களின் நறுமணத்தை முகர்கின்றது மூக்கு. தென்றல் உடலுக்கு இதமூட்டுகின்றது. இவ்வாறு அவர் நீற்றறையில் அனுபவித்த இன்பத்தை எல்லாம் ஈசன் எந்தை இணையடி நீழலிலேதான் பெற்ருர்.

அப்பரடிகளை விடுத்து அப்பால் அமுதரன் அடிசேர்ந்த மணிவாசகரைப் பார்ப்போம். சிறிய வண்டொன்று பூவின் தேனை உறிஞ்சிக்கொண்டிருக்கும் காட்சியைக் காண்கிருர் மணிவாசகர். அந்த காட்சியினூடே அவர் இதயத்தில் ஊறிய கவிதை அவரது இலட்சியத்தின் வேரில் கிளைவிடுகிறது.

''தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் தேனுண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும்-
எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி.''

ஆரம்பத்தில் எதையோ கண்டவர் எங்கேயெம்மையெல்லாம் இழுத்துச் செல்லுகின்ருர்? ''நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும்'' என்பதன் மூலம் மெய், கண், வாய் ஆகியனவற்றில் வெறும் சுவையில்லை அவற்றிற்கு மேலாக உள்ளது இலட்சியச் சுவையென்று புலப்படுத்துகிருர்.

உண்ணும்வரைக்குமே சுவையைக்காட்டும் நா வயிற்றுக்குள் சென்றபின் சுவையைக் காட்டுகிறதா? இல்லையே. பஞ்சணையில் உறங்கும்வரைதானே உடல் இதங் காண்கின்றது. உறங்கியபின் எதை உணர்கின்றது. ஆனுல் அடியார்கள் இந்த புலனுணர்வுகளுக்கப்பால் ஆழமான இதயத்தில் இன்பம் ஈகின்ற பெருமானையே பெரிதெனக் கண்டுமகிழ்ந்தனர்.

### கவிதை வெறும் உருவமல்ல

மோனை, எதுகை தெரிந்தால் கவிதை எழுதலாமா என்று சிலர் கேட்கக்கூடும். மோனை எதுகை மட்டுமல்ல அணி, சீர் தொடை என்பனவும் கவிதைக்கு வேண்டியதே. ஆனுல் இவையெல்லாம் கவிதைக்குரிய உறுப்புகள். கவிதை இந்த உறுப்புகளினுல் உருவம் பெறுகின்றதன்றி உயிர் பெற்றதாகாது. உயிர்பெறுவதற்கு உண்மையான பொருள் வேண்டும். பொருள் என்பதை விரிக்கிற்பெருகும்.

சுருக்கமாகச் சொன்னுல் கவிதை படிக்கின்றவரின் இதயத்தைத் தொடவேண்டும். இதற்காகவேறும் பொருள் போதுமா? இல்லை. உண்மையான ஒரு கவிஞனின் வாயிலே உருவம் இலட்சணமுற-உயிரிலே களை ஒளிரக் கவிதை பிறந்துவிடுகிறது. இந்தக் கவிதையை உணருகின்ற ஆற்றலும் இரசிகனுக்குவேண்டும். காதிலே ஒலிக்கின்ற சினிமாப்பாடல்களில் கூட ஜீவத்துடிப்புள்ளகவித்துவத்தைத்தேடிப் பெறமுடியும். சாதாரணமக்கள் வாயிலிருந்து வெளிவரும் நாடோடிப் பாடல்களிலும் உயிர்த்துடிப்புள்ள கவிதையை யாம் பெறமுடியும்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு— என்ற வள்ளுவப்பெருமானின் வாய்மொழிப்படி கவிதையையும் அவ்வவ்விடங்களில் மெய்யறிவினுல் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தீபச்சுடர்'

### குறுநாவல்

### அத்தியாயம் — 4

நானும் ஆவல்மேவியபடி அந்தக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

''என் உயிரினும் மேலான தீபன் அவர்களுக்கு' என்னுடைய திடீர் மறைவால் நீங்கள் எவ்வளவுதூரம் அதிர்ச்சியடைந்திருப்பீர்கள் என்பதை நினைக்க நினைக்கஎன்நெஞ்சுவெடித்துவிடும்போலிருக்கிறது.

கடிதம்எழுதாமலே நேரில் உங்களைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் கூறவேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இனிமேல் உங்களை நேரில் பார்க்கும் பாக்கியம்கிடைக்காமலேயே போய்விடும் என்று தோன்றுகிறது. அதனாலேயே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

தீபன் உண்மையில்நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஆம், நான் அந்நிய நாட்டு ஒற்றர் கோஷ்டியைச்சேர்ந்தவள்தான். ஆனால் உங்களிடம் நான் ஒற்றுவேலைசெய்யவில்லை. உங்களை நான் ஏமாற்றவில்லை இதை மட்டும் நீங்கள் நம்பவேண்டும்,

நான் வேலைசெய்துவந்த வர்த்தகக் கம்பெனியை உங்களுக்குத் தெரியும். அதிலுள்ள அதிகாரிகள் முக்கியமான சில தகவல்களைத் தமது நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள் இதற்காக அவர்கள் நாட்டைச் சேர்ந்த ஒறறர்கள் அக்கம்பெனியில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ரகசியத் தகவல்களை அவர்களுக்கு அறிந்துசொல்வதற்கு இங்கேயும் சில ஆட்கள் இருக்கிறார்கள். பல சோதனைகளின் பின் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருத்தி நான். டைப்பிஸ்டாக வேலை செய்துகொண்டு கிடைத்த சொற்ப சம்பளத்தில் எனது தாயையும் சகோதரர்களையும் காப்பாற்றுவதற்காகத் திணறிக்கொண்டிருந்த எனக்கு இந்த வேலைக்காக அவர்கள் கொடுக்க முன்வந்த தொகை சபலமூட்டியது.

என் தந்தையார் பட்டிருந்த கடனை அடைப்பதற்கும், தத்தளித்துக்கொண்டிருந்த என் குடும்பத்தைச் சந்தோஷமாக வைத்திருப்பதற்கும் அடைவிட வேறு வழி இருக்கமுடியாது என்று எனக்குப்பட்டது. எனவேதான் நான் இந்த வேலையில் ஈடுபட்டேன்.

எந்த நாட்டுக்காக இந்த ஒற்றுவேலை என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம். அதை நான் சொல்வது உசிதமில்லை. கிழக்காசியாவிலுள்ள ஒரு முக்கியமான கைத்தொழில் நாடு என்பதைக் குறிப்பிட்டால் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

வர்த்தக சம்பந்தமான சில ரகசியத் தகவல்களை அறிவதற்கு உங்கள் காரியாலயத்திலுள்ள சில தஸ்தாவேஜுகள் அவர்களுக்குத் தேவையாயிருந்தன. அவைகளைக் களவாடுவதற்காக நான் பணிக்கப்பட்டேன். நீங்கள் இருந்த வீட்டுக்குப்

— "அன்புமணி" —

பக்கத்தில் இருந்ததால் உங்களுடன் தொடர்பு கொள்வது எனக்குச் சுலபமாக இருந்தது.

ஆனால் உங்களைப் பார்த்த முதல் தடவையிலேயே என்னுள்ளத்தில் ஏதோ ஒன்று என் உறுதியைத் தளர்த்திவிட்டது. அதன்பின் நீங்கள்தான் என் இதயத்தைக் கவர்ந்த கதைகளின் ஆசிரியர் ''தீபன்'' என்று அறிந்ததும் என் உள்ளம் அடியோடு மாறிவிட்டது. உங்களைச் சந்திப்பதையே பெரும் பாக்கியமாக எண்ணிக்கொண்டிருந்த எனக்கு உங்கள் இலக்கியப் படைப்புக்களில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததும் வந்த வேலையை மறந்தேன் உங்கள் எழுத்துக்களில் மூழ்கித் திளைப்பதில் இன்பம் கண்டேன்.

என்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலை அனுவசியமாகத் தாமதமடைவதையிட்டு எனது அதிகாரிகள் என்னை நெருக்கினர். நானும் அவ்வப்போது உசிதமான சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டு வந்தேன். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக உங்கள் காரியாலயத்துக்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தேன்.

சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை எடுக்க முடியவில்லை என்று என் மேலதிகாரிகளிடம் எவ்வளவோ சொன்னேன். ஆனால் அவர்கள் எனது பேச்சை நம்பவில்லை. நாள் ஆக ஆக அதிகாரிகள் என்மேல் சந்தேகப்படலாயினர். அதனால் என்னைக் கண்காணிப்பதற்காக மேலும் சில ஒற்றர்களை ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

இவர்கள் என்னைச் சுற்றிக்கொண்டே இருந்தார்கள். சில சமயம் நான் தங்கள் வீட்டிலிருந்தபொழுதும் தங்கள் காரியாலயத்துக்கு வந்திருந்தபொழுதும் இவர்கள் என்னை மறைந்திருந்து கவனித்திருக்கிறார்கள்

குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளை எடுப்பதற்கு நான் முயற்சி செய்யவில்லை என்பது இவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அதனால் என்மேல் கண்டிப்பான ஒரு நிபந்தனை போட்டார்கள். ஒரு தினத்தைக் குறிப்பிட்டு, அந்தத் தினத்திற்குள் நான் காரியத்தை முடிக்காவிட்டால் என்னைத் தண்டனைக்குள்ளாக்குவதாகப் பயமுறுத்தினார்கள். அன்றையதினம் நான் காரியாலயத்துக்கு வந்தபொழுது என்னைப் பின் தொடர்ந்து, என்னைக் கண்காணிப்பதற்காக அமர்த்தப்பட்ட ஒற்றர்களும் வந்திருக்கிறார்கள். (இதை நான் பின்னால் தெரிந்துகொண்டேன்) அன்றுதான் அந்தப் பயங்கர சம்பவம் நடந்தது.

அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் ஒருவன் தான் உங்களை மேலதிகாரி அழைப்பதுபோல போனில் பேசியிருக்கிறான். நீங்கள் போனபிறகும் நான் தஸ்தாவேஜுகளை எடுப்பதில் சிரத்தை காட்டவில்லை என்பதைக் கவனித்த கழுகுகள் திடீரென்று உள்ளே புகுந்து தஸ்தாவேஜுகளை ஆராய முயன்றனர். டெலிபோனை நோக்கி ஓடிய என்னைப் பேச முடியாதவாறு கையையும்வாயையும் கட்டிவிட்டு பீரோவைக்குடைந்து தஸ்தாவேஜுகள் சிலவற்றை எடுத்துக்கொண்டனர்.

எங்கே என்னை வெளியில் விட்டால், என்னால் அவர்களுக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து இரவோடிரவாக என்னை இங்கே கடத்திக் கொண்டுவந்துவிட்டார்கள். இந்த இடம் கொழும்பிலிருந்து 20 மைல் தூரத்திலிருக்கிறது என அறிகிறேன். இது ஒரு பழங்காலக் கட்டிடம். இதில் ஓர் அறையில் என்னைச் சிறைவைத்திருப்பதுபோல் வைத்திருக்கிறார்கள். இப்போது வெளியுலகத்துக்கும் எனக்கும் ஒருவித தொடர்பும் கிடையாது.

ஒருநாள் இந்த முரடர்கள் பேசிக்கொண்டதிலிருந்து நீங்கள் 'இன்டெடிக்' செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்றும் சீக்கிரமே விசாரணை நடக்கும் என்றும் தெரியவந்தது. நான் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்ததை அவர்கள் கவனித்துவிட்டார்கள்.

அவர்களைக் காட்டிக் கொடுக்கும் முயற்சிகள் எதிலும் நான் ஈடுபட்டால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பயமுறுத்தினார்கள். சொல்வதைச் சொன்னபடி செய்துவிடும் முரடர்கள் அவர்கள். அதற்கான சகல ஏற்பாடுகளும் அவர்கள் வசமிருக்கின்றன. அதனால் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

தீபன் உங்களை காப்பாற்றக்கூடிய உண்மைகள்எனக்குத் தெரிந்திருந்தும் உங்களைக் காப்பாற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறேன். இதனால் என் உள்ளம் அனுபவிக்கும் வேதனையை விளக்கமுடியாது. உங்களை இந்த ஆபத்துக்குள்ளாக்குவதற்கு நானே காரணமாகஇருந்தேன்என்பதை எண்ணும்போது என் இதயம் வேகிறது என்னை மன்னித்துவிடுங்கள் தீபன்! என்னை மன்னித்துவிடுங்கள்!

எவ்வளவோ சிரமப்பட்டு இந்தக் கடிதத்தை எழுதி இங்குள்ள வேலைக்காரி ஒருத்திமூலம் மிகுந்த பிரயத்தனத்தின் மூலம் வெளியேற்றுகிறேன்

ஆனால் தீபன் நீங்கள் என்னைத்தேடவோ, அல்லது அந்த முரடர்களைத் தேடுவதற்கோ முயற்சி செய்யாதீர்கள். அது உங்கள் உயிருக்கு ஆபத்தைத் தேடிவிடும்.

தீபன், உங்கள் மாசற்ற அன்புக்கு நான் அருகதையற்றவள். உங்கள் அன்பு முகத்தை இனி நான் பார்க்க முடியாது உங்கள் இனிய பேச்சை இனிநான் கேட்க முடியாது. உங்கள் இலக்கியப் பணியில் இனி நான் பங்குகொள்ள முடியாது உங்கள் எழுத்துக்களை இனி நான் படிக்கமுடியாது. ஆனாலும் என் போன்ற எண்ணற்ற ரசிகர்களுக்காக உங்கள் இலக்கியப்பணியைத் தொடர்ந்து செய்யும்படிவேண்டுகிறேன்,

இப்படிக்கு
துர்ப்பாக்கியவதி,
திலகவதி

கடிதத்தைப் படித்து முடித்தநான், சட்டென அதன் கவரைத் திருப்பிப் பார்த்தேன். தபாலாபீசில் முத்திரை சரியாக விழாதபடியால் அது எந்த இடத்திலிருந்துபோஸ்ட்செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடியவில்லை

தீபனைப்பார்த்தேன் அவன்சிலையாக உட்கார்ந்திருந்தான்.

'தீபன் என்ன பேசாமல் உட்கார்ந்திருக்கிறாய்? உன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் போக்கவும், உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவும் தக்க ருசு கிடைத்திருக்கிறது. உடனே புறப்படு பொலீஸ் ஸ்ரேசனுக்குப் போகலாம்' என்றேன்

தீபன் அமைதியாயிருக்கும்படி கையமர்த்தினான்.

'பொறு நண்பா, என்மூளை ஒரேயடியாகக் குழம்பிக்கிடக்கிறது. அவசர பட்டு எதையும் செய்யக்கூடாது.'

'அவசரப்படாவிட்டால் ஆபத்தாகிவிடும் தீபா',

'இல்லை நண்பா. அவசரப்பட்டால்தான் ஆபத்தாகிவிடும். என் உயிரைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் திலகவதிக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய எந்த முயற்சியிலும் நாம் ஈடுபடக்கூடாது. பொலீசுக்குத் தகவல் தெரிவிப்பது திலகவதிக்கு மிகவும் ஆபத்தானது.'

'அப்படியானால் வேறு என்னதான் செய்யவேண்டுமென்கிறாய்.'

'நண்பா, கொழும்பிலிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள இடங்களில் திலகவதியைச் சிறை வைத்திருக்கக்கூடிய இடம் எதுவாக இருக்கமுடியும் என்று உன்னால் ஊகிக்க முடிகிறதா?'

'ஏன் அவளைத் தேடிக்கொண்டு போவதற்கா?'

'ஆமாம்'

'முட்டாள்தனம்.'

'நண்பா என் உள்ளம் படும்பாட்டை புரிந்துகொள்ளாமல் பேசுகிறாய். எப்படியாவது திலகவதியைச் சந்தித்துப் பேசியாகவேண்டும். இல்லாவிட்டால் எனக்குப் பைத்தியம பிடித்துவிடும். எனக்காக, என்னை மோசக்காரர்களின் சூழ்ச்சியிலிருந்து பாதுகாப்பதற்காக தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது பாடுபட்ட அந்தப் பேதைக்குக் கிடைத்திருக்

(12-ம் பக்கம் பார்க்க)

---

### படிப்பனைக் கதை

## யானையும் முதலையும்

யூதநாதன் என்னும் யானைத்தலைவன் ஒருநாள் மாலை காட்டில் வெகுதூரம் அலைந்துதிரிந்துவிட்டு, உடம்பிலுண்டான உஷ்ணத்தையும் அரிப்பையும் தணித்துக்கொள்ளும் பொருட்டு இரண்டு தும்பிக்கை தண்ணீர் மொண்டு தலையில் ஊற்றுவோம் என்ற நோக்கத்துடன் குளத்தங்கரைக்கு வந்து முன்னங்கால் இரண்டையும் நீரில் விட்டது. தும்பிக்கையால் குளத்து நீரை உறிஞ்சி தலையின் மீது பீச்சியது.

வேழம் இந்த விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அக்குளத்தில் வசித்துவந்த அக்கராயன் என்னும் முதலை ஓசைப்படாமல் தண்ணீருக்கடியில் சுழியோடி வந்து யானையின் முன்னங்கால் ஒன்றைப் பற்றிக் கவ்விக்கொண்டது. தண்ணீருக்குள் முதலையின் பலம் அதிகமாகையால் யானை தன்காலை விடுவித்துக்கொள்ளமுடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தபோது அதற்கு ஒருயோசனை திடீரென்று தோன்றியது. முதலையை விளித்து அது கூறலாயிற்று-

'ஏ நண்பா, அக்கராயா! நீ என் முன்னங்காலில் ஒன்றைக் கவ்விப் பிடித்துக் கொண்டாய் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். 'என் கால் என்று நினைத்து மரவேரைப் பிடித்துக்கொண்டாய்' என்று யானை சொல்ல, நீயும் அதைநம்பி அதன் காலை விட்டுவிட்டு மரவேரைக் கவ்விய கதையல்ல இது. நரியைப்போல நான் உன்னை ஏமாற்றமாட்டேன். என்னுடைய காலைத்தான் பிடித்துக் கொண்டாய். ஆனால் ஒன்றுமட்டும் சொல்கிறேன் கேட்பாயாக! இந்தக் காட்டிலேயே மிகப்பெரிய மிருகம் நான், என் காலைப் பிடித்து விட்டதாக நீ பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. என்னையும்விட ஆயிரம் மடங்கு சிறியதோர் அற்ப பிராணி அதோ குளக்கட்டில் வெள்ளெலிகளைத் தேடி அலைந்து திரிகிறது. அந்தப் பூனையை உன்னால் பிடிக்க முடியுமா?'

இதைக் கேள்வியுற்ற அக்கராயன் பூ! பூனையைப் பிடிப்பது ஒரு பெரிய காரியமா?' என்று கேட்டுக்கொண்டே யானையை விட்டுவிட்டுப் பூனையைத் துரத்திப் போயிற்று. தரையில் நின்ற பூனையை அது எப்படிப் பிடிக்க முடியும்? பூனை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தப்பியோடிவிட்டது. தண்ணீருக்குள் முதலைக்கிருந்த பலம் தரையில் வரவில்லை. அது மீண்டும் குளத்துக்குள் யானையைப்பிடிக்கலாமென்றுபாய்ந்துவந்தது.

யானை அதற்கிடையில் கரையில் ஏறிக்கொண்டது.

முதலை மெதுவாகத் தன் மூஞ்சியால் தண்ணீரைக் கிளித்துக்கொண்டு யானையைக் கவலையோடும், வெட்கத்தோடும் நோக்கியது. அப்பொழுது யூதநாதன் என்னும் அந்த யானைக்கூட்டத்தலைவன் கூறுவதாவது

'பார்த்தாயா, நண்பா அக்கராயா! தண்ணீருக்குள் இருக்கும்வரைதான உனக்குத் தைரியமும் பலமும் அதிகம். தண்ணீரை விட்டு வெளியே வந்தால் உன் சக்திகள் யாவும் குன்றிவிடும் தரையில் எனக்கும் பூனைக்கும் பலம் அதிகமானதால் உன்னால் எங்களை ஒன்றும் செய்ய முடியவில்லை சிவபெருமானுடைய கழுத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் நாகபாம்பு மகாவிஷ்ணு ஏறிவரும் கருடனையோ சுப்பிரமணியர் இவர்ந்துவரும் மயிலையோ கண்டுபயப்படுவதில்லை. ஏனெனில் அது தான் இருக்கவேண்டிய உரிய ஸ்தானத்திலேயே இருக்கிறது! அந்த ஸ்தானத்தை விட்டு இறங்கினால் அதன் செல்வாக்குக் குறைந்துவிடும். அது தன் சத்துருக்களைக் கண்டு அஞ்சும்.

'இதுபோலத்தான் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் தங்கள் ஸ்தானத்தில் இருக்கும்வரை எவருக்கும் அஞ்சமாட்டார்கள். அவர்களுக்கு நிறைய மதிப்பும் செல்வாக்கும் இருக்கும். அவர்களுக்குரிய அந்த ஸ்தானத்திலிருந்து இறங்கிவிட்டார்களோ அவர்களுடைய அதிகாரம் குன்றிவிடும். தம்மிலும் வலிவு குறைந்தவர்களைக் கூடக் கண்டு அஞ்சுவார்கள். இதுதான் உலகத்தின் நியதி.

இந்த மதியுரைகளைக் கேட்ட அக்கராயன் என்னும் முதலை ஏமாற்றமடைந்ததாய் ஆனால் அறிவு கூடியதாய் குளத்திலுள்ள தனது அளைக்குள சென்று மறைந்துவிட்டது.

படிப்பனை: இருக்கும் ஸ்தானத்தில் இருந்தால் எல்லோருக்கும் சுகம்தான்.

[வி. என். பி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் மணமும்

[இறைவனை நெஞ்சிலே வைத்து வணங்கும்படி நாயன்மார் முதல் தேசிகவிநாயகம்பிள்ளைவரை கூறியதை சென்ற இரண்டு வாரங்களிலும் வாரமலரில் படித்து ரசித்த நேயர்களுக்கு 'மலரும் மணமும்' பற்றி கவிஞர்களி, ஞானியர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை இந்த வாரம் தருகிறோம்.]

**ஜி. வரதராஜப்பிள்ளை**

இயற்கைக் காட்சியில் மலரைப்போன்று மகிழ்ச்சியைத் தருவது வேறு என்ன பொருள் உள்ளது! எத்துணை அழகு; எத்துணை மென்மை; எத்துணை ஒற்றுமை! கவிஞர்களின் உள்ளங்களுக்கு உணர்ச்சியையூட்டி இன்பத்தை நல்குவது; ஞானியர்களுக்கு எண்ணங்களைத் தூண்டி அமைதியைத் தருவது. ஆதலின் மக்கள் வாழ்விலே மலர் சிறப்பிடம் பெற்றது. இறைவனை வணங்குவதற்கும் மலரையே பயன்படுத்தினர் நல்லோர். மலர்தூவி இறைவனை வழிபட்டால், பெறுதற்கரிய பேருகிய முத்தியையடையலாம் என்கிறார் திருஞானசம்பந்தர்.

"சித்தந் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே"

என்பது அவரது அருள் வாக்கு.

இனி, சிறந்த உண்மைகளை விளக்குவதற்கும் மலரையே உவமையாகக் கொண்டனர் நம் சமயச் சான்றோர். மலரும், அதன் வண்ணமும், அதன் மணமும், சத்து, சித்து, ஆனந்தமாகிய இறைவனது இயல்பை நினைவூட்டுவதாகக் கூறுவார் பரஞ்சோதியார்.

"பூவண்ணம் பூவின்
மணம்போல மெய்ப்
போத இன்ப
மாவண்ண மெய்
கொண்டவன்.

— திருவிளையாடற்புராணம்.

மணம், நிறம், பூ என்ற மூன்றும் சேர்ந்து பூஎன்பதுபோல, இன்பம், அறிவு, உண்மை என்ற மூன்றும் இறைவன் சொரூபமாம்.

மாணிக்கவாசக அடிகளுக்கு மலரும் மணமும் வேறோர் உண்மையைப் புலப்படுத்தின. பூவில் மணம் எங்கும் நிறைந்துள்ளதுபோல, இறைவன் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்பது அவரது திருவுள்ளம்.

"பூவினுற்றம் போன்
றுயர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து
மேவிய பெருமை"

—திருவாசகம்.

மற்றோர் இடத்தில் மாணிக்கவாசக அடிகள் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினைக் கூற வந்தபோது, இவ்வுவமையினை எடுத்து இறைவனுடைய கலப்புக்கு உயர்வு கூறினார்.

"உற்ற ஆக்கையின்
உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையி
லாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற
பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்த னண்டுதன் அடியரிற்
கூட்டிய
அதிசயங் கண்டாமே"

—திருவாசகம்.

'ஜீவன் உடலில் இருப்பது போலவும், மணம் மலரில் இருப்பது போலவும், இறைவன் எல்லாப் பொருளிலும் நிறைந்தும், மேலாயும் விளங்குகிறான்; ஆனால் அறிவிலிகள் இவ்வுண்மையினை உணராது, உடலோடு கூடி அனுபவிக்கும் இன்பத்தினையே பெரிதாக எண்ணி மகிழ்கிறார்கள். இவர்களது கூற்றைக் கேளாது என் தந்தை என்னை அடிமைப்படுத்தித் தன் அடியார் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டு, இவ்வதிசயத்தைக் காட்டினான்' என்பது இதன் பொருள். ஜீவனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு உடலுக்கும் உயிருக்கும் உள்ள [தொ]டர்பு போன்றது என்றாலு[ம்], ஜீவனுக்கும் இறைவனுக்கும் உள்ளதொடர்பு மிக உயர்ந்தது உடலோடு கூடி அனுபவிக்கும் இன்பம் மிகவும் அற்பமானது, நிலையற்றது.

ஆனல் இறைவனோடு கூடி அனுபவிக்கும் இன்பம் மிகவும் உயர்ந்தது, நிலையானது. ஏன்? இறைவன் துன்பம் இல்லாதவன், இன்ப வடிவினன். ஆதலால் தன்னையடைந்தார்க்குத் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். இவ்வுண்மையினை உணர்ந்து அவனை நாடுவோமாயின் ஜீவனில் சிவமணம் கமழும். அனுபவத்திலே தலைசிறந்த யோகியான திருமூலர், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்று இக்கருத்தினைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பல இடங்களில் திருமூலர் மலர் உவமையைக் கூறியுள்ளார். இறைவன் உயிர்களில் காற்றில் அசைவும். கரும்பில் சர்க்கரையும், பாலில் நெய்யும், பழத்தில் ரசமும். பூவில் நாற்றமும் போலக் கலந்திருக்கின்றான் என்பது இறைவனது கலப்புக்கு அவர் கூறும் உவமைகள்.

"காலி னூறும் கரும்பி
னிற் கட்டியும்
பாலினுள் நெய்யும்
பழத்து விரதமும்
பூவினுள் நாற்றமும்
போலுளன் எம்மிறை
காவல னெங்கும் கலந்து
நின்றானே"

— திருமந்திரம்.

(11-ம் பக்கம் பார்க்க)

---

### பௌத்த இந்து கலாச்சாரங்கள் இழையோடும்

# கண்டி நகரத்துப் பெருவிழா

**வண்ணை சே. சிவராஜா (பி.எஸ்.ஸி.)**

ஒவ்வொரு ஆண்டு ஆகஸ்டிலும் கண்டி நகரம் விழாக்கோலம் பூண்டு, ஈழத்து மக்களையும், பிறநாட்டவர்களையும் தன்பால் அழைக்கின்றது, பல்லாயிரக் கணக்கில்மக்கள்இங்கு திரளுவது,'பெரகரா' என்னும் மாபெரும் விழாவுக்காகவேயாம்.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி ஆரம்பமாகி 17-ந் திகதி முடிவடைகின்றது இப்பெரும்விழா.

இவ்விழாவிலே, யானைகள் பலவகை உடையணிந்த யானைகள் நடைபயில நாட்டியகாரர்களும், வாத்தியகாரர்களும் புடைசூழ புத்தர்பெருமானின் புனித தந்தம்வீதியிலே பவனிவருவதுகண்கொள்ளாக் காட்சியாகும்.

சுமார் பதினைந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இப்பெருவிழா பல நூற்றாண்டு காலங்களாக நடைபெற்றுவருகின்றது. புத்தரின் நாலு தந்தங்களில் ஒன்றெனக் கருதப்படும் புனித தந்தம் தலதா மாளிகையில் கண்டிய மன்னன் விமல தர்மசூரியனின் காலத்தில், சுமார் 275 வருடங்களுக்கு முன்பாக, அவனது மாளிகையின்அண்மையில்கோயில் கொள்ளப்பட்டதாகும். இம்மாளிகை அட்டகோண வடிவுடையதாக கண்டிய மன்னர் பரம்பரையின் கடைசிமன்னனான ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் காலத்தில் அமைக்கப்பட்டதாகும். பண்டைய ஈழத்தில் நமது மன்னர்களால், விழாவெடுக்கப்பட்டிருந்ததோடல்லாமல் பின்னர் அந்நியர்காலத்திலும்இவ்விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன.

பிரகாரம் என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்ட 'பெரகரா' என்னும்சிங்களச்சொல் வீதிவலம் வருதலையே குறிக்கின்றது. இவ்விழா ஆரம்பகாலத்தில் பல நூற்றாண்டுகளுக்குமுன், அரசனின் வெற்றிவிழாவாகவும், கண்ணகியின் கற்பின் மாண்பை நினைவுகூரும் விழாவாகவும் இருந்துவந்துள்ளது.

சுமார் பதினெரு நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஈழத்து மன்னனை, 'கடல் சூழ் இலங்கை கயபாகு வேந்தன்' என்ற தமிழ்மன்னன் காலத்திலிருந்தே, இவ்விழா பெரும் வெற்றிவிழாவாக—நன்றிகூறும் விழாவாக நடைபெற்றுவந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் பல உள. பின்பு அரசன் அனுராதாவின் காலத்திலே, தானீட்டிய வெற்றிகளைக் கொண்டாடும் முகமாக, கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்கு விழாவெடுத்தனன். இவ்விழாக்கள் ஈழத்தின் இந்திர விழாவோவென ஐயுறும்வண்ணம் நடாத்தப்பெற்றதாக நாம் அறிகிறோம். இவ்விழாவே 'பெரகரா' என்னும் இன்றைய விழாவாகப் பரிணமித்தது.

தொடர்ந்து பதினைந்து நாட்கள்வரை நடைபெறும் இவ்விழா முதல் ஐந்து நாட்களும், கும்பால் பெரகராவெனவும், அடுத்த ஐந்து நாட்களும் ரன்டோலி பெரகராவெனவும், இறுதி நாட்கள் மகாபெரகராவெனவும் பெயர்பெறும்.

பதினெட்டாம் நூற்றாண்டில், கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கனது காலத்திலேயே ரண்டோலி பெரகராவும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இவ்விழாவின் ஊர்வலத்தில் கௌதமபுத்தரின் புனித தந்தத்தை, பட்டத்துயானை தாங்கிவர, பிற ஆலயங்களின்ஊர்வலமும் பின்தொடரும். இப்பொழுதும் தந்தத்தைத் தாங்கிவரும் யானைக்கு 'ராஜா' என்றே நாமம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனைத்தொடர்ந்துநாத, விஷ்ணு. கதிர்காம பத்தினித் தேவாலயங்களினது ஊர்வலங்கள் பின்தொடரும் பிந்தியநாலும், இந்துக்கள் தெய்வங்களான சிவன், விஷ்ணு, முருகன், கண்ணகி ஆகியவற்றைக் குறிப்பன என்பது கூறாமலே விளங்கும்.

இவற்றிலிருந்துநாம், இவ்விழா பலநூற்றாண்டு காலங்களாக, பௌத்த - இந்து சமயப் பண்பாடுகளையும், சிங்கள - தமிழ்க் கலாசாரங்களையும் இணைத்து ஒன்றுபடுத்தி வந்திருக்கிறதென்றால் மிகையாகாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திப் படிகள் ஏறிக்கலைப் பணியாற்றும் கிருஷ்ணமூர்த்தி!



## அமைச்சராக

கணேஷ்

நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துஉருகுகிறது. இசையெனும் தென்றல் என்னை இழுத்துக்கொண்டு செல்கிறது. தாளமும், இராகமும், பாவமும் சேரும்பொழுது மனிதமனம் லயப்பட்டுவிடும். பொருளோடுசேர்ந்த பாட்டு பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல, துன்பக்கவலைகளையும் துடைத்தெறிந்துவிடுகிறது. "நீயல்லால் தெய்வம் இல்லை, எனது நெஞ்சே நீவாழும் எல்லை" 'தனை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள்' என்ற நிலையில் மேடையின் ஓரத்தில் நான்நிற்கின்றேன். 'யார் பாடுவது? நல்லாயிருக்கு' சாதாரண மனிதர் ஒருவரின் விமர்சனம். கிருஷ்ணமூர்த்திதான்' திரும்பாமலே பதில் கூறிவிட்டு மற்றொருவர் இசையில்கலக்கிறார். இராகத்தின் அசைவுகளை காதுகள் வாங்கி என் மனத்தைதொடர்ந்துநிரப்புகின்றன.

### இனிமையான குரல்


கொககுவில் திரு. இராஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஒரு ஓர் இசைக் கோஷ்டியை அமைப்பதற்கே துணையாகியுள்ளது அவரது குரல்தான். இசை வளரவேண்டும் என்ற ஆர்வம், இசையை மக்கள் வளர்க்கவேண்டுமென்ற நோக்கம் இவைதான் திரு. கிருஷ்ணமூர்த்தியைஎங்கெல்லாமோ சென்று தொடர்ந்து பாடவைத்துக் கொண்டிருக்கிறது. தேவைப்படும் பொதுநல ஸ்தாபனங்களுக்கெல்லாம்குரல் கொடுத்து உதவியிருக்கிறார் கிருஷ்ணமூர்த்தி. இவ்வித சந்தர்ப்பங்களில் ஒன்றில்தான் நான் கிருஷ்ணமூர்த்தியை சந்தித்தேன். மேடைக்கு மட்டுமல்ல, எங்கும் அதே குரலைத்தான் பயன்படுத்துகிறார். நகைச்சுவை கலந்த பேச்சு, வசீகரிக்கும் குழந்தைப்பார்வை இவையெல்லாம் இசையோடு கிருஷ்ணமூர்த்தி தேடிவைத்திருக்கும் சொத்துக்கள்.

### மெல்லிசைச் செல்வன்

'மாணிக்கவாசகர் குருபூசையில் அன்று நிகழ்ந்ததோ முற்றிலும் புதுமையானதொரு நிகழ்ச்சி. திருவாசகத்தேன் என்ற அந்த நிகழ்ச்சியைத் தயாரித்தளித்தவர் நமது இந்து வாலிபச் சங்கப் போஷகரவர்கள். தெரிந்தெடுத்த திருவாசகப் பாடல்களுக்கு ஆசிரியரவர்கள் உரைவிளக்கமும் கூறி அவற்றை மெல்லிசைச்செல்வன் இராசஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள், கண்ணன் கோஷ்டியினரின் பக்கவாத்தியங்களுடன் நிகழ்த்தினர்கள். உள்ளத்திற்கு மாத்திரமின்றி செவிக்குந் தித்திக்கும் "திருவாசகத்தேன்' என்பதை அன்று கேட்டவர் அனைவரும் உணர்ந்தனர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் முடிவு இது. 1964-ம் வருடத்தில் அவர்கள்வெளியிட்ட 'இந்து இளைஞன்' என்ற சஞ்சிகையில் இப்படி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டியுள்ளார்கள். மாணவர்களிடம் பாராட்டுப் பெறுவது அவ்வளவு சுலபமல்ல!

இசையின்பால் கொண்ட அன்பால் எத்தனையோ அழைப்புகளுக்கு இணங்கி எங்கெல்லாமோ சென்று கச்சேரிகளை நிகழ்த்தும் கிருஷ்ணமூர்த்தி தான் மானசீகமாக மதிப்பளித்துவரும் சீர்காழி கோவிந்தராஜனைச் சந்தித்த சந்திப்பை நினைவிருத்திப் போற்றுகிறார். அவரிடம் இருந்துபெற்ற 'உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு' என்ற நல்ஆசியை என்றுமே மறக்காது வைத்திருக்கும்மூர்த்தி அதற்காக உழைத்தும் வரு



கிறார் என்பது அவரது இசையைக் கேட்டவர்களுக்குத் தெரியும்.

### நாதஸ்வர இசையுடன்

பக்க்வாத்தியங்களுடன் சேர்ந்துபாடிப்பழகிப்போன கிருஷ்ணமூர்த்திக்கு தமது வழக்கமான பக்கவாத்தியக் கோஷ்டியினர் இல்லாமல் பாடவேண்டிய சந்தப்பமும் ஏற்பட்டிடுக்கிறது' இதற்காக அவர் தடுமாறவில்லை, தைரியமிழக்கவில்லை· றக்குவாளையிலுள்ள ஓர் ஆலயத்தில்தான் இந்த சந்தர்ப்பம் ஏற்பட்டது. கச்சேரியை நாதஸ்வரப் பின்னணியில் நல்லபடி முடித்துவிட்டார், மூர்த்தி. எம். பி. பாலகிருஷ்ணு நாதஸ்வர தவில் குழுவினருக்கு தமது நன்றியை இப்போதும் தொடர்ந்து சொல்லிவருகிறார், கிருஷ்ணமூர்த்தி.

### சினிமாவில்....:

வானொலியிலும் கிருஷ்ணமூர்த்தியின் மெல்லிசை ஒலித்திருக்கிறது.

இசை வெறும் பொழுதுபோக்காகமட்டும் இருக்கக்கூடாது, மக்கள் உள்ளத்தையும் அது சீர்படுத்தவேண்டும் என்ற நோக்கம் கொண்டுள்ள கிருஷ்ணமூர்த்தி இந்த சேவையுடன் மட்டும் நின்றுவிடவில்லை, இலங்கையில் நல்ல தரமான தமிழ்ப் படங்கள் தயாரிக்கவேண்டும், நல்ல நாடகங்கள் மேடையேற்றப்படவேண்டும் என்ற ஆவல் கொண்டுள்ளவர் அவர். ஈழத்தில் தயாரிக்கப்பட்ட 'நிர்மலா' வில் தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபராகவந்த கிருஷ்ணமூர்த்தி அந்தப் பாத்திரத்துக்கு ஒளி காட்டினார் என்பது பலரது அபிப்பிராயம்.

தமிழ் இசையும், நாடகமும் உயர்ந்து வளரவேண்டும் என்று கனவு கண்டு கொண்டுவரும் கிருஷ்ணமூர்த்தி முதலில் 'இன்பக் கனவு' மூலம் மேடையேறினார் வீரமைந்தனின் அமைச்சராகத் தோன்றி, அப்பாத்திரத்துக்கு மெருகூட்டினார். சொர்ணலிங்கத்தாரின் 'வழிதெரிந்தது' நாடகத்தில் நடித்து கலையரசின் ஆசியைப் பெற்றார். 'எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கும் வல்லமை உன்னிடம் இருக்கிறது' என்பது கலையரசு கூறிய கருத்து.

சென்ற ஆண்டு மேடையேற்றப்பட்ட கவின் கலை வளர்ச்சி மன்றத்தினரின் 'வாக்குறுதி' நாடகத்தின் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்களுள் கிருஷ்ணமூர்த்தியும் ஒருவர்.

### நந்தனாராக....

பக்தியின் படிகளில் ஏறிவரும் கிருஷ்ணமூர்த்தி மக்களிடையே தெய்வபக்தியை மேலும் வளர்க்க முழுமூச்சாக தயாரித்துவரும் 'நந்தனார்' நாடகத்தை இன்னும் இரு மாதங்களில் தாம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்போவதாகக் கூறுகிறார். இதில் நந்தனாராக நடிப்பவர் கிருஷ்ணமூர்த்தி தான்.

ஆரம்பத்தில் பொழுதுபோக்காக இவர் வளர்த்த கலை இப்போது இவரது ஒரு பகுதி நேரத்தை எடுத்துக் கொண்டுவருகிறது. மக்கள் ஆதரவு இவரது ஆர்வம், உழைப்பு இவையெல்லாம் கிருஷ்ணமூர்த்தியை உயர்த்திக் கொண்டேயிருக்கும் நல்லவற்றைத் தேட முற்படும்பொழுது வெற்றி எப்பொழுதுமே காத்து நிற்கும்.

# கொழும்பு மேடைக்கு வந்த தமிழினத்தின் முக்கிய பிரச்னை




## நாடக விமர்சனம்: கந்தன் கருணை

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நெல்லியடி சண்முகானந்த நாடகசபையினரின் புகழ்பெற்ற 'கந்தன் கருணை' என்ற சமூகசீர்திருத்த நாடகம் நடைபெற்றது. இலவசமாக நடைபெற்ற இந்த நாடகத்திற்குத் திரளான ரசிகர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் நாடகத்தின் ஆரம்பம்முதல் முடிவுவரை ஒவ்வொரு காட்சியையும் மிகவும்ஆவலோடுபார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த நாடகம் மக்களின்மனதை எவ்வளவு தூரம்கவர்கிறது என்பதைபார்க்கக்கூடியதாகவிருந்தது.

இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதிப்பிரச்னையை மையமாக வைதது எழுதப்பட்டது. பழைய காத்தவராயர் கூத்துப் பாடல்களின் இராகத்தைப் பின்பற்றிப் புதிய கருத்துக்களுடன் பாடப்பட்ட இனிமையான கவிதைகள் நாடகம் முடிந்த பின்பும் ரசிகர்களின் வாயில் முணுமுணுக்கப்பட்டன, ஆலயத்துள் தரிசனம் செய்வதற்குப்பிரவேசிக்கவரும்சிறுபான்மைத் தமிழர்களை உயர்சாதிப்பிரமுகர் ஒருவர் 'நந்தி' போல மறித்துநின்று தடைசெய்வதையும் அச்செய்கைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் சிறுபான்மைமக்கள்,

"மந்தி மறிக்குதையே
-வாசலில்
குந்தியிருந்து
மந்தி மறிக்குதையே
சந்தி சிரிக்குதையே-அந்த
மந்தியைப் பார்த்துச்
சந்தி சிரிக்குதையே"

என்று பாடுகிறார்கள் காத்தவராயர் மெட்டுக்கு ஏற்ப 'டுண்' 'டுண்' என்று உடுக்கு வாத்தியம் ரீங்காரமிட்டு இனிமை சேர்க்கின்றது.

இந்த நாடகத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அறிவதில் ரசிகர்கள் மிகவும் ஆவலோடு இருந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களைக் கோயிலுக்குள்விடுவார்களா? அல்லது அவர்கள் நுழைவார்களா? என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனல் மக்களின்எழுச்சிக்கு ஆதரவாக முருகன் தனது வேலாயுதத்தைக் கொடுத்து தொடர்ந்து போராடுங்கள். வெற்றி கிடைக்கும் வரைபோராடுங்கள் போராட்டம்தான்

(10-ம் பக்கம் பார்க்க)

வருக! வருக! திரண்டு வருக!

இரு மலிவு விற்பனை

ரொலறம்ஸ் பொகுமால்ஸ்

2-8-70 முதல் 15-8-70 வரை

சகல விற்பனைப் பகுதிகளிலும் விலை மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளது

| சேலைப் பகுதி | சூட்பகுதி | சேட்பகுதி |
| --- | --- | --- |
| நைலக்ஸ் சேலை | சின்டெக்ஸ் | மான்கற்றன் |
| பட்டர் நைலோன் சேலை | பரகொன் | லின்ரன் |
| வொயில் சேலை | குண்டன்மாலிஸ் | டியூரே |
| கைத்தறிச் சேலை | ஆகியோரின் | ஸ்கைவே |
| மணிப்புரி சேலை | தயாரிப்பு | ஈஸ்ரர் |
| இன்னும் அனேக தினுசுகள் | | இன்னும் அனேக தினுசுகள் |

அத்துடன்
சகல விதமான றெடிமேட் உடுப்புகளுக்கும்

ரொலறம்ஸ்

46, மெயின்வீதி — யாழ்ப்பாணம். போன்: 7099.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசுவாமித்திரர் காலத்தில் உற்பத்தியான கரும்பு

## முதலில் அதை சாகுபடி செய்த பெருமை இந்தியாவுக்கே

— பேராசிரியர் எம். ஆர். பாலகிருஷ்ணன் —

கரும்பின் ஆதி உற்பத்திஸ்தானம் பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பாலினேஷியா என்று கூறப்படும் தீவுகள். இன்றும் இத்தீவுகளில் பலவிதக் கரும்புரகங்கள் சுயேச்சையாய் வளருகின்றன. தற்காலத்தில் மனிதனால் உலகெங்கும் சாகுபடி செய்யப்பட்டு வரும் கரும்புரகங்கள் பாலினேஷியாவில் ஆதிகாலத்தில் தோன்றிய ரகங்களின் சந்ததிகள் என்று கூறுவதற்குத் தக்க விஞ்ஞான சான்றுகள் உண்டு.

பாலினேஷியாவில் தோன்றி உலகமெங்கும் பரவியுள்ள செடி கரும்பு ஆனால் முதலில் கரும்பு பயிராகச் சாகுபடி செய்யப்பட்ட பிரதேசம் இந்தியாவேயாகும். காடுகளில் சுயேச்சையாக வளர்ந்த ரகங்களை மனித உபயோகத்திற்காக மற்றப் பயிர்கள் போல முதன்முதலில் வளர்த்து அதைப் பண்படுத்திய பெருமை பாரத நாட்டிற்கே சேரும். வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படும் சொற்களையும் பதங்களையும் கொண்டு கரும்பு சாகுபடி கிட்டத்தட்ட கி.மு 2000லிருந்தே இந்தியாவில் நடைபெற்றது என்று யூகிக்க இடமுண்டு. சர்க்கரை என்னும் பதம் ஆதியில் வடமொழி வார்த்தையாகிய ஸர்க்கரா என்னும் சொல்லிலிருந்து வந்தது ஸர்க்கரா என்றால் பொடி மணல் என்று பொருள். இலத்தீன் பாஷையில் ஸக்காரம் என்று பெயர். அதிலிருந்துதான் ஸுக்ரோன் என்னும் ஆங்கிலப் பதம் வந்தது. ஸர்க்கரா என்னும் பதம் தோன்றும் முன்னமேயே கண்டா (Khanda) என்னும் பதம் சர்க்கரையைக் குறித்ததாகும். இதிலிருந்துதான் கண்டி (Candy) என்னும் ஆங்கிலப்பதம் தோன்றியிருக்க வேண்டும்

கரும்பின் உற்பத்தியைப் பற்றி ஒரு புராணக்கதையுண்டு- சூரியவம்சத்தரசனான திரிசங்கு விசுவாமித்திர மகரிஷியைக் குருவாகக் கொண்டு அவரை மகாபத்தியுடனும், சிரத்தையுடனும் வழிபாடு செய்துவந்தான். அரசனுடைய குணாதிசயங்களையும் நியம நிஷ்டைகளையும் கண்டு மகிழ்ந்த விசுவாமித்திரர் அவனுக்கு வேண்டிய வரமளிப்பதாகக் கூறினார். அரசன் தன் பூதஉடலுடன் ஸ்வர்க்கமாகிய இந்திரலோகம் செல்வதற்குத் தனக்கு விருப்பமென்று வெளியிட்டான். விசுவாமித்திரரும் அதற்கிணங்கி அனுக்கிரகம் செய்தார்: ஆகாயமார்க்கமாய்ப் பூமியிலிருந்து திரிசங்கு இந்திரலோகத்தை நோக்கிப் புறப்பட்டான். விஷயமறிந்த இந்திரனும் மற்றத் தேவர்களும் கோபமூண்டனர். கேவலம் ஒரு மானிடன் தன் உடலுடன் அங்கு வருவது அவர்களுக்கு இஷ்டமில்லை. திரிசங்கு சுவர்க்கவாசலை அடைந்ததும் அங்கு கூடியிருந்த தேவர்கள் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டார்கள். திரிசங்கு தலைகுப்புற அந்தரத்தில் விழ ஆரம்பித்தான். உடனே தன் தபோபலத்தினால் விசுவாமித்திரர் அவன் விழுவதைநிறுத்தி அவ்விடத்திலேயே இன்னுமொரு சுவர்க்கத்தை நிர்மாணித்து விட்டார். இந்திரலோகம் போலவே அதை அமைத்தார் அத்துடன் திருப்தி அடையாமல்இந்திரலோகத்திலேயே கண்டிராத ஓர் அபூர்வதாவரத்தையும்உண்டாக்கினார். அதுதான் கரும்பு விசுவாமித்திரர் காலம் 4000 வருடங்களுக்கு முன்பு என்று சொல்லப்படுகிறது புராணக்கதையில உண்மையிருக்குமானால், கரும்பு தோன்றி எத்தனை வருடங்கள் ஆகியிருக்க வேண்டும். இப்புராணக் கதையைத்தவிர, வேறு கதைகளிலும் கரும்பைப் பற்றிக்குறிப்புகள் தென்படுகின்றன பஞ்சபாணனாகிய மன்மதன், தன் மலர்க்கணைகளை விடுக்க உபயோகித்த வில், கரும்புவில்லே.

இந்தியாவிலிருந்து கரும்பும, கரும்புச் சாகுபடியும் அடுத்தபடியாகச் சீனதேசத்திற்குச் சென்றதாகத்தெரிய வருகிறது. கிடைத்துள்ள சில ஆதாரங்களைக் கொண்டு இதுகிட்டத்தட்ட கி. மு 750-ல் அதாவது 2700 வருடங்களுக்கு முன் சாகுபடி மட்டுமன்று, வெல்லம் தயாரிக்கும் முறையையும்,இந்தியாவிலிருந்துதான் சீனர்கள் கற்றுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் கப்பலில் சடக்கும் ஜனங்கள் தங்கள் பிரயாணத்தின்போது உபயோகிப்பதற்கு கரும்புச் சுமைகளை ஏற்றிச்சென்றார்கள். அதன்சாறு தாகசாந்தியளிப்பதுடன் சோர்வையும் நீக்க உதவியது. இம்மாதிரிப் பிரயாணிகளின் மூலம் இந்தியாவிலிருந்து கரும்பு, பிலிப்பைன்ஸ் சாவகம், ஹவாய் முதலியதீவுகளையடைந்து, அங்கெல்லாம் பயிராக்கப்படடது. இது கிறிஸ்து சகாப்த ஆரம்பத்தில் நேர்ந்தது.

கிழக்கே சென்ற கரும்பு, மேற்குத் திசையிலும் யாத்திரையைத் தொடங்கியது மகா அலெக்சாண்டர் படையெடுப்பின்போது வந்த ஒரு கிரேக்க தளகர்த்தர் எழுதிவைத்ததிலிருந்து கரும்பு அக்காலத்திலேயே இந்தியாவில் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. பாரசீகத்திற்கு முதலில் பரவியது. இது சுமார் 600 கி. பி ஆண்டில் இக்காலத்திலிருந்து அதன வரலாற்றைப்பற்றி ஆதாரமான சரித்திரக் குறிப்புகள் உள இப்பொழுது ஐராக் என்று சொல்லப்படும் தேசத்தில் யூஃப்ரடீஸ் என்னும் நதியின் முகத்துவாரத்தில் கொண்டிஷாபூர் என்னும் நகரத்தில் கி. பி. 600ல் வெள்ளை சர்க்கரை உற்பத்திச்சாலை உலக சரித்திரத்தில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. இச்சாலையை ஆரம்பித்து நடத்தியவர்கள் ஒரு சந்நியாசி மடத்தைச் சேர்ந்த மக்கள்.

பகதாத் நகரத்தை தலைநகரமாகக் கொண்டு சாம்ராஜ்யம் நடத்திய பகலிஃப்கள் காலததில் விவசாய வளர்ச்சி சிறப்பாயிருந்தது. இம்மன்னர்கள் ஆதரவால் கரும்புப் பயிற்சியில், சர்க்கரைத் தொழிலும் உச்சநிலையையடைந்தது பின்பு அத்தேசத்து மக்கள் உற்சாகத்தின்பேரில் மத்தியதரைக் கடல் பிரதேசங்களுக்கு கரும்புபரவ ஆரம்பித்தது. ஐரோப்பாவில் ஸ்பெயின் வரையிலும் ஆபிரிக்காவில் டியூனிஷ்வரையிலும் கரும்புப் பயிற்சியும், சர்க்கரைத் தொழிலும் வளர்ந்துகொண்டே வந்தது. இது 12, 13, 14-ம் நூற்றுண்டுகளில் அக்காலத்தில் இத்தாலி தேசத்திலுள்ள வெனிஸ் நகரம், சர்க்கரை வியாபாரத்திற்கு உலக பிரசித்தி பெற்று, சர்க்கரை உலகிற்கு ஒரு மையமாகத் திகழ்ந்தது கி. பி. 15ம்நூற்றுண்டில் போர்த்துக்கல், ஸ்பெயின் மக்களால் ஆபிரிக்காவிற்கு அருகாமையிலுள்ள மடீரா, கானரீஸ், கேப்வர்டே என்னும் தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததன் தொடர்பாக கரும்பு புது உலகிற்கும் சென்றது. அமெரிக்காவில் கரும்பின் மாசூல் அவ்வளவு அதிகமில்லை. தற்காலத்திலேகூட ஓர் ஏக்கராவுக்கு இருபது இருபத்தைந்து டன்கள்தான் கிடைக்கிறது, ஆனால் 17, 18, 19-ம் நூற்றுண்டுகளில் கரும்பைப் பயிர் செய்த அமெரிக்கவாசிகளுக்கு பிறநாடுகளில் இல்லாத ஓர் அனுகூலம் ஏற்பட்டது. கரும்பு வளர்ச்சியிலிடும் செலவை அமோகமாய்க் குறைக்கும் வாய்ப்பு அவர்களுக்கு உண்டாயிற்று இயந்திர உதவியினாலென்ன சமீபகாலத்தில்தான் விவசாயத்தில் இயந்திரங்கள் உபயோகம் பரவி வருகிறது. அமெரிக்காவில் கரும்புசாகுபடியின் செலவைக் குறைக்க வேறு காரணம் உண்டு அந்நூற்றுண்டுகளில் ஆபிரிக்காவிலிருந்து நீக்ரோ சாதியினரை அடிமைகளாக விலைக்கு வாங்கி அமெரிக்காவிற்குக் கொணர்ந்து தங்கள் வீடு, தோட்டவேலைகளையெல்லாம் செய்ய அமர்த்திக் கொள்வது சகஜமாக இருந்தது.

விவசாயப் பணிகளுக்கும் இவ்வடிமைகள் உபயோகப்படுத்தப்பட்டார்கள். அடிமைஉழைப்பைவிட மலிவானதெது? அடிமைகள் ஒருமனப்பான்மை அமெரிக்க சமூகத்திலேயே வேரூன்றி ஆபிரகாம்லிங்கனுடைய விடாமுயற்சிகளால் அடிமை வியாபாரம் சட்டரீதியாக நீக்கப்பட்டது, அடிமை உழைப்பின் அனுகூலத்தால் அமெரிக்க கரும்பு விவசாயிகளும், சர்க்கரைத் தொழிலதிபர்களும் கொழுத்த இலாபம் சம்பாதித்தார்கள். மற்றநாட்டினர் இவர்களுடன் போட்டியிட முடியவில்லை. வெனிஸின் முக்கியத்துவம் குன்ற ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாகச் சர்க்கரை வியாபாரத்தின் பிரதம ஸ்தானம் மேற்கிலுள்ள அமெரிக்கர்களால் கைப்பற்றப்பட்டது

இப்படியாக இந்தியாவில் நாலாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய கரும்பு கிழக்கிலும்மேற்கிலும்பரவி, வெப்பமண்டல தேசங்களில் பயிர் செய்யப்பட்டு, பூமிக்கே ஓர் அரைக்கச்சை போல அமைந்துவிட்டது. இந்நாளில் உலகில் கரும்புச் சாகுபடியில் [illegible] நிற்கும் தேசங்கள் [illegible]மாறு: இந்தியா, தென் சீனா, தைவான், பிலிப்பைன். ஹாவாய், இந்தோனேஷியா—இவைகளெல்லாம் ஆசியாக் கண்டத்திலுள்ளவை; மத்திய அமெரிக்கா, அமெரிக்க ஐக்கிய தேசத்தின் சிலமாநிலங்கள் கயானா, பிரேஸில், சில்லி பெரு, கியூபா, மேற்கு இந்தியத் தீவுகள்-இவைகளெல்லாம் வட, தென்அமெரிக்காவைச் சேர்ந்தவை; எ

(12-ம் பக்கம் பார்க்க)

பார் அப் புகையிலையின் பண்பு [2]

# மிதமிஞ்சி புகைத்தல் மரணத்துக்கு அழைப்பு

சுவாசப்பை புற்று நோயினால் பிரிட்டனில் ஒரு வருடத்தில் 23,000 பேர் சாகிறார்கள். அதனால் ஏற்படும் மரண விகிதம் வருடத்துக்கு வருடம் அதிகரித்து வருகிறது.

தனிய சுருட்டு மட்டும் புகைப்பவர்களுக்கும் புகைக்கும் வழக்கமே இல்லாதவர்களுக்குமிடையில் மரணவிகிதம் அவ்வளவாக வித்தியாசப்படவில்லை. புகைக்காதவர்களைவிட சுங்கான்புகைப்பவர்களுக்கிடையில் மரண விகிதம் மூன்று மடங்கு அதிகமாயிருந்தது அதாவது புகைக்கும்வழக்கம் இல்லாத ஒவ்வொருவருடைய மரணத்துக்கும் சுங்கான் புகைக்கும் மூவர் மரணமடைந்தார்கள். சிகரெட்டும், சுங்கான் அல்லது சுருட்டுப் புகைப்பவர்களில் ஐந்து முதல் எட்டுப்பேர் வரை இறந்தார்கள். தனி சிகரெட் மட்டும் புகைப்பவர்களில் பத்துப் பேர் இறந்தார்கள்.

லண்டன் ரோயல் மருத்துவக் கல்லூரி நிபுணர்களின் அறிக்கை பின்வரும் விஷயங்களை அழுத்தமாக வற்புறுத்தியது:

■ சிகரெட் புகைப்பதால் நிச்சயமாக சுவாசப்பை புற்றுநோயும்சுவாசக்குழாய் தாபிதமும் உண்டாகின்றன. இருதய சம்பந்தமான நோய்கள் அதனால் அபிவிருத்தி பெறுகின்றன.

■ சிகரெட் புகைப்பவர்களுக்கு இவற்றால் மரணம் உண்டாகும் ஏது அதிகரிக்கிறது.

■ புகைப்பதனால் உண்டாகும் இம்மரணங்களை வைத்தியத்தின் மூலம் தடுக்க வேண்டும் - தடுக்க முடியும்.

■ சரியான புகை வடிகளாலும் (ஃபில்டர்) சிகரெட்டை ஒட்ட இழுக்காமல் விடுவதாலும், சிகரெட்டை விட்டுவிட்டு சுங்கான் அல்லது சுருட்டை புகைப்பதாலும் சிகரெட் புகையின் ஆபத்தைக் குறைக்கலாம்.

ஐம்பது வருடங்களுக்கு முன்பு மிக அபூர்வமாகவே காணப்பட்ட இந்நோய் (சுவாசப்பை புற்றுவிரணம்) இன்று சிகரெட் புகைக்கும் வழக்கம் அதிகரித்துவிட்டபடியால் பல நாடுகளில் மரண விகித அதிகரிப்புக்கு காரணமாயிருக்கிறது மிதமிஞ்சி சிகரெட் இழுப்பவர்கள், புகைக்காதவர்களைவிட முப்பதுவீதம் அதிகமாகவும் சாகிறார்கள்.

### ஆட்சேபனைகள்

ரோயல் மருத்துவக் கல்லூ[illegible] ஈடுபட்டவர்களும் வேறு சிலரும் ஆட்சேபித்தார்கள். பழைய பல்லவியைத்தான் திரும்பவும் பாடிப் பயமுறுத்துகிறார்கள்என்றுகேலி செய்தார்கள் கைத்தொழில் நகரீகம் வளர்ந்துள்ள இந்நாட்களில் தூசியும் புகையும் நச்சுவாயுக்களும்ஆகாய பவனத்தை அசுசிப்படுத்தி விட்டபடியால்தான் அந்தக் கெட்ட காற்றை சுவாசிப்பவர்களுககு சுவாசப்பை நோய்களும் இருதய நோய்களும் அதிகரிக்கின்றன என்று அவர்கள் வாதாடினார்கள்.

இதற்கு, காறறு அசுத்தம் குறைந்தகிராமப்புறங்களிலும் சில நாடுகளிலும் சிகரெட் புகையினால்தான் சுவாசப்புற்றுநோய் அதிகரித்துள்ளதென்று நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். உதாரணமாக பின்லாந்து தேசத்தில் காற்று அசுத்தம் மிகக் குறைவு. அதை ஒருபெரிய கிராமப்புறம் என்றே சொல்லலாம். ஆயினும் பின்லாந்தியர் அளவுக்கு மிஞ்சி சிகரெட் புகைபவர்கள். ஆதலினால் ஐரோப்பாவிலேயே இரண்டாவது அதிகமான சுவாசப்புற்றுநோய் மரணவிகிதம்அங்கே காணப்படுகிறது. சுத்தமான காற்று நிறைந்த கிராமப்பகுதிகளிலும் கூட புகைப்பவர்களின் மரணவிகிதம் பதினைந்து முதல் இருபது மடங்கு அதிகமாயிருக்கிறது.

[illegible] கடுமையான சிகரெட் அல்லது பீடிப் புகையை

### சுவாசப்பை தாபிதம்

உள்ளிளுப்பவர்கள் அடிக்கடி 'கொக் கொக்' என்று இருமி சளி கொட்டிக் கொண்டு திரிவதைக் காணலாம். இதனால் சுவாசக் குழாயும் பையும் தாக்கப்பட்டு அடிக்கடி மூச்சு வாங்குவார்கள். நடுத்தர வயதுக்கு மேற்பட்டவர்கள் பெரும்பாலும் இந்நோய்க்கு உள்ளாகி ஈற்றில் இருதய நோய் வசப்பட்டு மடிகிறார்கள். நாளொன்றுக்கு இருபத்தைந்து சிகரெட்டுக்கு அதிகமாக புகைப்பவர்களின் மரணவிகிதம் புகைக்காதவர்களை விட ஆறுமடங்கு அதிகமானது. வேறு காரணங்களாலும் இந்நோய் ஏற்படக்கூடுமென்றாலும் சிகரெட் புகைத்தல நோயின் தீவிரத்தை அதிகமாக்குகிறது.

### இருதயநோய்

இதுவும் புகைக்காதவர்களைவிட புகைப்பவர்களிடையேதான் அதிகமாகக் காணப்படுகிறது. இருதய நோய் வேறுபல காரணங்களாலும் உண்டாகிறதென்பது உண்மையே! சிகரெட் புகை மட்டும் இதற்கு காரணமில்லை. ஆயினும் இந்நோய் வளர்ந்து தீவிரமடைவதற்கு புகைத்தல் ஒரு முக்கிய காரணம்.

### வயிற்றுப்புண்

புகையிலைப் புகை வயிறு, குடல் முதலியவற்றையு தாக்குகிறது, பசி வந்தவ கள் நாலைந்து புகை இழுத் வுடனே பசி அடங்கிவிடு றது. புகைக்காதவர்களுக் நல்லபசி உ[illegible]டாகி[illegible] புகைத்தவ[illegible]ன் அ[illegible] கத்தை நிறுத்தியவுடனே நன்றாக சாப்பிட்டு உடம் வைக்கிறார்கள். வயிற்றி புண் உண்டாவதற்கு சி ரெட் புகை பிரதானகாரண மில்லாவிட்டாலும் ஏற் னவே புண் இருப்பவர்களை புகைத்தல் மேலும் கடுமை யாகப் பாதிக்கிறது. இவ களுக்குப் புண் வளர்ந் கொண்டே போகுமன் இலகுவில் குணமடையாத

### அமெரிக்காவில்

ஐம்பதுக்கும் எழுபது வ துக்கும் உட்பட்ட 187,78 ஆண்களின் வாழ்க்கை அமெரிக்க புற்றுநோய் ச கம் நாற்பத்து நான்கு மா ங்களாக தொடர்ந்து அ தானித்து வந்தது. இத்த ணைக்குள் இவர்களில் 7,3 பேர் மரணமடைந்தன இவர்களுடைய வாழ்க்கை முறைகளை மேலும் ஆரா ந்தபோது சாதாரணமா 4,657 பேரே இயற்கையா மரணம் அடைந்திருப்பா களென்றும் மீதி 2,665பே மிதமிஞ்சிய புகைத்த லேயே மாண்டனர் எ றும் கண்டுபிடிக்கப்பட்ட

இந்த 2665 பேரில் வீதமானோர் இருதயநோ லும் 13 1/2 வீதமானே சுவாசப்பை புற்றுநோய் ணத்தாலும் மீதிப்பேர் ற்றுப்புண், ஈரல், சலப் தாபிதம் இவற்றாலும் மா டார்கள். இந்நோய்கள் லாமே மிதமிஞ்சிய ரெட் புகையால் உண் னவை,

"சுநாதன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேமதுரத் தமிழோசை—15

# உலகின் தீவுகள் பலவினும் தமிழ் மணம் கமழ்கிறது

‘தேமதுரத் தமிழோசை’ என்ற தலைப்பின் கீழ் உலக நாடுகளில் தமிழ்க்கல்விபற்றி ஆராய்ந்தெழுதப்பட்ட கட்டுரைத் தொடர் இவ்வாரத்துடன் முடிவடைகிறது. இக்கட்டுரைத் தொடரை எழுதுவதற்குத் துணைநின்ற நூல்கள்:- சேவியர் தனிநாயகம் அவர்களின் ‘வெளி நாடுகளில் தமிழ்க்கல்வி (TAMIL STUDIES ABROAD) பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் தமிழ் இலக்கியவரலாறு, தமிழ் உரைநடை வரலாறு, தமிழ் கலாச்சாரம் (TAMIL CULTURE) கால் ஆண்டுச் சஞ்சிகை.

“சிங்களம் புட்பகம்
சாவக-மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி...
..............................
சீனமிசிரம் யவனரகம்-இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசி...”

என உலகத்தில் தீந்தமிழ் பேசும் செந்தமிழ் மக்களின் பரம்பலையும் அவர்கள் அங்கு நாட்டிய புகழையும் மிகப் பெருமையோடு அன்றுபாடினுன் புதுமைக்கவி பாரதி. புலவர்கள் சிலருக்குப் புழுகுவதும் ஒரு கலையே எனவே தமிழர்களைப் பற்றித் தமிழ் பற்றுள்ள தமிழன் பாரதியும் மிகைபடக் கூறிவிட்டான் எனச் சிலர் எண்ணலாம், இவர்கள் இன்று பசுபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகள் பலவற்றிலும் கரிபியன் கடல்பகுதியிலுள்ள தீவுகள் பலவற்றிலும் தமிழர்கள் வாழுகிருர்கள். அங்கு ஓரளவுக்கு கலை கலாச்சாரம், பண்பு ஆகியவற்றைப் பேணுகிருர்கள் என்பதை அறிந்தார்களாஞல் தீர்க்கதரிசியாம் அச்செந்தமிழ் கவிஞன் பாரதியின் கூற்று உண்மையானதென்பதை அறிவார்கள்.

### — குணம் —

இன்று பாரதியார்கூறியது போன்றுமொறிஷஸ் பிஃஜி. கௌடிலோப் (Guadeloupe) மாட்டினி (Martinigue) றினிடாட், யப்பான், நியூகலிடோனியா, தஹிதி (Taheti) ஆதிய தீவுபலவினும் பாரதி பாடியது போன்று தமிழர்கள் சென்று குடியேறி வசிக்கிருர்கள். அன்று புலிக்கொடி மீன்கொடி நாட்டிப் புகழ்பெற்றது போன்று இவர்கள் பெரும்புகழ் ஈட்டாவிடினும் தமிழர்கள் என்ற நாமத்தோடு தம் தனித்துவம் வாய்ந்த கலை கலாச்சாரம், பண்பாடு ஆதியனவற்றை ஓரளவு அன்னிய நாட்டில் இருந்தபோதும் பாதுகாத்து வருகிருர்கள் எனலாம். தமிழர்கள் வாழும் இத்தீவுகள் சிலவற்றில் அவர்களின் குடியேற்றத்தை நோக்குவாம்.

### பிஜிதீவு

பசுபிச்சமுத்திரத்திலுள்ள ஒரு தீவு பிஃஜி. இங்குதமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து சென்று குடியேறிஞர்கள். இங்குகுடியேறிய தென்னிந்தியர்கள் 1926-ம் ஆண்டு தங்களது கலை கலாச்சாரம் மொழி ஆகியவற்றைப் பேணவேண்டும் என நோக்கம் கொண்டார்கள். நோக்கம்கொண்ட அம்மக்கள் ‘இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்’ என்றவொரு சங்கத்தை தங்கள் கலாச்சாரத்தைப பேணவும் தம்மொழியை அழியாது பாதுகாக்கவும் நிறுவிஞர்கள். தென்னிந்திய மொழிகளைப் பேணுதலும் பிஃஜித்தீவிலுள்ள இந்தியர்களுக்கு சமூக, கல்வி முன்னேற்றத்தை அளிப்பதும் மேற்படி சங்கத்தின் நோக்கமாகும். இச்சங்கம் ஆரம்ப, இரண்டாந்தர பாடசாலைகள் பலவற்றை அங்கு நடாத்துகிறது. இப்பாடசாலைகளில் தமிழ்மாணவர்களுக்குத் தமிழ்க்கல்வி சிறப்பாகப் போதிககப்படுகிறது.

மேலும் குறிப்பாகத் தமிழர்களின் கலாச்சாரத்தை, தென்னிந்திய கலாச்சாரத்தை அழியாது பிஃஜித்தீவில் பாதுகாக்க வேண்டுமென நோக்கம் கொண்ட அங்குள்ள தமிழறிஞர்கள் தென்னிந்திய கலாச்சாரசங்கம் என்றசங்கமொன்றைச் சமீபகாலத்தில் நிறுவிதமது கலை கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்து வருகிருர்கள்.

சுவாமி ருத்திரானந்தா இங்கு தமிழில் சிறியதொடு மாதப் பத்திரிகையை நடாத்துகிருர். இப்பத்திரிகைக்கு ‘சங்கம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தின் தமிழ் நிகழ்ச்சிகளைக் கவனிப்பதற்கு சென்னை அரசாங்க சேவையிலிருந்து ஒரு பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது பிஃஜிதீவில் 25000 தமிழ் மக்கள் வாழ்கிருர்கள். இவ்வளவு பெருந்தொகையாகத் தமிழர்கள் வாழ்ந்தபோதும் இங்கு தமிழ்க் கல்வி நல்ல வளர்ச்சியடையவில்லை. ஏனெனில் அநேகதமிழர்கள் பெரும் பான்மையினரான ஹிந்திமக்கள் பேசும்மொழியாகியஹிந்துஸ்தானிமொழியிலேயே நாட்டம் கொண்டுள்ளார்கள்.

### மொறீஷஸ்தீவு

தென்னாபிரிக்காவுக்குக் கிழக்கே இந்து சமுத்திரத்தில் மடகாஸ்கர்தீவு என்ற ஒரு பெரிய தீவு அமைந்துள்

## பிஜிதீவில் சங்கங்களும் – மொறீஷஸ் தீவில் 121 இந்து ஆலயங்களும் தமிழ், சைவத்தை வளர்க்கின்றன

ளது. இத்தீவுக்கு கிழக்கே அமைந்துள்ளது மொறீஷஸ் தீவு இங்கு 1732 ம் ஆண்டு தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் சென்றுகுடியேறிஞர்கள். சென்றுகுடியேறிய தமிழர்கள் அங்கு தம்மொழியுரிமையை இழந்தார்களா? இல்லை. தம் உயிர்நாடியாம் மொழியை இவர்கள் காப்பாற்ற முனைந்தார்கள். வெற்றியும் கண்டார்கள். தனியார் நிறுவனங்கள் தமிழ்ப்பாடசாலைகளை நிறுவித் தமிழ்மாணவர்களுக்குக் கல்விபுகட்டின. பின்னர் பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் இப்பாடசாலைகளுக்கு அரசாங்கஉதவிகிடைத்தது. இத்தீவின் பல பாகங்களிலும் தமிழ்ப்பாடசாலைகள் உள்ளன.

மனிதவாழ்க்கை சிறப்புற சமயமும் முக்கியத்துவம் வாய்ந்ததல்லவா? இதை இங்குள்ளதமிழர்கள்உணர்ந்தார்கள். சைவமும் தமிழும் இருகண்ணெனப் போற்றும் தமிழர் சமுதாயம் இச்சிறிய தீவில் இங்குள்ள தமிழர்களுக்கு 121 இந்து ஆலயங்களையும் 3 கத்தோலிக்க ஆலயங்களையும் நிறுவின. இவ்வாலயங்களில் 50-க்கு மேற்பட்டதில் மாலைவகுப்புகள் மாணவர்களுக்கு நடைபெறுகின்றன தமிழ். இந்தி. உருது, தெலுங்கு ஆகிய இந்தியமொழிக் கல்வியைக் கவனிககல்வியதிகாரிகளும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்,

தமிழ் கல்லூரிகளால் மட்டும் இங்கு வளரவில்லை. மாத வார தமிழ்பத்திரிகைகளும் தமிழை வளர்க்கின்றன. இம்மொறீஷஸ்தீவில் 44,044 தமிழர்கள் வாழுகிருர்கள் என1963-ம்ஆண்டுக்குரிய ஐ. நா. புள்ளிவிபர அறிக்கை கூறுகிறது.

தமிழ்க்கல்வியைப் பத்திரிகைகளும் பாடசாலைகளும் மட்டுமன்றி சங்கங்களும் வளர்க்கின்றன.130 தமிழ்ச் சங்கங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆலயங்களைப் பரிபாலிக்கின்றன. மாலைநேர வகுப்புகள் நடாத்துகின்றன சமூகசேவையிலும் ஈடுபடுகின்றன. இவைகள் தமிழ்மொழி, இலக்கியம், இசை, நடனம் ஆகியவற்றிலும் தமிழ்மாணவர்களுக்கு ஊக்கமும் பயிற்சியும் அளித்துவருகின்றன.

சுருங்கக்கூறின் மொறீஷஸ் தீவில் உள்ள தமிழ்மக்கள் எந்த அளவுக்குத் தங்களால் தமிழர் கலை, கலாச்சாரம், மொழி, பண்பாடு ஆகியவற்றைக் காப்பாற்ற முடியுமோ அந்த அளவுக்கு சங்கங்கள் அமைத்தும் பாடசாலைகள் நிறுவியும், ஆலயங்கள் எழுப்பியும் நடனம ஆகியவற்றைப்பயிற்றியும்காப்பாற்றி வருகிருர்கள்.

### கௌடிலோப், மாட்டினிதீவுகள்

கௌடிலோப், மாட்டினி ஆகிய இரு தீவுகளும் அத்திலாந்திக்சமுத்திரத்தில் வட தென் அமெரிக்காவுக்கு மத்தியிலுள்ள கரிபியன் கடல் பிரதேசத்திலுள்ள பிரான்சிய குடியேற்றநாடுகளாகும். இத்தீவுகளில் தென் இந்தியாவிலிருந்து தமிழர்கள் 19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் சென்று குடியேறிஞர்கள். 1882-ம் ஆண்டின் பிற்பகுதியில் கௌடிலோப் தீவில் 21,084 இந்தியர்களும் மாட்டினி தீவில் 13,111 இந்தியர்களும்வசித்தார்கள்.

தற்போது இத்தீவுகளில் வாழும் தமிழர்கள் மூன்ருே அல்லதுநாலாவதோ சந்ததியினராவர் இவர்கள் தங்களது மூதாதையர்கள் பற்றியோ மொழி பற்றியோ தெரியாதவர் களாகவேயுள்ளார்கள் பிஃஜிதீவு,மொறிஷஸ் தீவுகளில்போன்று தமிழ்க்கல்வி இங்குஇடம் பெறவில்லையென்றே கூறலாம். ஆனல் தமிழர் கலாச்சாரம், மதம் ஆகியன இங்குள்ள சில கல்விமான்களால் சில காலம் இங்கு பேணப்பட்டது. இன்றும் இங்கு சில தமிழ்க் குடும்பங்கள் அங்குள்ளமற்ற இனத்தவருடன் கலப்புமணம் செய்யாதவர்களாகவேயுள்ளனர். மிகவும் குறைந்த அளவினரே தமிழ் பேசக் கூடியவர்களாகவுள்ளார்கள் மற்றத்தமிழர்கள் அங்குள்ள மற்ற இனத்தவரின் கலை, கலாச்சாரம்ஆகியவற்றுடன் ஐக்கியப்பட்டுவிட்டனர். இவ்வாறிருந்தபொழுதும் ரங்கன், மாரிமுத்து. பெருமாள், வீரப்பன், தங்கம்மா, முத்தம்மா போன்ற அவர்களது பெயர்களும் சிலகுணதிசயங்களும் மற்றச் சமூகத்திலின்று இத்தமிழர்களைப் பிரித்தறியக் கூடியதாகவுள்ளன.

அடுத்து கரிபியன் கடற்பகுதியிலுள்ள பிரான்சிய குடியேற்ற தீவுகளாகிய அன்ரீல்ஸ்தீவுகளிலும் தமிழர்கள் வசிக்கிருர்கள். இங்குள்ள தோட்டப்பகுதிகளில் தமிழர்கள் கற்களால் ஆலயங்களை நிறுவியுள்ளார்கள். மாரியம்மனை இங்குள்ளவர்கள் பிரதானமாக வணங்குகிருர்கள். ‘மாரியம்மன்’ தாலாட்டு ‘மாரியம்மன்’ வணக்கத்தின்போது பாடப்படுகிறது. இவற்ருல் இத்தீவுகளில் ஓரளவுக்கு தமிழர் பண்பாடு பேணப்பட்டுவருகிறது எனக்கூறலாம்.

### நியூகலிடோனியா தஹித்திதீவுகள்

இந்த இரு தீவுகளும் பசுபிக்சமுத்திரத்தில் உள்ளன. இவை அவுஸ்திரேலியாக் கண்டத்திற்கு கிழக்கே பிஃஜிதீவுகளுக்குச்சற்று வடமேற்கே அமைந்துள்ளன. இத்தீவுகளிலும் தமிழ் சந்ததியினர் சிலர் வாழ்கிருர்கள். இவர்களின் பெற்ருேர்கள் அங்குள்ள மற்ற இனத்தோடு கலப்புமணம் புரிந்தவர்களாவர் கலிடோனியாவில் பிஃஜித் தீவுகளில் போன்று தமிழ் கல்விபோதிக்கப்படவில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

வெள்ளி மல்லிகை
புதிய வாராந்த சுவை அம்சம்
அ. செ. மு. எழுதுகிருர்.
அடுத்த வாரம் முதல் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்பில் வேல் விழா கொண்டாடப்படுவதேன்?

தம்பி தங்கைகளெல்லாம் கடந்த கிழமை கொழும்பில் வேல்விழா பார்த்துச் சந்தோஷமாகப் பொழுதைக் களித்திருப்பீர்கள். கதிர்காமத்திலுள்ள கந்தனுக்கு தேர். தீர்த்த உற்சவத்தின்போது கொழும்பிலும், கண்டியில் சில பகுதிகளிலும் இந்த வேல் விழா இடம்பெறுகிறது.

வேல் விழாவைக் கண்குளிரக்கண்டுகளித்த குழந்தைகளுக்கு இந்தவேல்விழா இங்கு ஏன் இடம்பெறுகிறது என்று நினைக்கத் தோன்றியிராது. இதோ இதற்கு விளக்கம் நான் கூறுகிறேன்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே கொழும்பில் பெரிய செட்டிமார்கள் வாழ்ந்துவந்தார்கள். இவர்கள் பெரும் பணம் படைத்தவர்கள். இந்தச் செல்வத்தை அனுபவிக்க முடியாமல் இறந்துவிடுவோமோ என்று ரொம்பப் பயந்து உடம்புக்கு ஏதாவது நோய் நொடி வந்துவிடாமல் பாதுகாத்துக்கொள்வார்கள்.

அந்தக் காலத்தில் கதிர்காமத்துக்குச் செல்வதென்றால் இப்போதையது போன்ற போக்குவரத்து வசதிகளில்லை. ஒற்றையடிப் பாதையிலேதான் பிரயாணம் செய்யவேண்டும். காட்டு மிருகங்களின் பயம்! பாதுகாப்போடு சென்றால் பொல்லாத மலேரியாக் காய்ச்சல் தொற்றிவிடுகிறது. இந்த மலேரியாக் காய்ச்சலுக்குப் பயந்தே பணம் படைத்த செட்டிமார் கதிர்காம வேலனைத் தம்மிடத்தே கொண்டுவரச் செய்து இவ்வேல் விழாவைக் கொண்டாடுகின்றனர்.

அன்று தொட்டு இன்று வரையும் இந்த வேல் விழா கொண்டாடப்பட்டுவருகிறது. செட்டிமாருக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்விழா இன்று சிங்களவர், தமிழர் யாவராலும் கொண்டாடப்படுகிறது.

# தாகூரும் காந்தியும்

கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் எண்பதாவது பிறந்த தினத்தின்போது, காந்திஜி. 'எண்பது போதாது, நூற்றாண்டு பூர்த்தியாக வேண்டும்' என்று வாழ்த்து அனுப்பினார்.

குருதேவ் தாகூர் அதற்குப் பதிலாக ''மிக்க நன்றி எண்பது ஆண்டுகள் வாழ்வது அதிகப் பிரசங்கித்தனம் நூற்றாண்டு வாழ்வது பொறுக்க முடியாத குற்றம்'' என்று எழுதினார்.

0 0 0

''உலகம் நேர்வழியில் சென்றுகொண்டிருக்கிறதா. அன்றிக் கெட்ட வழியில் செல்கிறதா'' என்று காந்திஜியிடம் ஒருவர் கேட்டார்.

''இறைவன் அருளாளன் அவன் இருக்கிறான், என்று என் உள்ளத்தில் நம்பிக்கை இருக்கும்வரை உலகம் கெட்ட வழியில் செல்லுவதாக சான்றுகள் கிடைப்பினும்; அது நேர்வழியில் சென்று கொண்டிருக்கிறது என்றுதான் நான் நம்புவேன்!'' இவ்வாறு காந்திஜி பதிலளித்தார்.

# தெரிந்து கொள்ளுங்கள்!

பூமி

பூமி பரிபூரண வட்டமல்ல குட்டை வடிவில் 231/2 பாகை சாய்ந்துள்ளது பூமியின் வட துருவத்திலிருந்து தென்துருவம்வரை அதன் விட்ட அளவு 7900 மைல்கள். பூமி தனது அச்சில் ஒரு சுற்றை 24 மணி நேரத்தில் சுற்றி முடிக்கிறது. அப்படி இல்லாது புதன் கிரகத்தைப்போல் மிக மெதுவாகச் சுற்றினால் பூமியில் தாவரங்கள் உயிரினங்கள் ஆகியவை வாழ இயலாது. பூமியின் மேல் ஓட்டின் அளவு மூன்றுமுதல் இருபத்தைந்து மைல்களாகும்.

சூரியன்

சூரியன் பூமியைப்போல் 13,00 000 மடங்கு பரப்பளவுள்ளது சூரியன் 27 நாட்களுக்கு ஒருமுறை தன்னைத் தானே சுற்றிக்கொள்ளும், சூரியனின் உட்பாகத்தில் பல கரும்புள்ளிகள் உண்டு இவற்றிற்குச் சூரியப்புள்ளிகள் என்று பெயர். சூரியன் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகச் சுழல்கிறது. சூரியனின் ஈர்ப்பு விசையால்தான் பூமி ஒரேநிலையில் சுற்றுகிறது. சூரியன் நடுவிலும் மற்ற கிரகங்கள் அதனைச் சுற்றிலும் அமைந்துள்ளன. இவ்வமைப்புக்கு சூரியமண்டல அமைப்பு என்று பெயர். சூரியனில் ஒரு மில்லியன் பூமிகளை அடைக்கலாம் (அவ்வளவு பெரியது) சூரியனின் மேற்பரப்பு உஷ்ணநிலை 10,000 டிகிரி உட்புறத்தின் உஷ்ணநிலை 25 மில்லியன் டிகிரி பரன்ஹீட் சூரியனின் வெப்பம் 30 சதவீதம் அதிகரித்தால் போதும் உலகில் எல்லா உயிரினங்களும் அழிந்து விடும்.

## ஆபத்து அதிகரிக்கிறது

சிகரெட் பிடிப்பதால் தொண்டையில் அல்லது நுரையீரலில் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளபோதிலும் உலகின் சிகரெட் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

கடந்த ஆண்டில் சமார் 300,000 கோபி சிகரெட்டுகள் உற்பத்தியாகியுள்ளதாகத் தெரியவருகிறது. இது 1968-ம் ஆண்டின் உற்பத்தியைவிட 3 சதவீதம் அதிகமெனக்கணக்கெடுக்கப்பட்டுள்ளது பிரிட்டனில் மாதம் தோறும் 2 கோடியே 31 லட்சம் மக்கள் 1000 கோடி சிகரெட்டுகளை வாங்கிப் புகைத்துவருகிறார்கள்.

— குறள்கதை —

# தலை சிறந்தது!

— பெருந்தேவி —

முத்துவும் முருகனும் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது முருகன் முத்துவைப் பார்த்து, 'முத்து, உன்னண்ணன் அரசாங்க உத்தியோகத்தை ராஜினாமாச் செய்துவிட்டு வந்துவிட்டாராமே! ஏன்?' என்றான்.

அதற்கு முத்து, 'டாக்டரின் யோசனைப்படிதான் வேலையை விட்டு விட்டு வந்துவிட்டார். உத்தியோகம் அவருடம்புக்குச் சரிவராது. காலைதொடக்கம் மாலைவரை கதிரை மேசையில் உட்கார்ந்திருக்க வேண்டுமாம். கடும் வெய்யில் காலங்களில்கூட கோர்ட்டும் சூட்டும் அணிந்திருக்க வேண்டுமாம். மாதம்முடிய நல்ல சம்பளந்தான். ஆனால் அது டாக்டர் 'பீஸு'க்கே போதாது.

'உத்தியோகத்தை உதறி விட்டு வந்து இங்கே சும்மா குந்தியிருக்கப் போகிறாரா?'

'இல்லை! ஐயாவோடு வயலில் வேலைசெய்யப் போகிறார். நன்றாக வியர்வை சொட்ட வேலை செய்ய வேண்டுமாம். நல்ல காற்றோட்டமான இடத்தில் படுத்துறங்க வேண்டுமாம்' மாமிசத்தை ஒழித்து நல்ல நாட்டரிசிச் சோறும், காய்கறியும் சாப்பிடவேண்டுமாம். இப்படி டாக்டர் கூறிவிட்டார். இந்த வசதியெல்லாம் சன நெருக்கடியுள்ள கொழும்பில் கிடைக்குமா? எனவேதான் அண்ணர் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வந்து விட்டார்.'

'இப்போதுதான் எனக்கும் ஞாபகம் வருகிறது. நேற்று ஆசிரியர் வகுப்பில் ஒரு குறள் சொல்லித் தந்தாரே!'

உழவுத் தொழில் தான் தலைசிறந்தது என்று கூறும் குறள்தானே! இதோ.

'சுழன்றும் ஏர்ப்பின்ன
துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

# உங்களுக்குத் தெரியுமா?

**வினா**

1. இலங்கை முதற் பிரதம மந்திரி யார்?
2. இலங்கை முதல் அரசன் யார்?
3. இலங்கை முதல் மகா தேசாதிபதி யார்?
4, உலகத்திலேயே முதற் பெண் பிரதமர் யார்?
5 இலங்கை வாழ் முதல் மகாதேசாதிபதி யார்?
6. இலங்கையின் கடைசி மன்னன் யார்?

**விடை**

1. திரு. டி. எஸ் சேனநாயக்கா.
2. விஜயன்.
3. சேர். மொங். மேசன் மூர்.
4. திருமதி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.
5. சேர். ஒலிவர் குணதிலகா.
6. ஸ்ரீ. விக்கிரமராஜசிங்கா.

மாணவ மாணவிகளே!

நீங்கள் அனுப்பும் கட்டுரை, கவிதை மற்றும் விஷயங்களுடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புமாறு வேண்டுகிறோம். கூப்பனோடு வரும் விஷயங்கள் மட்டுமே கவனிக்கப்படும்.

**மாணவர் மலர்**

பெயர் ........................................

விலாசம்: ........................................

........................................

........................................

பாடசாலை: ........................................

........................................

........................................

கையொப்பம் வகுப்பு ஆசிரியர்/அதிபர்

# எங்கள் தாத்தா

[பி. மகாலிங்கம்]

தாத்தா எங்கள் தாத்தா
தடியூன்றி நடக்கும் தாத்தா
வெள்ளைத் தலைத் தாத்தா
வெள்ளை உள்ளத் தாத்தா

விடுகதைகள் போடும் தாத்தா
வீரக் கதைகள் சொல்லும் தாத்தா
பள்ளி அறியாத் தாத்தா
பலதும் அறிந்த தாத்தா

துள்ளிச் செல்லும் சிறுவர் காண
துடிதுடிக்கும் தாத்தா
அள்ளி அணைத்து முத்தம் தருவார்
ஆவலுடனே தாத்தா.



ரஷ்யாவிலுள்ள கஸ்கஸ்தாவின் மட்பாண்டப் பொருள்கள் உலகப் புகழ் பெற்றவை கஸகஸ்தா மாதரின் மென்கரங்கள் கண்கவர் சித்திர வேலைப்பாட்டமைந்த மட்பாண்டங்களையும் அழகுப் பொருள்களையும் செய்து குவிக்கின்றன. இப்படத்தில் கஸகஸ்தா மட்பாண்டத் தொழிற்சாலையில் மாதர்கள் பலர் தம்மை மறந்து சித்திர வேலைப்பாடுகளை மட்பாண்டங்களில் தீட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் வரும் வரை காத்திருக்கலாமா?

நமது பிழைகளை, நமது குற்றங்களை நாமே திருத்திக்கொள்வதுதான் பெருந்தன்மையாகும், மற்றவர்கள் சுட்டிக் காட்டிப் போராட்டம் நடத்தி, சட்டம்கொண்டுவந்து திருத்துமளவுக்கு இருக்கக்கூடாது. அப்படியான நிலையொன்று உருவானல் பெண் சமுதாயம் முழுவதுமே வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையேற்படும்

இது என்ன பெரியபீடிகையாகவிருக்கிறது என நினைக்கிறீர்களா? விஷயம் இன்று எமது நங்கையர் பலர் மத்தியில் தலைவிரித்தாடும் மினி மோகமாகும். இம்மினி மோகத்தைஒழிக்கவே கலாச்சார அமைச்சர் சட்டம் கொண்டு வரவேண்டுமென சமீபத்தில் வழக்கறிஞர் சங்கமொன்று அமைச்சரைக் கோரியுள்ளது. அதற்குமுன்னர் பல பௌத்த குருமார்கள் சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. இவைமட்டுமா? சில இயக்கங்கள் 'தொடைகாட்டியாடையைப் படைநாட்டி ஒழிப்போம்' என மினிமங்கையரை நோக்கிப் போர்க்கோலம் கொண்டுள்ளன.

மினியாடை மங்கையர்கள் இவ்வெதிர்ப்புக்கள் பூதாகாரமாக உருவெடுக்க முன்னர் தமது கலாச்சாரத்துக்கடுக்காத, காலாடை குறைந்து, மேலாடையின்றி பலரும் இன்று வெறுத்தொதுக்கும் இம்மினியாடையை விட்டுவிடுவார்களா? அல்லது சட்டம் வரும்வரை காத்திருப்பார்களா?

சட்டம்ஒன்று வருமுன்னர் இவ்வாடையை நீக்கி மங்கையர் நமது பண்பாட்டுக்கு அடுக்காத இந்த ஆடையை விடுத்து எமது பண்பாட்டுக்குரிய சேலைகளை அணிந்து அழகாய்த் திகழவேண்டும்.

சமீபத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டுத் திரும்பிய தமிழ் நாட்டு அமைச்சர் திரு மு. கருணநிதி 'மேலைநாட்டு கலாசாரத்தை அறிமுகப்படுத்தும் அளவுக்கு இருக்கவேண்டுமேயொழிய அதனுடன் ஐக்கியப்பட்டுவிடக்கூடாது' எனத் தனது மக்களுக்குக் கூறியுள்ளார். மேலை நாட்டாரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய எத்தனையோ நல்ல அம்சங்கள் இருக்கக்கூடியதாகப் பன்னடைகள்போன்று, எமக்குத் தேவையற்ற எமது பண்பாட்டைக் குலைக்கும் சில நடையுடை பாவனைகளையா நாம் கற்றுக்கொள்ளவேண்டும், மாதர்சங்கங்கள், மற்றும் மகளிர் மன்றங்கள் ஆகியன இதுதான் சிறந்த நாகரீகமெனக் கருதி தவருனவற்றைச் சிக்கனப்பிடித்துக்கொள்ளும் இளம் உள்ளங்களை தவறைச் சுட்டிக் காட்டிப் பண்படுத்தினுர்களானல் நங்கையர் பலர் தமது தவறையுணர்ந்து திருந்துவார்கள். நங்கையர்களும் பெரியவர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கேட்டு அதன் வழிநடந்து தம் சமுதாயத்தின் பண்பாட்டையும், கலாசாரத்தையும் பாதுகாக்கவேண்டும். சட்டம் வரும்வரை காத்திருக்கக் கூடாது.

## குறித்துக் கொள்ளுங்கள்

கண்ணடிப் பாத்திரங்கள் அழுக்கடைந்து மங்கலாகக் காணப்படுமானல் அப்பாத்திரங்களின்மீது உப்புத்தூளைத் தூவிப் பிரஷினல் போட்டுத் தேய்த்தால் அழுக்கு நீங்கி கண்ணடிப் பாத்திரங்கள் பளபளவென்றிருக்கும்,

O

ஷூ பொலிஷ் உலர்ந்து இறுகிவிட்டால் கவலை வேண்டாம். துணியொன்றை எடுங்கள் அதில் பெட்ரோலை நனைத்து பொலிஷின்மீது தடவினல் போதும். பொலிஷ் இளகிவிடும். பின் உபயோகிக்கலாம்.

O

குண்டூசிகள் துருப்பிடிக்காமல் இருக்க வேண்டுமானல் குண்டூசிகளைப் போட்டுவைத்திருக்கும் டப்பாவுக்குள் கொஞ்சம் வெண்கட்டி தூளை (சாக்பீஸ்) தூவி வைத்துவிட்டால் குண்டூசிகள் துருப்பிடிக்காது.

தமேபசி சிடர்



தயாரிப்பு: குணம்

# தித்திக்கும் தேன்

கலப்படமில்லாத சுத்தமானதேன் எப்போதும் வீட்டில் இருக்கவேண்டும். உடலில் எங்கேயாவது அடிபட்டுவிட்டாலும், ஆழமாக அறுத்துக்கொண்டு விட்டாலும், தீயினல் புண்ணுகிவிட்டாலும், உடனே நல்ல தேனை அந்த இடத்தில்தடவி விடுவது நல்லது. இந்தத் தித்திக்கும் தேனுக்கு எப்படிப்பட்ட புண்ணையும் குணப்படுத்தும் சிறந்த சக்தியுண்டு. டாக்டர்கள் இல்லாத ஊர்களில் உள்ளவர்களுக்கு இந்தத் தேன் ஓர் உயிர் காக்கும் மருந்து. அந்தக் காலத்தில் நெருப்புக்காய்ச்சல் வந்தவர்களுக்குக் கூடத் தேனைக் கொடுத்துத் தான் அக்காய்ச்சலைக் குணப்படுத்தினர்கள். நெருப்புக்காய்ச்சல் கிருமிகளை இத்தேன் 48மணித்தியாலங்களில் கொல்லுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சீதபேதிக் கிருமிகளைத்தேன் பத்து மணித்தியாலங்களில் ஒழித்துக்கட்டிவிடுகிறதாம்.

நோய்களை மட்டுமன்றி உடற்கட்டைப் பேணவும் தேன் பயன்படும். சிறுத்தவர்களை பருக்கவும், பருத்தவர்களைச் சிறுக்கவும் செய்யவல்லது தேன் உடல் பருத்தவர்கள் காலையில் எழுந்ததும் சிறிதளவு தேனைத் தண்ணீருடன் கலந்துபருகினல் நாளடைவில் அவர்களது உடற்பருமன் குறையும். உடல் மெலிந்தவர்கள் இரவில் தேனைப் பாலில் கலந்து குடித்தால் அவர்களது உடல் மெலிவு படிப்படியாக நீங்கும். இருதயத்தை ஸ்திரமாக வைத்திருக்கவும் இரத்தத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும் தேன் சிறந்ததென வைத்தியர்கள் கூறுகின்றனர்.

# மலரும் மணமும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மலருந்தறுவாயிலுள்ள போதுகளில் கலந்திருக்கும் மணம்போல, இறைவன் உலகு, உடல், உயிராகியவற்றில் கலந்திருக்கிருன் என்கிருர் தாயுமானவர். போது மலரும்போது உண்டாகும் மணம் மிக இனிமையுடையதாக இருக்குமாதலின், போதில் மணத்தை உவமை கூறினுர். கைலாயத்தில் வீற்றிருக்கும் பெருமான், சொல்லும் பொருளுமாய், உடலும் உயிருமாய் மலரும் மணமுமாய் இருக்கிருன் என்று நக்கீர தேவர் கூறுகிருர்

இறுதியாக. இன்னெரு பெரியவர் மலர் உவமையை அழகாக எடுத்துக் கூறுகிருர். அவர்தாம் நம் தருமையாதீனக் குருமுதல்வராம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர். இறைவனும் முத்திபெற்ற ஜீவனும் விறகும் தீயும், வெந்நீரும் சூடும், தேனும் தித்திப்பும், மலரும் மணமும், ஆகாயமும் காற்றும், கண்ணுங் கதிரொளியும் எஞ்ஞான்றும் வேறற நிற்றல்போல இருக்கும்என்ருர்.

''இந்தனத்தி னங்கி எரி
யுறுநீர் தேனிரதங்
கந்தமலர்ப் போதுவான்
காலொளிகண்-
சந்ததமும்
அத்துவித மாவதுபோல்
ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை'

— சிவபோகசாரம்.

'விறகிற்றீ' முன்னர்விளங்காது நின்ற சிவம்தானே பின்னர், ஆன்மாவின்மாட்டு விளங்கித் தோன்று மாற்றிற்கும், வெந்நீரின்கட் சூடு ஆன்மாவின் அறிவிச்சை செயல்களின்தன்மைய ஆக்குமாற்றிற்கும், தேனில் தித்திப்பு அவ்வழிச் சிவன் இத்தன்மைத்தொன்றுரைக்க வாராத இன்ப போகமாய் விளையு மாற்றிற்கு, மலரின் மணம் அப்போகம் மேன்மேலும் புதிதுபுதிதாய் விளையுமாற்றிற்கும், காற்றிற்கு வான் ஆன்மாவைச் சிவன் தனது திருவடி வியாபகத்துள் அடக்கிக்கொள்ளுமாற்றிற்கும், கண்ணிற்கதிரொளி அம்முத்திக் காலத்தும் ஆன்மாவிற்குச் சிவத்தினது உபகாரம் இன்றியமையாதவற்றிற்கும் உவமையாம்' என்று கூறிய தருமையாதீனஉரைக் குறிப்பை எண்ணிப்போற்றுக.

இறைவனே அருளினுலன்றி அவன் அருளை நாம் பெறமுடியாது. ஆனல் அருள்பெற்ற அடியார்கள் தம் திருவாயினின்றும் மலர்ந்த சொற்களாகிய மலர்களைக்கொண்டு தொடுத்த பாக்களாகிய மாலையை நாமும் இறைவன் திருவடிகளில் சாத்தி வழிபட்டு அதனைப் பெறுவோமாக.

- நன்றி 'ஞானசம்பந்தம்'

# ஸ்ரீலங்கா சோஷலிஸ குடியரசின் நாயகி!

மக்களின் அமோக ஆதரவைப் பெற்று உண்மையான மக்கள் பிரதமராக ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் திருமதி ஸ்ரீமாவோ தமது காலஞ்சென்ற கணவர் 'அரசியல்மேதை' அம



ரர் பண்டாரநாயக்காவின் கனவை நனவாக்குவதில் துணிச்சலான மிக மிகத் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிருர்

சுதந்திரமான சுயாட்சியான ஸ்ரீலங்கா சோஷலிசக் குடியரசை நிறுவுவதற்கு முதல் நடவடிக்கையாக அரசியல் நிர்ணயசபையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

தொடர்ந்து வெற்றிப் பாதையில் துணிச்சலான நடவடிக்கை மேற்கொள்ளும் திருமதி ஸ்ரீமாவோவின் வெற்றிக்கும் அவரிட

பாமா ராஜகோபால்

முள்ள சில தனித்தன்மைகளுக்கும் தொடர்பு இருக்கத்தான் வேண்டும்.

கடவுள் பக்தி மிக்கவர் அவர்! கதிர்காமத்துக் கந்தனையும் கண்டியையும் அனுராதபுர புனித போதிமரத்துப் புத்தனையும் வணங்க அவர் தவறுவதில்லை. தேர்தலுக்கு முன்பும் பதவி ஏற்கும் போதும் இதனை அவர் வழக்கமாகக் கொண்டு வந்துள்ளார்.

இம்முறையும் கதிர்காமக் கந்தனிடமும் கண்டிக்கும் போதிமரத்துப் புத்தனிடமும் தனது சகாக்களுடன் சென்று ஆசிபெற்று வந்தார். வழிபடும்போது அவர் முகத்தைப் பார்த்தால்தெரியும் வெறும் வேஷமல்ல! உண்மையான பக்தியுடன்

## எங்கள் பிரதமர்— 9

பிரார்த்தனை செய்கிருர் என்றுஉண்மையானபிரார்த்தனையும் அவருக்கு ஒருவித

த்தில் இவ்வித வெற்றியை அளித்தது எனலாம்.

தலைக்குச் சரியென்று பட்டதை எவரது எதிர்ப்புக் கிடையிலும் செம்மையாகச் செயல்படுத்தி விடுவார்.

இவரது முன்னேற்றத்தில் இவ்வித செயற்திறனுக்குப் பெரிய பங்குண்டு.

எப்பொழுதுமே அமைதியாக இருப்பார். அதிகம் வாய்விட்டுச் சிரிக்கமாட்டார். எப்போதாவது இருந்துவிட்டுத்தான் சிரிப்பார்

ஆனல்—


ஆழமான சிந்தனை; அழகான புன்சிரிப்பு தன்னை மதிப்பவரை நன்கு மதிப்பவர்; நெருங்கிப் பழகுபவர்களுடன் மனம்விட்டுப் பழகுவார். சந்தேகம் ஏற்பட்டுவிட்டால் அவர்களை எட்டி உதைக்கத் தயங்கமாட்டார்

இத்தனைக்கும் மேலாக அவரிடம் உள்ள பெரும் சொத்து! நல்ல உள்ளம்! புனிதமான நெஞ்சம்!

Modern Scientific School of Tailoring

நவீன தையற் கலாசாலை

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பிரபல தையற்கலை நிபுணர்களால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லா உடைகளையும் விஞ்ஞான முறையில் வெட்டுவதற்கும் தைப்பதற்கும் சிறந்த விளக்கப் படங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படுகிறது. கொழும்பில் இயங்கிக்கொண்டிருக்கும் இத்தையற் கலாசாலை இப்பொழுது யாழ் நகரில் இதன் கிளைக் காரியாலயத்தை ஆரம்பித்துள்ளது. ஏழு மாதங்களில் நீங்களுமொரு சிறந்த தையற்கலை நிபுணராகி, 'டிப்ளோமா' பத்திரத்தையும் பெறலாம்.




விபரங்களுக்கு நேரில் விண்ணப்பியுங்கள் அல்லது எமக்கு எழுதுங்கள்.

இக்கலாசாலை அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பெற்றது.

மனேஜர்: M. S. T.
95/3, Stanley Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறு நாவல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முடிவை எண்ணும்போது என்உயிர் துடிக்கிறது.'

'ஆனால் இருக்குமிடம் தெரியாமல் எங்கேயென்று அவளைத் தேடுவது தீபா!'

'முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை நண்பா, அதற்காக நாமும் ஒற்றுவேலையையும் துப்பறியும் வேலையையும் செய்வோம் இன்று முதல் கொழும்பைச் சுற்றியுள்ள இடங்கள் ஒவ்வொன்றும் போய்த் தேடிவரவேண்டும் நண்பா. எனக்காக நீ ஏதும் உதவி செய்யவேண்டும் என்று விரும்பினால் இதைத்தான் உன்னிடம் கோருகிறேன். தினமும் நீ என்னுடன் வரவேண்டும். என்ன சொல்லுகிறாய்? நான் யோசித்தேன். எனது வேலையே ஊர்சுற்றும்வேலை. சும்மா இடங்களைப் பார்ப்பதுபோல தீபனையும் அழைத்துக்கொண்டு போவதில் ஒரு சிரமமும் இல்லை. எனவே நானும் தீபனின் யோசனைக்கு உடன்பட்டேன்.

அன்றிலிருந்து கொழும்பைச் சுற்றியுள்ள இடங்களில் மூலைமுடுக்குகளில் எல்லாம் எனது 'கார்' துப்பறியும்வேலை செய்துகொண்டிருந்தது.

நாட்கள் கடந்துகொண்டிருந்தன. எங்கள் முயற்சியில் பலன் கிடைக்குமென்பதற்கு அறிகுறியே காணவில்லை. எத்தனையோ கட்டுக்காவலுடன் எங்கோ ஒரு மூலையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் திலகவதியைக் கண்டுபிடிப்பதென்பது லேசானகாரியமா? வரவர எனக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது. ஆனால் தீபன் மட்டும் நம்பிக்கையை இழக்காமல் தினமும் ஒவ்வொரு இடமாகத் தேடிக்கொண்டு வந்தான்.

அன்று வழக்கம்போல் எங்கள்தேடும்படலத்தை முடித்துக்கொண்டு திரும்பி வரும்போது திலகவதி வேலை செய்துவந்த கம்பனி மூடப்பட்டிருந்தது. ஏதோ விஷயம் நடந்திருக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டோம்: அடுத்தநாள் காலைப் பத்திரிகையில் 'அரசாங்கத் தகவல்களை அறிந்துகொள்ள முயற்சி' என்ற தலைப்பில் அக்கம்பனியின் முக்கிய அதிகாரிகளைக்கைது செய்திருப்பதாகச் செய்தி வெளியாகியிருந்தது.

தீபன் பரபரப்படைந்தான். சி. ஐ. டி. அதிகாரிகளின் முயற்சியால் இந்த ஒற்றர் கோஷ்டி பிடிபட்டிருக்கவேண்டும் என்றும், திலகவதியைப்பற்றி ஏதும் புதிய தகவல்கள் அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்றும் அவன் நம்பிக்கை. எனவே தீபனின் காரியாலயத்துக்குச் சென்று நிலைமையை அறிய வேண்டுமென்று கூறினான்,

தீபன் இன்னமும் 'இன்டெர்டிக்' செய்யப்பட்டிருந்தான் என்றாலும் காரியாலய நண்பர்களை சந்தித்து விஷயத்தை அறிந்துகொள்ளலாம் என்று இருவரும் புறப்பட்டோம்.

ஆனால் என்ன. துரதிருஷ்டம் அங்கும் திலகவதியைப் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை! ஒற்றர் கோஷ்டியைச் சேர்ந்த பலர் பிடிபட்டிருக்கின்றனர் என்றும், இதற்குக்காரணமாயிருந்த அந்த வர்த்தகக் கம்பெனியின் அதிகாரிகளைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதையும் தவிர வேறு எதுவும் அந்தக் காரியாலயத்திலுள்ளவர்களுக்குத் தெரியவில்லை.

போலீஸ் ஸ்டேசனில் மேலும் ஏதும் தகவல் கிடைக்கக்கூடும். ஆனால் அங்குபோய் இதையெல்லாம் விசாரிப்பது அவ்வளவு உசிதமாகப் படவில்லை. எனவே விஷயங்கள் தானாக வெளிவரும்வரை பொறுமையைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

அன்று வழக்கம்போல் எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். கல்பிட்டியில் அன்று எங்கள்வேலை இருந்தது. இரண்டாம் குறுக்குத் தெருவில் புகுந்து ஊரைச் சுற்றிக்கொண்டு வரும்போது ஓர் இடத்தில் சனங்கள் கும்பலாக நின்றுகொண்டிருந்தார்கள். நெருங்கி விசாரித்ததில் அரசாங்கக் காரியாலயத்தில் ஒற்றுவேலை செய்தது சம்பந்தமாக போலீசார் அங்கே ஒரு வீட்டைச் சோதனை போடுகிறார்கள் என்று அங்கு நின்றவர்கள் கூறினார்கள்.

தீபனுக்கு வெறியே பிடித்துவிட்டது. காரில் இருந்து இறங்கி நடந்த தீபனைப் பிடிப்பதற்கு நான்ஓடவேண்டியிருந்தது. அவ்வளவு வேகமாகப் போய்க்கொண்டிருந்தான் தீபன்.

அந்தவீடு தெருவை விட்டு உள்ளே சற்றுத் தூரத்தில் ஓர் ஒதுக்குப்புறமாக இருந்தது. அதன்முன் நின்ற பிரமாண்டமான ஆலமரமும் வளவுநிறையக் கிடந்த சருகுகளும் அந்த வீட்டிற்கு ஒரு பாழடைந்த தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. மற்றப்படி அந்தவீடு ஒரு பழங்காலக் கோட்டையைப் போல் பருத்த தூண்களுடனும் கனத்த சுவர்களுடனும் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. வீட்டைச் சோதனை போடவந்த பொலிசார் இருக்குமிடமே தெரியாமல் வெளியே வேடிக்கை பார்ப்பதற்காகத் திரண்டு கொண்டிருந்த சனக்கூட்டத்தைப் பிளசிரமப்பட்டுப் பிளந்து கொண்டு உள்ளே சென்றால் வீட்டுக்குள் யாரையும் நுழையவிடாமல் ஒரு பொலிஸ்காரன் குறுக்கே நின்று சனங்களை விரட்டிக் கொண்டிருந்தான்.

அந்தநேரம் தீபன் தவித்த தவிப்பைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் பொலிஸ்காரன் தீபனை உள்ளே அனுப்ப மறுத்துவிடவே அவனுடன் சண்டை பிடிக்கத் தொடங்கினான் தீபன். இந்தச் சச்சரவைக் கேட்டு வெளியே வந்த ஓர் அதிகாரி தீபனைக் கண்டதும் 'ஓ! திருநாவுக்கரசு நீ எப்படி இங்கு வந்தாய்?' என்று கேட்டார். அவர் தீபனின் காரியாலயத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி.

அவ்வளவுதான் ஒரே பாய்ச்சலில் உள்ளே சென்றான் தீபன். அவனைத் தொடர்ந்து நானும் சென்றேன்.

'ஸேர், இங்கே என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகத்தான் வந்தேன். அந்தப் பெண் திலகவதி...இங்கே...'' என்று தட்டுத்தடுமாறிக் கொண்டே அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமல் அறைகள் ஒவ்வொன்றையும் கண்களால் சோதனைபோட்டான் தீபன்.

தீபனின் படபடப்பைக் கண்ட அதிகாரி அவனை அமைதியாக இருக்கும்படி சைகை செய்தார்.

''மிஸ்டர் திருநாவுக்கரசு: ஒற்றர்கோஷ்டியைச்சேர்ந்த எல்லோரையும் இந்த சி.ஐ.டி.க்காரர்கள் பிடித்துவிட்டார்கள்கடைசிநபர்கள் இந்த வீட்டிலேயே சிக்கினார்கள். அந்தப் பெண்ணும் இங்கேதான் அகப்பட்டாள்.''

''ஸேர் அவனை நான் பார்க்கவேண்டும் ... அவர்களைநான் பார்க்கவேண்டும்.''

''நீர் ஆத்திரப்பட வேண்டாம் திரு[illegible] மேல் உன்மேல் ஒரு கேள்வியும் வராது. அந்தப்பெண்ணிடமிருந்து இப்போதுதான்ஸ்டேட்மென்ட்வாங்கி முடித்தார்கள். அந்த 'ஸ்டேட்மென்ட்' ஒன்றே உம்மை நிரபராதியாக்குவதுமல்லாமல் உமது உத்தியோகத்தையும் திருப்பிக் கொடுத்துவிடும்.''

''தாங்கியூ ஸேர்! தாங்கியூ ஸேர்...எனக்கு உதவிசெய்த அந்தப் பெண்ணை நான் பார்க்கவேண்டுமே...''

''அவசரப்படாதீர் மிஸ்டர் திருநாவுக்கரசு! உள்ளே பொலிஸ் அதிகாரிகள் மற்றவர்களிடம் 'ஸ்டேட்மென்ட்' எடுத்துக்கொண்டிருக்கின்றனர் எல்லாம் முடிந்தபின் போகலாம்,''

தீபன் அந்த அதிகாரியை ஒரு பார்வை பார்த்தான். நல்லவேளை அவர் தீபனைக் கவனிக்கவில்லை. தீபனின் அவசரம் அவருக்கு என்ன தெரியும். தீபன் பல்லைக் கடித்துக்கொண்டு முள்ளின் மேல் நிற்பதுபோல் நின்றான். நானும்கூட அப்படித்தான் நின்றேன்.

சிறிது நேரத்தில் உள்ளேயிருந்தவர்கள் வெளியே வந்தார்கள். சி,ஐ டி, அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் புடைசூழ வந்த கைதிகளில் ஆறுபேருக்கும் கைவிலங்குகள் மாட்டப்பட்டிருந்தன. சற்று உன்னிப்பாகக்கவனித்த தீபன் அவர்கள்தான் அள்ளி நின்ற பயமுறுத்திய பயங்கர உருவங்கள் என்பதை அறிந்து கொண்டான். அதை என்னிடமும் கூறினான். ஆக உண்மையில் அவனைச்சுற்றிக் கொண்டு நின்றவர்கள் சி. ஐ டிக்காரர்கள் அல்லவென்றும் ஒற்றர் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெளிவாகியது.

''என் வேலை முடிந்துவிட்டது. இன்ஸ்பெக்டர், இனி உங்கள்வேலையைத்தொடங்கலாம்'' என்று சிரித்துக்கொண்டே கூறிய சி.ஐ.டி. அதிகாரி தொடர்ந்து, ''இதில் வேடிக்கை என்னவென்றால், எங்கள் இலாகா எவ்வளவோ சிரமப்பட்டு இந்தச் சதிகாரர்களை மோப்பம் பிடித்து அவர்கள் ரகசியக் கோட்டையைக் கண்டுபிடித்தது. ஆனால் இந்த முரடர்களோ அந்தப் பெண்தான் பொலிசுக்கு தகவல் கொடுத்துவிட்டாள் என்று அந்தப் பெண்ணுடன் சண்டை பிடித்துக்கொண்டிருந்தார்'' என்றார்.

ஒவ்வொரு நிமிடமும் திலகவதியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த தீபன் அவள் வராததைக் கண்டு பொறுமையிழந்தான். அந்த அதிகாரியிடம் மெதுவாக, ''ஏங்கே ஸேர் அந்தப் பெண்ணைக் காணோம்'' என்று கேட்டான்.

அவர் மிகவும் நிதானமாக, ''இந்த முரடர்கள் அடித்து நொறுக்கியதில் அவளுக்குக் கொஞ்சம் சீரியசான காயம். அவளைப் பக்கத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்'' என்று அவர் கூறினார்.

துடித்துப்போனான் தீபன். அங்கிருந்த யாரையும் இலட்சியம் செய்யாமல் என் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

ஓட்டமும் நடையுமாகச் சென்று காருக்குள் ஏறிக்கொண்டு ''சீக்கிரம் சீக்கிரம்'' என்று பதறினான். நான் ஆஸ்பத்திரியை நோக்கிக் காரைச் செலுத்தினேன்

ஸேர்ஜிகல் வார்ட்டில் 12-ம் கட்டிலில் திலகவதி கிடத்தப்பட்டிருந்தாள். ''இவர்தான் திலகவதி'' என்று நேர்ஸ் கூறியதும், தன்கண்களையே நம்பமாட்டாதவனாய் விழித்து விழித்துப் பார்த்துவிட்டு அடுத்த கணம் 'திலகவதி' என்று அலறிக்கொண்டு அந்தக் கட்டிலை நோக்கிப் பாய்ந்தான் தீபன்.

எனக்குக்கூட என் கண்களை நம்பமுடியவில்லை என்று சொன்னால்தான் பொருத்தமாயிருக்கும். திலகவதியை இதற்கு முன்னர் பல தடவை நான் பார்த்திருக்கிறேன். அழகே உருவான அந்த சுவர்ண விக்கிரகம் இப்போது மெலிந்து உருக்குலைந்து உடலெங்கும் பலத்த கட்டுடன் கட்டிலில் சரிந்து கிடந்தது.

வெகு நேரத்தின்பின் கண்களைத் திறந்தாள் திலகவதி. தீபனைக் கண்டதும் அவள் கண்களில் ஓர் அதீத ஒளி பளிச்சிட்டது. ''தீபன்: நீங்களா?...... கடவுளின் கருணை எல்லையற்றது......... உங்களை ஒரே ஒரு முறை பார்க்கக் கொடுத்துவைக்க வேண்டும்... என்று இடைவிடாது இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன்......... நான் பாக்கியசாலி...நான் பாக்கியசாலி...

திலகவதியின் தீனக்குரல் மெலிந்து தேய்ந்தது.

''ஐயோ திலகா!'' என்று அலறினான் தீபன்.

ஆம், தீபச்சுடர் அணைந்துவிட்டது: அத்துடன் தீபன் என்ற தீபமும் லக்கிய உலகில் இறந்து மறைந்துவிட்டது.

(யாவும் கற்பனை)

# உலகின் தீவுகள்..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தஹித்தியில் 1967-ம் ஆண்டு ஏறக்குறைய 20 தமிழ் வம்சாவளிக்குடும்பங்கள் காணப்பட்டன. இவர்களுக்கோ அல்லது இவர்களின் பிள்ளைகளுக்கோ தங்கள் மூதாதையர்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. பெற்றோர்களுக்குத் தங்கள பெற்றோர்களைப்பற்றியும் அவர்கள தமது தாய்நாட்டை நினைத்துப் போற்றிப்புகழ்வதையும் பற்றியும் தெரிந்திருந்தார்கள. இவர்கள் இந்தியர்கள். தமிழர்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு இவர்களது குடும்பப்பெயர்களான பவளக்கொடி ராஜப்பன், சாமிநாதன், தெய்வி, வீரசாமி போன்ற பெயர்களே உதவிபுரிகின்றன.

## றினிடாட்

றினிடாட்தீவு கரீபியன் கடற் பிரதேசத்தில் தென் அமெரிக்காவுக்குமிக அருகே காணப்படும் ஒரு சிறியதீவாகும். பிரான்சிய குடியேற்ற நாடாகிய இங்கு பியாசோ விமான நிலையத்துக்கருகாமையில் சென்னை குடியேற்றம் என்ற பெயரோடு தமிழர்கள் வாழ்கிறார்கள். மதராஸ் சிவாலயம் எனஅழைக்கப்படும் சிவாலயம் ஒன்றும் இத்தமிழர் குடியேற்றப் பகுதியில் காணப்படுகிறது. கோபிசெட்டிபாளையம் என்னும் இடத்தில் பிறந்த சேஷ ஐயர் என்பவர்1910ம் ஆண்டு றினிடாட்டில் குடியேறி மேற்படி ஆலய அலுவல்களைக்கவனித்துவந்தார். இங்குள்ள தமிழர்கள் மரணச்சடங்குகள், விவாகங்கள் போன்றவற்றில் தமிழர் பண்பாட்டைக் காப்பாற்றி வருகிறார்கள்.

## யப்பான்

சமீபகாலமாக யப்பானிய பல்கலைக்கழகங்களின் இந்தியவியல் கல்விப் பிரிவுகளில் தென்னிந்திய கல்விக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அறிஞர்களில் யப்பானின்தலைநகரம டோக்கியோவிலுள்ள பல்கலைக்கழகத்தில் கீழைத்தேச வரலாற்றுப் பிரிவில் கடமையாற்றும் டாக்டர் நொபுறு கருஷிமா தமிழ்க் கல்வியில் பேரார்வம்கொண்டவர். இவர் தென்னிந்தியாவில் தங்கியிருந்து தமிழைக்கற்றவர். தமிழைக்கற்றதோடு மட்டுமன்றி தமிழரின் மானிடவியல், கலாச்சாரம் ஆகியவைபற்றி அறிதலிலும் கூடிய கவனம் செலுத்தியவர். மேலும் தமிழ் நாட்டின் பொருளாதாரவரலாறு பற்றி ஆராய்வதிலும், கற்பதிலும் இங்குள்ள பல்கலைச் கழகங்களிலுள்ள அறிஞர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

யப்பான் தவிர்ந்த மேற்குறிப்பிட்ட ஏனைய தீவுகளில் பிஃஜிதீவு, மொறீஷஸ்தீவு, ஆகிய இரண்டிலுமே ஓரளவுக்குத் தமிழ்க் கல்வி இடம்பெறுகிறது. மற்றத் தீவுகளில் தமிழ்க்கல்வி என்ற சொல்லுக்கேயிடமில்லை. ஆனால் அங்கு வாழும் தமிழ் சந்ததியாரினிடையே குடும்பப்பெயர்களும், அவர்களது சில குணுதிசயங்களும் அவர்களைத் தமிழர்கள் எனக்காட்டிக்கொடுத்துவிடுகின்றன.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும்அவர்கள்தம்மொழி, கலாச்சாரம் ஆகியவற்றைப் பேணுவிடினும் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்த சில அம்சங்கள் அவர்களைத் தமிழர் எனக் காட்டிக்கொடுத்துவிடும் என்பதை மேற்குறிப்பிட்ட தீவுகள்பற்றிக் கூறப்பட்டதிலிருந்து யாவரும் அறிந்துகொள்ளலாம்.

(முற்றும்)

# விசுவாமித்திரர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ப்து. தென்னுபிரிக்கா, மொறீஸ்தீவு இவைகள் ஆபிரிக்க பிரதேசங்கள். ஆஸ்திரேலியாவிற்கும் 18-ம் நூற்றுண்டில் பரவி குயின்ஸ்லாந்து மாநிலத்தில் முக்கிய பயிராய்த் திகழ்ந்தது.

தற்போதைய மதிப்பின்படி உலகின் சர்க்கரை உற்பத்தி 3 கோடி 60 லட்சம் டன்களாகும். இவற்றில் மூன்றிலிரண்டுபங்கு அதாவது 2 கோடி 40 லட்சம் டன்கள் கரும்பிலிருந்து கிடைக்கிறது. மீதி 1கோடி 20 லட்சம் டன்கள் பீட்ருட்டிலிருந்து தயார் செய்யப்படுகிறது. இவ்விரண்டு பயிர்களும் ஸுரோஸ் என்னும் சர்க்கரையைக் கொடுக்கக்கூடியவையென்றாலும், இரண்டிற்கும் வெவ்வேறு சீதோஷ்ணநிலை வேண்டியிருக்கிறது. பீட்ருட் மட்டான வெப்பமுடைய நாடுகளில்தான் வளர்கின்றது. இந்நாடுகளில் விவசாயம் இப்பொழுதே தீவிரமாக நடைபெற்றுவருவதால், பீட்ருட் பலரின் விஸ்தீரணத்தைஅதிகரிக்க அதிக வாய்ப்புஇல்லை, கரும்பு வெப்பமண்டலநாடுகளில் நன்றாக வளரும்.

வெப்ப மண்டலத்தில் இன்னும் அநேகநாடுகளில் சாகுபடிக்கேற்ற நிலங்களெல்லாம் தரிசாய்க் கிடக்கின்றன. இங்கெல்லாம் கரும்பு சாகுபடி விஸ்தரிக்கச் சாதக நிலைமையுண்டு. வருங்காலத்தில் உலகின் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க வேண்டியநிலைமை ஏற்படும். தற்போதைய உற்பத்தி மக்களின் தேவைக்குப் போதாமலிருக்கின்றது. இது திருப்திகரமான நிலையில்லை. இவ்வுணவுப் பொருள் மனிதவாழ்க்கைக்குமிகஅவசியமானது ஆரோக்கியம், வேலைசெய்ய சக்தி இவைகளையளிக்க சர்க்கரைக்கு மிஞ்சினது எதுவுமில்லை. உலக மக்கள் அனைவரும் தடையின்றி அடையக்கூடிய விலையில் அது கிடைக்கவேண்டிய நிலைமை ஏற்படவேண்டும்.

நன்றி: சிவாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி மூலம் கல்வி

— க. பரமோதயம் —

(அதிபர், யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை)

1929-ம் ஆண்டிலேயே ஒரு கல்விக்குழு பின்வருமாறு தகவுரை செய்தது. (1) பள்ளிக்கூடப் படிப்பின் ஆரம்ப கட்டங்களில் எல்லா மாணவர்களுக்கும் சுயபாஷை மூலமே கட்டாயமாகக் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும். (2) ஒரு நாட்டில் பேசப்படும் மொழிகளிலே மாணவர்கள் தேர்ச்சி பெறுவதைக் கல்வி முறை குறிக்கோளாய்க் கொண்டிருந்தபோதிலும் அதே சமயம் சிறுபிராயம் தொடக்கம் பயின்ற மொழியினோடு கொண்ட நெருங்கிய தொடர்பினால் ஏற்படக்கூடிய மரபுவழியான அல்லது அறிவுத்துறை சம்பந்தமான நன்மைகளைப் பறிகொடாது பார்த்துக்கொள்ளல்வேண்டும்,

1943-ல் வெளியிடப்பட்ட கன்னங்கரா அறிக்கை, ஆங்கிலத்திற்குப் பதிலாக தாய்மொழியே போதனாமொழியாய் இருத்தல் வேண்டும் என தகவுரை செய்தது. இம்முடிவிற்கு முன்னுரையாக அவ்வறிக்கை மொழிந்தவை ஈண்டு நோக்கற்பாலது. குடியாட்சிக்குப் பொருத்தமான ஒரு கல்வி முறையை தகவுரை செய்வதே எமது கடமையாக நாம் வகித்துள்ளோம். பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வினைப் பொருட்படுத்தாது ஒவ்வொரு மாணவனும் தன்னாலியன்ற அளவிற்கு உடல், மன, அறவளர்ச்சியினை எய்துவதற்கு கல்விமுறை வழி வகுப்பதோடு, தான்பெற்ற கல்வியின்பயனாக தனது திறமைகளை நாட்டின் நலனுக்காக எவ்வளவிற்குச் சாத்தியமாகுமோ அவ்வளவிற்குப் பயன்படுத்த வழிகோல வேண்டும்.

தெளிவின்பொருட்டு தாய்மொழி என்னும் பதம்பற்றிய சில வரையறைகளையும் அது வகுத்தது. (1) இரு பெற்றோரும் சிங்களவர்களாக அல்லது தமிழர்களாக இருந்தால் அப்போது நிலைமைக்கேற்ப சிங்களம் அல்லது தமிழே தாய்மொழியாகும் (2) பெற்றோர் வெவ்வேறு இனத்தவர்களாக இருப்பின் வீட்டு மொழியே அதாவது பெற்றோர்களும் பிள்ளைகளும் வழக்கமாகப் பேசும் மொழியே தாய்மொழியாகக் கருதப்படும். (3) மற்ற ஆட்களைப் பொறுத்தவரை பின்வரும்மொழிகளில் ஏதாவது ஒன்றை - ஆங்கிலம் சிங்களம், தமிழ் அல்லது மலே - பெற்றோர் தாய்மொழியாகத் தேர்ந்தெடுக்கலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின்பு அப்பொழுது கல்வியமைச்சராக விருந்த திரு. நுகவெல 1950-ல் நாடாளுமன்றத்திற்குக் கல்வி வெள்ளையறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தார். 1943-ம் ஆண்டிலே விசேட குழு எடுத்துரைத்த கருத்துக்கள் பெரும்பாலானவையே இவ்வெள்ளையறிக்கையின் தகவுரைகளில் இடம்பெற்றிருந்தன. ஆளுமையைச் செழித்தோங்கச் செய்வதே வெள்ளையறிக்கையின் பொதுவான குறிக்கோளாய் இருந்தது. போதனா மொழியைப்பற்றிக் குறிப்பிடும்போது இவ்விடயம்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுவதாக அது கூறிற்று. இப்பிரச்னையை அணுகுவதில் இரு கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவேண்டுமென அது தகவுரை செய்தது. அவையாவன: (1) வீட்டுமொழியிலேயே பிள்ளை கல்விபயில வேண்டும். ஏனெனில் அம்மொழியில்தான் தன்னகத்தே எழும் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் பிள்ளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்த முடியும். 2) உலகத்தைப் பொறுத்தவரை எமது நாட்டின் புவியியல்நிலையை உணர்வோமாயின் ஓர் அனைத்துலக மொழி இன்றியமையாததாகும். அப்பொழுதுதான் மேற்கத்திய சிந்தனைச் செல்வங்களை நாமும் பெறமுடியும். ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும், வீட்டுமொழியே போதனா மொழியாகவும் இருத்தலே குறிக்கோளாய் இருந்தது.

தாய்மொழி மூலமே ஒரு மாணவன் மிகத் திறமையாகக் கற்று தன்னறிவையும் தன்னிறைவையும் எய்தலாம் என்பது மறுக்கவொண்ணாதது. வீட்டிற்கும் பள்ளிக்கூடத்திற்குமிடையே மொழியைப் பொறுத்தவரை இடைவெளியில்லாதிருப்பதனால் வீட்டிலே நிலவும் சூழல் கல்வி பயில்வதிலும் செல்லுபடியாகின்றது.

மொழி சமூகத்தைத்தழுவியிருக்கிறதென்றும், சமூகம் கட்டியெழுப்பப்படுவதற்கான தொடர்புகள் மொழி மூலமே வெளிப்படுகின்றன எனவும் F. L. பிலோஸ் என்னும் அறிஞர் கூறியிருப்பது ஈண்டுநோக்கற்பாலது. இதனை அவர்மேலும்விளக்குகையில் மனிதசமுதாயம் மொழியின்றி உயிர்வாழ முடியாதென அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். ஒரு மொழியைக் கற்பதென்பது ஒரு புதிய சமூகத்தில் அங்கம் வகிப்பதாகும் என அவர் மேலும் கூறுகின்றார். சமூகத்திற்கும், தொடர்புகொள்ளுதலுக்கும்ஆங்கிலத்தில் கையாளப்படும் சொற்கள் ஒரே அடியிலிருந்து பிறந்தவை என்பது இரத்தினச் சுருக்கமாய் இவ்வுண்மையை உணர்த்துகின்றது என அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

தனது அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாய் மொழிகள்விளங்குமாயின்ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் ஒரு பிள்ளை தேர்ச்சியடைவது சாத்தியமாகும். ஆனால் பள்ளிக்கூட சூழலிலே மட்டும் ஒரு மொழியினைக்கற்பதென்றால் மாணவன் முதிர்ச்சியடைந்தவனாய் இருத்தல் வேண்டும். ஒரு மாணவனின் அறிவுத்துறை வாழ்க்கை அவனது சொந்தமொழியின் அடித்தளத்திலேயே அமைக்கப்படல் வேண்டும். அதன் பின்புதான் வேற்று மொழியினைக் கற்கும்படி அவனைப் பணிக்கலாம்.

ஒரே சமயத்தில் இரு மொழிகளில் ஒருபிள்ளை சம தேர்ச்சியடைய முடியாது என பேராசிரியர் லோரிஎன்பவர் வற்புறுத்துகின்றார். அவ்வாறு செய்ய முற்பட்டால் பிள்ளையின் அறிவுத்துறை வளர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் இரண்டுமடங்காக பெருகுவதற்குப் பதில் அரைவாசியாகக் குன்றிவிடும் என அவர் எச்சரிக்கின்றார். சூகாட் என்பவர் இதனை உவமைரீதியாக மிக அழகாக உணர்த்துகின்றார். இரண்டு மொழிகளைப் பேசுபவனை இரண்டு நாண் பூட்டப்பட்ட வில்லுக்கொப்பிட்டால், அந்த இரண்டு நாண்களும் சற்றுத் தளர்ந்திருக்கும் என அவர் கூறுகின்றார். ஓர் இனத்தின் தனித்துவத்திற்கு மொழி ஓர் அறிகுறியாக இருப்பதனால் சிறுபான்மையினரின் மொழி கல்வியின் மூலம் வளர்ச்சியடைய வாய்ப்புக்களை மறுப்பது அம்மொழியினத்தின் பண்பாட்டுச் சொத்தினை அழிப்பதற்கு ஒப்பாகும் என கலாநிதி பிரையன் ஹோம்ஸ் கூறுகின்றார். பண்பாட்டினைப் பேணிவளர்த்து புதுப்பிப்பதற்கு கல்வி ஒரு கருவி என பேரசிரியர் ஜெவ்றீஸ் மொழிந்தார். P.B பிலோஸ் என்பவர் இக்கருத்துக்களை எல்லாம் அழகாகத் தொகுத்துக் கூறுகின்றார். தாய்மொழியினைக் கையாள்வதற்கு பயிற்சியளிப்பது கல்விமுறையினது முதல் அடிப்படையாகும். அதுவே மனிதப்பண்பாட்டின் மிகச் சிறந்த கருவியுமாகும், மொழி சிந்தனையின் வெளிப்பாடுமட்டுமன்று, அது ஒருவரின் சிந்தனையையேபாதிக்க வல்லது என பிளௌவுடன் அறிக்கை வற்புறுத்துவது வியப்பன்று.

தமது பிள்ளைகளுக்கு நன்மை பயக்கக்கூடியது எது என்பதை பெற்றோரே நன்கறிவர் என்று சிலர் வாதிடலாம். ஆனால் இது உண்மையன்று. எத்தனையோவற்றை பெற்றோர் செய்ய முனைந்தால் அரசாங்கம் தலையிட்டு அவர்கள் மீது வழக்குத்தொடரும். ஆதலால் பெற்றோர் உரிமைகள் சார்புத்தன்மையுடையனவே எத்தனையோ நிலைகளில் தமது பிள்ளைகளைப் பொறுத்தவரை செம்மையானவற்றைச் செய்ய பெற்றோருக்கு அறிவு புகட்ட வேண்டியிருக்கிறது. சில விடயங்களிலே பிள்ளையினதும் நாட்டினதும் நலன் கருதி அரசாங்கம் பெற்றோர்களைக்கட்டாயப்படுத்த வேண்டியிருக்கிறது. இது தவிர்க்கமுடியாததும் கூட. பிள்ளையின்மீது அந்நிய போதனாமொழியைத் திணிப்பது அதனை அதன்பண்பாட்டு சமூகப்பின்னணியிலிருந்து பிடுங்கியெடுத்து அதற்கு வாழ்க்கையில்பெருத்த தடைகளைப் போடுவதாகும். அவ்வாறு செய்வது அடிப்படை மனித உரிமையை பங்கப்படுத்துவதாகும். இதனால் பிள்ளையின் வளர்ச்சி மட்டுமல்ல, நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது என்பதனை நாம் மறத்தலாகின்றது.



சோவியத் இளம் மாணவிகள் இசைக் கருவியுடன் சங்கமமாகியிருக்கிறார்கள். கஷ்கத்தான் மாகாணத்து இசைக் கல்லூரியில் பயிலும் மாணவிகள் இவர்கள் சோவியத்தில் 3,200 இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு பயிலும் மாணவர் தொகை 50,000 ஆயிரம்.

## நாவலர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு 'கடவுள் இல்லை'சிலை தாபிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. 'கடவுள் உண்டு' என்ற நாவலருக்கு இனி அங்கே இடமில்லை ஆதலால் நூதனம் இல்லை. இங்கே, அறிந்தோ அறியாமலோ எஞ்சிக்கிடந்ததொரு புண்ணிய விசேடத்தினாலே போலும் நாவலர் பற்றி ஒரு விழிப்புணர்ச்சி உண்டாகியிருக்கின்றது.

இந்நிலையில் கால அடைவு பற்றி விஷயங்களைக்கிரமஞ் செய்து நீதியும் ஆன்மீகப் போக்கும் புலப்பட நாவலர் சரித்திரத்தைச் சுருக்கி அமைத்திருக்கின்றார் பண்டிதை பாக்கியம். இச்சுருக்கம் இளம் மாணவர்களுக்கு அருமந்த விருந்து. வளர்ந்தவர்களுக்கு சிந்தனைக்கருவூலம் சரித்திரத்திலேயே ஆராய்ச்சியும் கலந்திருக்கின்றது. ஆராய்ச்சிமுகமான சரித்திரம் இச்சரித்திரம்

நாவலர் எழுத்துக்களிலும் அவர்சரித்திரங்களிலும் வேண்டியவற்றை முகந்து கொண்டதொருதொகுப்பே இச்சரித்திர ஆராய்ச்சி. ஆயினும், ஆராய்ச்சித் தொடக்கத்தில் 'சரித்திரம்', 'யாழ்ப்பாணம்' என்ற தலையங்கத்தில் வருபவை முறையே, நாவலர் சரித்திரம் வெறும் வித்துவ சரித்திர வரிசையைச் சேர்ந்ததன்று, அது வைதீக சைவ சரித்திரம்; 'அப்படியொரு சரித்திரம் வருவதற்குபாத்திரமாயிருந்தது 'யாழ்ப்பாணம்' என்ற கருத்துக்களைத்தந்துசிந்தனையைத் தூண்டுகின்றன 'நோக்கும் நிலைக் களமும்', 'நிலைக்களசுத்தி', 'வேகத் தணிவு' என்ற தலைப்புகளில் வருபவை, நாவலர் ஜனநாயக உலகத்தைச் சேராத ஒரேயொரு வைதிக சைவராயிருந்தார் என்பதைத் தொட்டுக் காட்டுவனவாய் ஆராய்ச்சியின் தகுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

29-ம் பிரிவில், சேர் முத்துக்குமாரசுவாமியின் கூற்றை அமைந்திருப்பது, நாவலரது புறக்கணிக்க முடியாத திறமையை ஜனநாயக உலகத்துக்கு எடுத்துக்காட்டுவதாயிருக்கின்றது.

தலையங்கங்கள் ஒவ்வொன்றிலும் வருபவை, ஒவ்வோர் நுண் கருத்துக்களைத் தந்துகொண்டேயிருக்கின்றன. அன்றி, நமக்கு நல்ல பாடங்கள் கற்பித்துக் கொண்டுமிருக்கின்றன

'திட்டங்கள்', 'தமிழ்ப் புலமை', 'சைவசமயி'' அநாசாரம்', 'திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாதகுற்றங்கள்' என்பவைகள் தனித்தனி அச்சிட்டு, ஆலயம், வித்தியாலயம், பொதுநிலையம் என்பவைகளில் உபயோகிக்கும் முறையில் உபயோகிக்க வேண்டியவைகள்.

'நாவலரைப்போல முன்னும் இப்பொழுதும் வித்துவான்களில்லை' என்று தொடங்குகின்றது.

சென்னை ஹைகோர்ட் நீதிபதி சதாசிவையர் அவர்களின் தீர்ப்பு. இது தமிழ் நாட்டுக் கடற்கரையிற் படித்து விளக்கஞ்செய்ய வேண்டியதொரு தீர்ப்பு. இத்தீர்ப்புப் பண்டிதை பாக்கியம் அவர்களின் ஆராய்ச்சிக்கு ஒப்பற்றதொரு சிரோரத்தினமாய்ப் பிரகாசிக்கின்றது.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி. சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர், எழுத்தாளர்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யை உயர்வுமிக்க மொழியையே நமது சில்லையூர் தன தடிமையெனும் போது எனக்கு என்னவோபோலிருந்தது. நானும் பிற எழுத்தாளர்களும் விளக்கேற்றிக் கும்பிடும் சரஸ்வதித் தாயைத் தன் அடிமையாக வைத்துப்பாடிய முதற்பாவலன் தாம்தான் என்றார். 'கம்பன் கூட இப்படிப் பாடியதில்லையே''- என்மன உறுத்தலை நான் அப்படியே வெளிக்காட்டி விட்டேன். மிக அடக்கமாகவே, ''உம்மைப்போன்றவர்களால் தமிழ் விரைவில் சாகும்'' என்று சொன்னேன். அதற்கவர் மொழி பற்றிச் சொன்னவை வருமாறு:

''நான் மொழியை ஆள்பவன், பேனவை எடுத்ததும் சொற்கள் நானே நீயோ வென்று என்முன் நிற்கின்றன. என்சிந்தனையை வெளிப்படுத்தநான் பயன்படுத்தப்பாவிக்கும் ஒரு கருவி தான் மொழி.

''நான் ஓர் உலகப்பிரஜை. குறுகிய உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதவன்: ஆபிரிக்க நாட்டிலே மிகச் சொற்பப்பேரால் வழங்கப்படும் மிகச்சிறிய மொழியான பேருமொழி உலக மொழியானால் நிச்சயம் அதற்காக மகிழ்ச்சியும் பெருமையும் அடைவேன்.

''தமிழையாரும் அழித்து விடமுடியாது. ஒருக்காலும் முடியாது. தமிழ்மொழியை தமிழ்மக்கள் நினைத்தால் மட்டுந்தான் அழிக்கமுடியும். 'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்னும் தமிழிலுள்ள மூத்தோர்வார்த்தையை நாம் சிந்திக்கவேண்டும்.''

அவர் பேச்சுப்பற்றி நான் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது பின்னும் அவர் சொன்னது என் சிந்தனையைக் கலைப்பதாயிருந்தது. தமிழ் என்றும் தமிழன் என்றும் வெறுமனே குளறிக்கூத்தாடுவதில் அர்த்தமில்லையென்ற சில்லையூர், உலகில் எந்த ஒரு சாகியத்திற்கும் அவரவர் மொழியில் பிறந்த இலக்கியங்களே அவர்தம் வரலாற்றைக் கூறவல்லன வென்றும், தமிழன் எப்போது தோன்றினன் என்னும் ஆராய்ச்சியினால் எவ்விதபயனுமில்லையென்றும் எவ்வாறு வாழ்ந்தான் என்பதே முக்கியமென்றும் சொன்னார். தமிழன் செய்து வைத்த திருக்குறள் ஆயிரமாயிரம் ஆண்டுகளின் முன் தமிழன் எத்தகைய பண்புடன் வாழ்ந்தான் என்பதற்குச்சான்று கூறும் என்று அவர் சொன்னார். நிலத்துக் கடியில் தோண்டியெடுக்கும் பொருட்கள் இதுவரை சரியானவரலாற்றை எவருக்கும் தரவில்லையென்று சில்லையூர் சொன்னார்.

பல ஆண்டுகளின் முன்னால் செல்வராசன் என்ற இளைஞன் 'தமிழ்'தமிழ்' என்று கூச்சல்போட்டதை நானறியாதவனல்ல. அவரது தமிழ் முழக்கம் அப்போது தினசரியாக வெளிவந்துகொண்டிருந்த 'சுதந்திரன்' இதழில் எட்டுக்கலம் தலைப்பில் குமுறும். சந்தர்ப்பமறிந்து கிண்டல் பாணியில் 'நைஸாக' இந்தச் சங்கதியை நான் வெளிக்காட்டினேன். அதற்கு அவர் ஒன்பது மாதங்கள் மட்டுமே தாம்அவ்விதகுறுகியஉணர்ச்சிக்கு வயப்பட்டிருந்ததாகவும் ஒன்பது மாதங்களில் ஏற்பட்ட மாற்றம் தமது தீவிர சிந்தனைவளர்ச்சியைக் காட்டுவதாகுமென்றும் சொன்னதை, ஆரம்பகாலத்திலிருந்து சில்லையூரின் வளர்ச்சியை அவதானித்தவர்களுக்கு மட்டுமே உணரமுடியும்.

அவரது வளர்ச்சி அதிகமானதுதான், அவர் கை வைத்த எல்லாத் துறைகளுமே அவருக்கு வெற்றிதான். எல்லாத்துறைகளிலுமே தனித்துவத்துடன் மிளிரும் சில்லையூர் தமது ஆக்கங்களைப் பயன்படுத்த எல்லா சாதனங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

## சினிமாவில்

பத்திரிகையையும் மேடையையும் வானொலியையும் தமது சிந்தனையைப்பிரதிபலிக்க உபயோகித்த சில்லையூர் இப்போது சினிமாவிலும் நுழைந்துகொண்டுள்ளார். தற்போது ஒருபடத்திற்குக் கதை, வசனம், பாடல்கள் எழுதிக்கொண்டிருக்கிறாராம். ஏற்கனவே 'நிர்மலா' படத்திற்குப் பாடல்கள் எழுதியுள்ளார். இப்படத்தில் வரும் 'ஆடவா கண்மணி' என்ற பாடலை இந்திய நேயர்களின்வேண்டுதலுக்கிணங்கி இலங்கை வானொலி அடிக்கடி ஒலி பரப்பிவருவது யாவரும் அறிந்ததே.

நம்நாட்டுத் திரைப் படங்கள் பற்றி அவரிடம் கேட்டேன். இதுபற்றி எத்தனை தூரம் அவர் சிந்தித்துள்ளார் என்பது அவர் பேச்சினின்றும் தெரிந்துகொண்டேன். எமது நாட்டின்திரைக்கலைவளர்ச்சி பற்றி குறிப்பாகத் தமிழ் சினிமாபற்றி அவர் பேசியது என் மனத்தை வெகுவாக உருக்குவதாயிருந்தது.

திரைப்படத் தயாரிப்புக்குப் பல லட்சம் ரூபாசெலவு செய்வது அவசியமென்றும், இது தவிர்க்கமுடியாதென்றும் சொன்ன சில்லையூர், இந்தியப்படாதிபதிகள் பெருவாரி பணம் செலவிட்டுப் படங்களைத் தயாரிக்கிறார்களென்றார். சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் தயாரிக்கப்படும் ஓர் இந்தியப் படத்தின் முப்பது பிரதிகளை ஒவ்வொரு பிரதியும் லட்சம் ரூபாவிற்குப் பல ஊர்களுக்கும் நாடுகளுக்கும் விற்பதன்மூலம் கைமேலேயே பத்து லட்சம் ரூபா லாபம் கிடைப்பதாகச் சொன்ன அவர் இந்தியாவும் எமது தயாரிப்புகளை வாங்கிக்கொள்ளச் சம்மதிக்கும் பட்சத்தில்தான் ஈழத்திலும் திரைக்கலையும் முன்னேறித் தயாரிப்பாளர்களும் முன்னேற முடியுமென்றார். ஆனால் இலங்கையில் லட்சம் ரூபா செலவில் தயாரிக்கும் ஒரு படத்தின் மூலம், ஒரு தயாரிப்பாளர் லாபத்தையே எதிர்பார்க்காமல், தயாரிப்பில் தாம் முடக்கிய அதே தொகையைத் திரும்பவும் பெற்றுக் கொள்ள எத்தனை வருடகாலமாகுமோ என அவர் சொன்னபோது, 'ஐயோ பாவம் ஈழத்துத் திரைப் படத் தயாரிப்பாளர்' என [illegible] நெஞ்சத்திலிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

### மிதக்கும் கோடைக் குடில்

லெனின்கிராடு நிறுவனம் ஒன்றில் இளைஞர்களின் புனைவரவு அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மிதக்கும் கோடைக் குடில் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இந்தக்குடில் மணிக்கு 5—7 கிலோமீட்டர் வேகத்தில் ஆற்றிலோ ஏரியிலோ அசைந்து செல்கிறது. உண்மையில் இது ஒரு மோட்டார்ப் படகு வீடு ஆகும். இதன் எஞ்சினும் சுக்கானும் கொண்ட அமைப்பில் இரண்டு மோட்டார்கள் உள்ளன. இந்தக் கோடைக் குடில் ஸ்டோரேஜ் பாட்டரி, மின்விசை ஜெனரேட்டர் காற்று டர்பைன் ஆகியவற்றைக் கொண்ட ஒரு சிறிய மின்விசை அமைப்பு உள்ளது.

இந்தக் கோடைக்குடில் பாக்டரி சுகாதாரக் கேந்திரங்களிலும் போர்டிங் இல்லங்களிலும், ஓய்வு இல்லங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

# ''பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் விருந்துண்ணலாம்''

நம் நாட்டில் மிளகை உபயோகிக்காதவர்கள் அபூர்வம், எந்தநோயாளிக்கும் மிளகுரசத்துடன்தான் முதலில் சாதம் போடுவார்கள். ரசம், சாம்பார், கறிவகைகளில் தினசரி மிளகுசேர்த்தே உண்கிறோம். மிளகு சேர்த்த உணவு வகைகளை உண்பதால் நாவுக்குச் சுவையாய் இருப்பதோடுமட்டுமல்லாமல் சீரண சக்தியைக் கொடுத்து மலச்சிக்கலையும் போக்குகிறது.

'பதார்த்த குண சிந்தாமணி' 'பதார்த்த பஞ்சகுண மந்திரி' 'பதார்த்த குண விளக்கம்' 'பதார்த்த குண சார சங்கிரகம்' ஆகிய நூல்கள் மிளகின் உபயோகத்தைப்பற்றி விளக்கமாகவும், செய்யுள் வடிவில் அழகாகவும் கூறுகின்றன. அவற்றைப் படித்து ஒவ்வொருவரும் பயனடையவேண்டும்.

மிளகு சடுரஸம், உஷ்ண வீர்யம், லகு-ரூஷ குணங்கள், கடுவிபாகம் இவைகளை உடையது. கபம், வாயு, கிருமி, இருதய ரோகம், வாந்திபேதி, மேகம், விசமசுரம், கிரகணி, குன்மம், பாண்டு, மூலம், காக்கைவலி, சன்னி, காசம், பக்கவாதம், பகரோகம், வாதரக்தம் கழுத்துரோகம். காதுரோகம், காமாலை, மந்தம், உஷ்ணவாயு, மலப்போக்கு, பற்பலசுரம் ஆகிய வியாதிகள் மிளகினால் குணமாகும். பித்தத்தை அதிகரிக்கச் செய்து. தீபன-பாசனத்தை விருத்தி செய்து உணவை ஒழுங்காகச் சீரணிக்கச் செய்கிறது. ஈரலுக்கும், இரைப்பைக்கும் வலிவைக் கொடுக்கும்: கண்ணொளியுண்டாகும். பல்நோயை நீக்கும். கண்ரோகங்கள், சிரரோகங்கள், பஞ்சபாஷாணங்கள், விஷம் கலந்த உணவுகள், கடிவிஷங்கள் ஆகியவற்றை முறிக்கவும் மிளகு உபயோகிக்கப்படுகிறது.

உலர்ந்த மிளகின் மேல் தோல் நீக்கப்பட்ட பின்பு அது வெள்ளை மிளகு என்று பெயர் பெறுகிறது. காரமாயும் வர்சனையாயும் இருக்கும் மிளகிலிருக்கிற சத்துக்கு ''பைபரீன்'' என்று பெயர். ஒளடதங்களுக்கு இருக்கிற துற்குணத்தை மிளகு மாற்றிவிடும். மரமேகத்துக்கு மிளகைக் கொடுக்கலாம் களிம்பாகச் செய்து எச்சிற்றழிம்பிற்குத் தடவினால் குணமாகும். மிளகு, பெருங்காயம், அபின் இவைகளைச் சேர்த்துச் செய்யும் மிளகுமாத்திரையால் வாந்திபேதி, அஜீரணம் ஆகியவை குணமாகும். ஒரு மிளகைத் தயிர் விட்டரைத்து கண்ணுக்கு மைபோல் இட்டால் மாலைக்கண் குணமாகும். மிளகுக் கஷாயத்தால் சாதாரண சுரம் தீரும். மிளகுப் பொடி, தேன், நெய், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து உட்கொண்டால் பலவகை இருமல் குறையும். சாப்பிடும்போது முதற் கவளத்தில் நெய்யில் வறுத்த ஐந்து மிளகை வைத்துச் சாப்பிட்டால் அஜீரணம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி தீரும். ஒன்பது மிளகையும் ஒன்பது இலந்தை இலைகளையும் சேர்த்து அரைத்த விழுதை பெண்கள் தம் மாதவிடாய்க் காலத்தில் மூன்று நாட்களும் காலை மாலை உட்கொண்டால் வயிற்றுநோய் தீரும். அச்சமயத்தில் உப்பில்லாப் பத்தியம் இருக்கவேண்டும். பாற்சாதம் சாப்பிடலாம். மிளகும் நாயுருவி இலையும் அரைத்த விழுதைத் தயிரில் கலந்து உட்கொண்டால் மர்ம உறுப்பு நோய்கள் நீங்கும். மிளகும் வேப்பங் கொழுந்தும் சமன் எடுத்து அரைத்து சுண்டைக்காய அளவு மாத்திரை செய்து வைத்துக்கொண்டு காலை மாலை ஒவ்வொரு மாத்திரை வீதம் எட்டு நாட்கள் எருமைத் தயிரில் சேர்த்து உட்கொண்டால் பெரும்பாடு குணமாகும். பத்து மிளகைப் பொடிசெய்து ஒரு அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றையும், கரிசலாங்கண்ணிச் சாற்றையும் கலந்து உட்கொண்டால் மலட்டுத் தன்மை நீங்கும். மிளகையும் வெற்றிலையையும் அரைத்துக் கொடுத்தால் வயிற்றில் இறந்த சிசு வெளியேறும். மிளகு, இஞ்சி, திற்பலி. நாககேசரம் இவற்றை வகைக்கு சமன் இடித்து சூரணமாக்கி பசு நெய்யில் கலந்து அடுப்பில் வைத்து கிளறி பாக்களவு பிரமாணம் பதினைந்து நாட்கள் உட்கொள்ள மலடு நீங்கிக் குழந்தை பெறுவர். மிளகையும் மூக்கரட்டையையும் வேரோடு சேர்த்து அரைத்து மூன்று நாட்கள் காலையில் பாலில் கொடுத்தால் ஊதுகாமாலை மாறும். மிளகும் உப்பும் சமன் எடுத்து இடித்து மாவாக்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டுக் கலந்து உலர்த்தி, இக்கலவையில் சிறிது எடுத்து எலுமிச்சம்பழச் சாறு விட்டுக் குழைத்து பூச்சி வெட்டு உள்ள இடங்களில் அழுத்தித் தேய்த்தால் குணமாகும், உதிர்ந்த முடி முளைக்கும். தொய்வு நோயாளிகள் திணறலுக்கு பழுத்த வாழைப்பழத்தை அனலில் வாட்டி மிளகுதூளில் தொட்டுச் சாப்பிட்டால் உடனே நிற்கும்.

சுக்கு, மிளகு, திற்பலி சேர்ந்த கூட்டுச்சரக்கு திரிகடுகு எனப்படுகிறது. இம்மூன்றையும் சேர்த்து திரிகடுகுச் சூரணம் செய்யலாம். மிளகு கிருமிரோகங்களுக்கு மிகவும் சிறந்தது. கிருமிரோகத்திற்கு மிளகு சேராத மருந்துகள் இல்லை என்றே கூறலாம். மிளகுக் குளிகை, கிருமிக்குளிகை, கிருமிநாசமாத்திரை, கறணிகவாதக்குளிகை ஆதியன கிருமிரோகங்களுக்குச் சிறந்த ஔடதங்களாகும். பாலசஞ்சீவி, வெற்றிலைக் கோரோசனை மாத்திரை, கஸ்தூரிமாத்திரை, சின்னச் சிகப்பு, சூரியப்பிரபா, வெங்காயக்குளிகை இப்படி அநேக ஔடதங்களில் மிளகு சேர்க்கப்படுகிறது.

ஒருவருக்கு விடம் தீண்டி விட்டால் உடன் மிளகை நன்றாக மென்று உண்ண வேண்டும். விஷத்தினால் தீண்டப்பட்டவருக்கு உண்ணக் கொடுக்கும் மிளகு உடம்புட் சென்று தனது ரச, குண, வீரிய, விபாக, பிரபாவத்தினால் விஷத்தை முறிக்கிறது. சில வேளைகளில் விடம் கலந்த உணவை உண்ண நேரிட்டால், உடனே மிளகைச் சாப்பிடுவதால் விடம் முறிகிறது. இதை விளக்க எழுந்ததே ''பத்துமிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் விருந்துண்ணலாம்'' என்னும் பழமொழியாகும்.

வைத்தியர்கள் பேதிக்கு மருந்து கொடுக்கும் பொழுது பொதுவாக மிளகு அவித்த நீரில் குடிக்கும்படி கூறுகிறார்கள். அதனால் உடலில் உள்ள நச்சு விஷத்தன்மைகள் தீர்வதோடுமட்டுமல்லாமல் பேதியினால் சில வேளைகளில் உண்டாகும் கெடுதியையும் போக்குகிறது அன்னாசிப் பழம், அவித்த முட்டை ஆகியவற்றை உண்ணும் பொழுது மிளகுதூள் சேர்த்து உண்பது கவனிக்கத் தக்கது. எனவே எல்லா வகையிலும் உதவும் மிளகை நமது அன்றாட வாழ்க்கையில் உபயோகித்துநோயைப் போக்கி நல்வாழ்வு வாழ்வோம்.

— வைத்திய கலாநிதி கே. கே. ஜெயரத்தினம் —
[டி. ஏ. எம்; முதற் பிரிவு]

# கொழும்பு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குச் சிறந்தவழி என்று கூறுகின்றார். தாழ்த்தப்பட்ட மக்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வேலாயுதத்துடன் அவர்களது கரங்கள் மேலோங்குகின்றன. அத்துடன் நாடகமும் முடிவடைகின்றது.

இன்றையகாலகட்டத்தில் மிக முக்கியமான சமூகப் பிரச்னையை மையமாக வைத்துக் கலை, இலக்கியங்கள் சமுதாய ஈடேற்றத்திற்காகவும்சமூகப்பிரச்னையைச் சித்தரிப்பனவாகவும் அமையவேண்டும் என்ற கொள்கைக்கு இணங்க நெல்லியடி இளைஞர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்ட இந்த நாடகத்தை சுமார் இரண்டாயிரத்திற்கும்மேற்பட்ட மக்கள் சரஸ்வதிமண்டபத்தில் இலவசமாகப் பார்த்து மகிழ்ந்தார்கள். தமிழினத்தின் மிகமுக்கியமான பிரச்னை மேடைக்கு வந்திருக்கிறது. இனிமேல் இது தீர்வதற்கும்வழி பிறக்கத்தானே வேண்டும் என்ற எண்ணம் இவர்கள் மனத்தில் மேலோங்கி நின்றதை உணரமுடிந்தது.

நடிகர்களைப் பொறுத்தவரையில் அனைவரும் தமது பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாகச் செய்தார்கள். கந்தனாக வந்த மா. சிவபாதம், நாரதராக வந்த கு. சிவராசா தர்மகர்த்தாவாக வந்த நா. சிவராசா ஆகியோர் குறிப்பிடத் தகுந்த வகையில் பாடி நடித்தார்கள். வேஷப் பொருத்தம் நன்றாக இருந்த போதிலும் இன்னும் கொஞ்சம் கூடுதலாகச் செய்திருக்கலாம். தேவலோகக்காட்சி, பூலோகத்தில் ஆலயக்கோபுரம் ஆகியன இயல்பாகவும் ஆடம்பரமற்ற சிக்கனமான ஆனால் பார்க்கத்தெளிவான காட்சியமைப்பாகவும்இருந்தன.

— க. பேரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ராஜா (யாழ்ப்பாணம்) — சரஸ்வதி (திருமலை)

10-30, 2-30, 6-30, 10-00 மணி — 6-15, 9-30 மணி

**என்.எஸ் கிருஷ்ணன், ரி.ஏ.மதுரம்**

ஜெமினி கணேசன், டெய்ஷி ராணி

மற்றும் பலர் நடித்த



# 67-ல்

# என்.எஸ். கிருஷ்ணன்

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.

---

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த

## இரு கோடுகள்

---

## வெஸ்லி சினிமா மானிப்பாய்

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி

சத்தியன், ஷீலா, மது நடித்த

# செம்மீன்

(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

---

இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

## வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# [illegible]ணைவன்

[illegible] வசனம் — சங்கீதம்
[illegible]லமுருகன் — K.V. மகாதேவன்
[illegible]ண்டோ M. M. A. சின்னப்பதேவர்

---

# அறிவித்தல்

## நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா ஒழுங்குகள்

(7-8-70 முதல் 1-9-70 வரை)

13 - 7 - 70 - ஆம் திகதி பொலிஸ் அதிகாரிகள், கோவில் முகாமையாளர், மாநகர முதல்வர், உத்தியோகத்தர் கொண்ட மாநாடு ஒன்றில் கீழ்வரும் தீர்மானங்களை மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 77-ம் பிரிவின் கீழ் அமுல்செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கிறேன்.

1. கோவிலின் நான்கு வீதிகளிலும் தடைகள் (பரியர்) போடப்பட்டுள்ள தெருக்களில் தற்காலிக கொட்டில்கள், பாதையில் ஊடுருவல் முதலியன அனுமதிக்கப்படமாட்டாது.
2. தண்ணீர்ப்பந்தல்களில் எவ்வித விளம்பரங்களும் அனுமதிக்கப்படமாட்டாது.
3. கோவிலின் நான்கு வீதிகளிலும் ஐஸ்கிறீம் கடைகளோ அல்லது மற்றும் பொருட்களை கொண்டுதிரிந்து விற்பனவு செய்வதற்கோ அனுமதிக்கப்படமாட்டாது.
4. கோவிலின் நான்கு வீதிகளிலும் ஏற்கனவே நிரந்தரமாக இருப்பனவற்றைத் தவிர புதிய தேனீர்க் கடைகளும் போசன சாலைகளும் மற்றும் அருவருப்பும் ஆபத்துமான வியாபாரங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.
5. கடலை விற்பனவு செய்பவர்கள் எல்லைவேலியிலிருந்து 3 அடி காணிக்குள் உட்பக்கமாகவே வைத்து விற்பனைசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
6. கரும்பு வியாபாரிகள் சந்தைகளில் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
7. தெருவோரங்களையும் நடைபாதைகளையும் தடைசெய்யும்வகையில் விற்பனைப் பொருட்களை வைப்பதோ அல்லது விற்பனை செய்வதோ தடைசெய்யப்பட்டுள்ளது.
8. கடைகளில் விற்பனைப் பொருட்களைக் காட்சிக்கு வைப்பவர்கள், தமது கடைகளின் நிலைகளுக்கு உள்ளேயே வைத்தல் வேண்டும். நடைபாதையிலோ அல்லது கடைகளின் விருந்தைகளிலோ விற்பனவுப் பொருட்களை வைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

மேற்படி நிபந்தனைகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகராட்சி மன்ற ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29-7-70. 2389

---

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீரா மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்ஷன்: W. M. S. தம்பு

---

## தேவை

பெண் காசாளர் (கேஷியர்) ஒருவரும், பெண் கன்வசர்களும், தையல்வேலையில் ஓரளவு அனுபவமுள்ள பெண்களும் தேவை. காசாளர் ரூபா 500/ பிணைப்பணம் செலுத்தக்கூடியவராயிருக்க வேண்டும். நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும்.

மனேஜர் M.S.T.
95/3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

---

## விற்பனைக்கு

ஓவியர்களுக்கும், பெயின்ரிங் வேலைசெய்பவர்களுக்கும், சேலை பிறின்ரிங் வேலை செய்பவர்களுக்கும் உகந்த ஸ்பிறே பெயின்ரிங் கருவி!

எயர் கொம்பிரஸ்சர் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குவது, சுலபமாக எங்கும் கொண்டு சென்று வேலைசெய்யக்கூடியது!

Burgess Electric Spray Painting Equipment (British make)

கைவசம் இருப்பில் சொற்பமுண்டு. உங்கள் தேவைக்கு முந்திக்கொள்ளுங்கள்.

Burgess Engraving Machine என்கிறேவிங் மெசின் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு:-

K. S. பாலசிங்கம், 90, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை தபால் கந்தோருக்கு முன்பாக, யாழ்ப்பாணம். 2384

---

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:-
கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்திற்குச்சமீபமாகவும்பஸ் போக்குவரத்து றெயில்வே ஸ்டேசன், தொழில்நுட்ப கல்லூரி முதலியனவும் சமீபமாகவுள்ள இடம். பரப்பு 4 1/2 விபரங்களுக்கு ந. தியாகராஜ ஐயர், பூநாறி மரத்தடி, K. K. S றோட், கொக்குவில் 3032

செம்மணி றோட்டருகில் 50 பரப்பு நெல்வயல் விற்கப்படும். திருநெல்வேலி, சிவன்கோவில் றோட்டு, 36-ம் வீட்டில் விசாரிக்கவும் 3019

### கல்வி

சாவகச்சேரியில் தமிழ், ஆங்கில தட்டெழுத்து (Type-writting) பயிலவிரும்பும் ஆண் பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளவும். சபா. நாகராஜன், இல. 70, கோர்ட்வியூ சாவகச்சேரி எம்மிடம் சகலவிதமான விண்ணப்பப்படிவங்களும் பெற்றுக்கொள்ளலாம். 3027

### வாடகைக்கு

தளபாடத்துடன் கூடிய கடையொன்று கே.கே.எஸ். வீதியில் வாடகைக்கு உண்டு. விபரத்துக்கு: எம். கணபதிப்பிள்ளை, 379, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3031

### தேவை

குருக்கள்:
"சைவ அனுஸ்டானமும் எல்லாக் கிரிகைகளும் தெரிந்த பிராமணக்குருக்கள் ஒருவர் உதவி ஐயர் ஒருவருடன் தேவை. குடும்பஸ்தராயிருத்தல் வேண்டும். முன்னைய தேவஸ்தான நற்சாட்சிப்பத்திரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு 10-8 70க்கு முன் விண்ணப்பிக்கவும். போக்குவரத்துச் செலவுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தலைவர், ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை." 3030

### இலங்கைப் படகுகள்

கோட்டை, சனி
இலங்கையில் செய்யப்பட்ட முப்பது படகுகளை அமெரிக்க படகுச் சங்கம் 30 லட்சம் ரூபாவுக்கு வாங்குகிறது.

இன்று இப்படகுகள் ஏற்றுமதியாகும். இவை தனியார் துறைகளினால் குறைந்த செலவில் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45-P.M.
Poya, Pre-poya 4 Shows
Rod Taylor, Claudia Cardinale
in
THE HELL WITH HEROES
(Adults only)

---

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி,
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா
நடித்த

## சிரித்த முகம்

---

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m.
Poya-Prepoya 10-30 a.m.
Graig Stevens
in
GUNN... Number One
(Strictly for adults)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்

தீங்கிழைத்தவரிடத்திலும் அன்புகாட்டல் மனிதன் ஒருவனுக்குத்தான் சாத்தியமாகும் ஒருவன் நமக்குத் தீங்கிழைக்கும் பொழுது, அவன்நமக்குச் சகோதரன்தான் என்றும், அறியாமையால்தான் அவன் அவ்விதம் செய்கிருன் என்றும், அவனும் நாமும் வெகுசீக்கிரத்தில் இறந்து ஒழிவோம்என்றும், அவன் தீங்கிழைத்தும் நம் ஆன்மாவிற்கு யாதொரு பங்கமும் ஏற்படவில்லையென்றும் நாம் கருதினுல், உடனே அவன்பால் அன்பு பிறக்கும்.

—மாக்கஸ்ஒளரேலியஸ்

ஃ

வெறுப்பை அன்பே முறியடிக்கவேண்டும். ஏனென்ருல், வெறுப்பு தன்னைத்தானே முறியடித்துக்கொள்ள முடியாது.

— சுவாமி விவேகானந்தர்

ஃ

கடவுளும் சமயமும் இல்லாவிட்டால், மனிதனின் வாழ்க்கை பயனற்றதாகும். வாழ்க்கையில்எவ்வித உயர்ந்த நோக்கமும் இல்லாமல் போகும்.

— டில்லோட்ஸன்




## மேலதிக ஆசிரியருக்கும் ஆரம்பகால முதல்சம்பளம்

பருத்தித்துறை, வெள்ளி

வடபகுதியிலுள்ள தமிழ்-சிங்கள பௌத்தபாடசாலைகளிலும் ஆரம்பகாலம் தொடக்கம் கடமையாற்றிய 36 மேலதிக ஆசிரியருக்கும் ஆரம்பகாலம் தொடக்கம் சம்பளம் வழங்கவும் அவர்களை நிரந்தர ஆசிரியராக ஏற்றுக்கொள்ளவும் கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாம்.

அண்மையில் நியமன அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில தம்மைப் பேட்டிகண்ட ஆசிரியர் குழுவுக்குக் கல்வியமைச்சர் திரு. பதியுத்தின் மகமூத் இவ்வுறுதியளித்தார் என்று தூதுக்குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். இப் பாடசாலைகளை உடனடியாக மகாவித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தவும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் செய்துவைக்கவும் தகைமைபெற்ற ஆசிரியர்களை வழங்கவும் கல்வியமைச்சுத் தீர்மானிந்துள்ளதாகவும் தெரிகிறது.

## குழந்தைகளுக்கு வயிற்ரேட்ட நோய்

புலோலி. வெள்ளி

வடமராட்சியில் உள்ள மந்திகை ஆஸ்பத்திரியில் குழந்தைப்பிள்ளை வயிற்ரேட்ட நோய் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கிறது.

ஆஸ்பத்திரியிலுள்ள குழந்தைப்பிள்ளை வார்ட்டில் அநேகமான குழந்தைகளுக்கு வயிற்ரேட்டநோய் இருக்க டாக்டர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த புதுவித நோயால் அநேகமான சிறுவர்கள் வழக்கமான சாப்பாட்டை விரும்பி உண்ண மறுக்கிருர்களாம். அடிக்கடி சோர்வுற்று மயங்குகிருர்களென்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். இந்நோயால் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஈழநாடு

சாதாரண வருடம் ஆடி மாதம்

16-ந் திகதி [1-8-70]

## ஒரு நல்ல அனுபவம்

நம்பிக்கையால் பெரும்பாலான பிணிகளைத் தீர்க்க முடியுமென்று சென்னை வைத்தியக் கல்லூரி பேராசிரியரும், சென்னை அரசாங்க பெரிய ஆஸ்பத்திரி வைத்தியருமான டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் வைத்தீஸ்வரன் கோயில் கும்பாபிஷேக மலரிலே தமது சில நல்ல அனுபவங்களைத் தெரிவித்திருக்கிருர்கள்

தெய்வ நம்பிக்கையால் தீராத பிணியும் தீரலாமென்று ''துணைவன்'' எனும் ஒரு சினிமாப்படம் காட்டுகிறது என்ருலும் அது வெறும் கட்டுக்கதையென்றும், விஞ்ஞானம் அதை ஒப்பமுடியாதென்றும் பகுத்தறிவுவாதிகள் சொல்லலாம். ஆனுல் சென்னை வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த ஓர் அனுபவ மிக்க டாக்டர், தமது வாழ்க்கை அனுபவத்தில் கண்டதைக் கூறுகையில், அதை அவ்வளவு சுலபமாகப் புறக்கணித்துவிட முடியாது'

''31 வருடங்களாக நான் வைத்தியத் தொழில் புரிந்துவருகிறேன். பல்லாயிரக்கணக்கான நோயாளரை ஆஸ்பத்திரிக்கு உள்ளேயும் வெளியேயும் பார்த்திருக்கிறேன். ஒரு பிரமுகர் ஒரு புதுவிதமான நோயுடன் வந்தார். விஞ்ஞான அறிவுக்கு எட்டியவரை பல சோதனைகளும் சிகிச்சைகளும் செய்தும், பயன் எதுவுமில்லை. வேறு வழி எதுவும் இல்லாத நிலையில், அவர் கடைசி ''அப்பீல் நீதிமன்ற''த்துக்குச் செல்வதெனத் தீர்மானித்தார். திருத்தணி கோயிலுக்குச் சென்று முருகப் பெருமானிடம் முறையிட்டார். வழியும் துலங்கிற்று. திரும்பிய நான்கு நாட்களுக்குள் அவரது நோயும் பூரணமாகக் குணமடைந்தது.'' என்று அந்த பெரிய டாக்டர் கூறி நம்பிக்கையால், எவ்விதம் பலருக்குப் பிணி தீர்ந்துள்ளதென்பதை அக்கட்டுரையில் விளக்கியுள்ளார். (இதை அடுத்த 'ஈழநாடு' வாரமலரில் வெளியிடுகிருேம்.)

பிறர் கூறுவதாலோ, புத்தகங்களைப் படிப்பதாலோ மட்டும் அந்த நம்பிக்கை ஏற்பட்டுவிடாது. ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்குமில்லை. அவரவர்களது வாழ்க்கை அனுபவத்தில் கண்டவர்களுக்கே இவ்வித நம்பிக்கை ஏற்பட முடியும். அந்த நிலை ஏற்படும்வரை ''கடவுள் இல்லை'' என்று யாரும் உறுதியாகக் கூறுவதும் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களைப் பரிகசிப்பதும் சரியாகுமா?

# நீதிமன்றத்தை ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவமதித்தார்

## இந்திய சுப்ரீம்கோர்ட் ஊர்ஜிதம்

புதுடில்லி, ஜுலை 31

கேரளத்தின் முன்னுள் முதலமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிபாட் நீதிமன்றத்தை அவமதித்தார்என்று கேரள உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் ஊர்ஜிதம் செய்திருக்கிறது. ஆனுல் உயர்நீதிமன்றம் விதித்த தண்டனையை சுப்ரீம்கோர்ட் குறைத்திருக்கிறது. ஆயிரம் ரூபாய் அபராதத்தை சுப்ரீம்கோர்ட் 50 ரூபாயாகக் குறைத்திருக்கிறது. அபராதம் செலுத்தத் தவறினுல் ஒருவாரம் சாதாரண சிறைவாசம் அனுபவிக்க வேண்டும்.

**15,000 ரூபா கட்டிடம்**

## மந்திரி திறந்துவைப்பார்

புலோலி, வெள்ளி

புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு முன்னைய தேசிய அரசாங்கத்தால் பதினையாயிரம் ரூபா செலவில் வகுப்பு அறைகள் கட்ட ஒதுக்கப்பட்ட கட்டிடம் யாவும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

பூர்த்தியடைந்த புதிய கட்டிடத் திறப்புவிழா அடுத்தமாத முடிவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் கல்விமந்திரி அவர்களால் திறந்துவைக்கப்படுமென மேற்படி பாடசாலை அதிபர் திரு ரி. கந்தசாமி ஈழநாடு' நிருபரிடம் கூறினுர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### 1—8—70 சனி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பட்ப்பாட்டுக்கள், 8-00 இந்து செய்திக்கடிதங்கள் 8-05 வாத்தியஇசை, 8-15 சொற்பொழிவு- கே வி. கணபதி, 8-30 சைவநீதி.

344 மீ அன்ட் 49 மீ.

காலை 9-00 சிந்தனையும் தத்துவமும், 9-30 முஸ்லிம் சமயக்கல்வி, 10-00 தொழிலாளர்களுக்கு, 10-30 மட்டக்களப்பு மாமாங்கபிள்ளையார் கோவில் திருவிழா அஞ்சல், பகல் 12-30 பக்திப் பாடல்கள், 1-00 குங்குமம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-30 பிறந்ததின வாழ்த்துக்கள்,

இரவு 6-00பாமாலை, 6-30 பஜனை, 7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-35 விவேகசக்கரம், 8-00முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 நிகழ்ச்சித்தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30செய்தி தொகுப்பு.

## உங்கள் இராசி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**கன்னி**

கஷ்டங்கள் பல இருந்தாலும் மனநிம்மதி தோன்ற இடமுண்டு. பண விஷயங்கள் சீரடையும், பலதரப்பட்ட கொள்வனவும் இடம் பெறும், குடும்பத்தில் மங்கலநிகழ்ச்சி உண்டு.

**துலாம்:**

குடும்பத்தில் வாக்குவாதமுண்டு, உலக வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படும், பணவகை முன்னேற்றமடைவதாயில்லை, ஆடம்பரச் செலவு அதிகரிக்கும், உடலில் புண், [illegible]ப்பீடை உண்டு.

**விருச்சிகம்:**

சந்தோஷ சூழ்நிலை காண்பீர், தொழிலிடத்தில் மனநிம்மதி உண்டு, மேலதிக பணவருவாயும் காணலாம், கடல் கடந்த பிரயாணமும் பலருக்கு உண்டு, புத்திரச் சிறப்புண்டு.

**தனு:**

அதிர்ஷ்டத்தின் வாயிலில் நிற்கிறீர்கள், லொத்தர் சீட்டுவகை ஈடுபாடு பெருநிதி கொடுக்கும், தாராள மனப்பான்மையுடன் தருமம் செய்வீர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், வாழ்க்கையில் உன்னத நிலையைக் காணலாம், பெரியார் சினேகமுண்டு, அரசியல் ஈடுபாடும் ஓரளவு உண்டு.

**மகரம்:**

பிறர் சொத்தில் மனநாட்டமுண்டு, புதுமனை அமைக்கும் பாக்கியம் பலர்க்கு உண்டாகும், வியாபார நோக்கமாய் பெரும் பிரயாணம் மேற்கொள்வீர், அவ்வழி மேன்மையுமுண்டு,

**கும்பம்:**

பணவரவு பலவழிகளாலும் உண்டு, ஆடம்பரச் செலவுகளைக் கட்டுப்படுத்துதல் நன்று, காதல் விவகாரங்களில் ஈடுபாடு காண்பீர்.

**மீனம்:**

குருபகவான்சஞ்சாரம் இவ்வாரம் அவ்வளவு திருப்தி தருவதாயில்லை, உத்தியோக வகையில் பங்கம், அரசியல் ஈடுபாடு காண வாய்ப்புண்டு

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரனின் 6-ம் திருவிழாவான இன்று மாலை 5 மணி முதல் 7-30 வரை திரு. பி. ஏ. எஸ். ராஜசேகரன் குழுவினரின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும். சுவாமி புஷ்பப் பல்லக்கில் வீதிவலம் வருவதைத்தொடர்ந்து செல்வி குணபூஷணம் நகாலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

## சந்திரப் பாறைக்கு கீழ் நீர் உண்டு?

ரோம். ஜுலை 31

சந்திரப் பாறைகளின் கீழ் நீர்ச்சுனைகள் இருக்கலாம் என்று இத்தாலிய விஞ்ஞானி ஒருவர் தெரிவிததுள்ளார்.

இவரது ஆராய்ச்சி சந்திரப் பயணத்தை மேற்கொள்பவர்களுக்கு எதிர்காலத்தில் மிகுந்த பயன் தரலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூநகரியில் மாட்டு நோய்

பூநகரி, வெள்ளி

பூநகரிப்பகுதியில் மாட்டு நோய பரவிவருகிறது. கடந் சில தினங்களுக்குள் சுமார் 100மாடுகள்மாண்டுவிட்டன.

அரசாங்க மிருகவைத்தியர்கள் தடுப்பூஊசிபோடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் 350க்கு மேற்பட்ட மாடுகளுக்குஇதுவரை நோய்த்தடை ஊசி ஏற்றப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் விடுமுறை

யாழ்ப்பாணம், சனி

பாடசாலைகளின் 2-வது பருவகால விடுமுறை இம்மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகின்றது. 3-ம் தவணை செப்டம்பர் மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகும்.

(அம். நிரு)

## சபாநாயகர் ராஜினுமா

ஹைதராபாத். ஜுலை, 31

ஆந்திர பிரதேச சட்[illegible] சபையின் சபாநாயகர் [illegible] சுப்பாரெட்டி இன்று [illegible] பதவியை ராஜினு[illegible]தார்

## கலைக்க[illegible]

கல்கத்தி[illegible] மேற்கு வங்[illegible] கலைக்கப்பட்ட[illegible]

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org